காலநிலை
மேகமூட்டம்/ மழை
மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழைக்கான சாத்தியங்கள் உண்டு

48

யாழ். - 30/=
வன்னி - 20/=

# உதயன்

சுடர்: 29 கதிர்: 341 வள்ளுவர் ஆண்டு: 2045 ஐப்பசி 16, ஞாயிறு 02.11.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily



அகப்பட்டார் ரெய்னா
பக்கம் 23

### இடரில் உயிரிழந்தோருக்கு நல்லூரில் இன்று வழிபாடு

யாழ்ப்பாணம்.நவ.2
மண் சரிவினால் பதுளை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகவும், உயிரிழந் தவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் யாழ்.மாவட்ட இந்து அமைப்புக்கள் ஒன்றிணைந்து இன்று நல்லூரில் பிரார்த்தனையை மேற்

❖21 ஆம் பக்கம் பார்க்க

### வாக்காளர் பட்டியல் நாளை வெளியீடு

யாழ்ப்பாணம், நவ. 2
இந்த ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் நாளை வெளியிடப்படவுள்ளது. இதனை இறுதி செய்யும் நடவடிக்கைகள் இன்றுடன் நிறைவுக்கு வரும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖21 ஆம் பக்கம் பார்க்க

### பட்ஜெட்டின் 2ஆம் வாசிப்பு 100 வாக்குகளினால் வெற்றி

யாழ்ப்பாணம், நவ. 2
2015 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பு, 100 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது. இருப்

❖21 ஆம் பக்கம் பார்க்க


# தமிழர் தனித்து வாழ தூண்டுகின்றது அரசு

## நாடாளுமன்றில் சுரேஷ் எம்.பி குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், நவ. 2
இலங்கை அரசினுடைய தொடர்ச்சியான நடவடிக்கைகளும், போக்குகளும் தமிழ் மக்களைப் பிரிந்து -தனித்து வாழவே தூண்டுகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

"அரசினுடைய ஒவ்வொரு நடவடிக்கையும் தமிழர்கள் தனித்து வாழ்வதையே ஊக்குவிக்கின்றது. வடக்கு மாகாணத்துக்குப் பிரத்தியேக பாஸ் நடைமுறை, வடக்கு மாகாணசபைக்கான அதிகாரங்களை மறுத்தல், வடக்கில் பொருளாதார நடவடிக்கைகளைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்தாமை, இராணுவ ஆக்கிரமிப்புகள், படையினரின் பாலியல் ரீதியான துன்புறுத்தல்கள் இவை யாவும் தமிழ் மக்களைத் தனித்து வாழத் தூண்டும் அரசின் அடக்கு முறைகளை வெளிப்படுத்துகின்றன' என்று

❖21 ஆம் பக்கம் பார்க்க





பதுளையில் மண் சரிவினால் பெற்றோர்களை இழந்த சிறுவர்களுக்கான உளநலப் பயிற்சிகள் அங்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

## கொழும்பு அரசை விட சிறந்தது வடக்கு அரசு

யாழ்ப்பாணம், நவ. 2
அதிகாரங்கள் இல்லாத நிலையிலும், கொழும்பு அரசை விட முன்மாதிரியாகச் செயற் படும் வடக்கு மாகாண சபை குறித்து நாங்கள் பெருமை கொள்கின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் வரவு -செலவுத் திட்டம் மீதான விவாதத்தில் உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அதிகாரங்கள் இல்லாம லும், கொழும்பு அரசின் ஒத்துழைப்பில்லாமலும் இருந்த போதிலும் கூட வட மாகாண சபை அங்குள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மாதாந்தம் 3 ஆயிரம் ரூபாவை வேதனமாக வழங்கி வரு

❖21 ஆம் பக்கம் பார்க்க

## வடமாகாண மரம் நடுகை நாரந்தனையில் ஆரம்பம்

### முதல் மரம் நட்டார் முதலமைச்சர்

யாழ்ப்பாணம்.நவ.2
வடக்கு மாகாணத்தின் மரம் நடுகை மாதம் நேற்று தீவகத்தில் நாரந்தனைப் பகுதியில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.
விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சினால் நவம்பர்

❖21 ஆம் பக்கம் பார்க்க



இன்று சிறப்பான சூரியகாந்தி
பிரதிக்கு முந்துங்கள்...

## உண்மைகள் இருட்டடிப்பா?

### மக்களும் சமூக ஆர்வலர்களும் கேள்வி

கொழும்பு, நவ.02
மீரியபெத்த மண்சரிவில் உயிரிழந்திருக்கக்கூடும் என அஞ்சப்பட்டவர்களின் - காணாமற்போனவர்களின் எண்ணிக்கையை இருட்டடிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா என்ற சந்தேகங்களை மக்களும், சமூக ஆர்வலர்களும் எழுப்புகின்றனர்.
கடந்த புதனன்று மண்சரிவு இடரில் 500, 400, 300 என குறிப்பிடப்பட்ட - உயிரிழந்திருக்கக் கூடும் என அஞ்சப்பட்டவர்களது - காணாமற்போனவர்களது எண்ணிக்கையானது நேற்று மாலையில் 38 ஆக குறைத்துக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. ஐவரது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் 33 பேர் மாத்திரமே காணாமற் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

❖21 ஆம் பக்கம் பார்க்க



இதோ வெளிவந்துவிட்டது
நவம்பர் மாத ஒளிஅரசி
OLIARAZI மாத சஞ்சிகை
தேசிய சாதனைபடைத்த யாழ் வீராங்கனை ஜெகதீஸ்வரன் அனித்தாவின் முகப்பட்டைப் படத்துடன்...
இலவசம் O/L மாதிரி வினாத்தாள் கையேடு
யார் இந்த மலாலா?
சாதனை எப்படி சாத்தியமானது?
உள்ளே
நெகிழ வைக்கும் மாற்றம்
7 வகை திறன் போட்டிகள் பரிசு 150,000/=
உலகப் பொது அறிவுத் தொகுப்பு
இன்னும் பல சுவாரஸ்யமான அம்சங்களுடன் தற்பொழுது அமோக விற்பனையில்.....
உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்
விநியோகத் தொடர்புகளுக்கு: 0776569617 / 077 1945812
விளம்பர தொடர்புகளுக்கு: 078 8864730 / 0787 273035

"குழந்தைகளற்றவர்கள் நம்பிக்கையற்ற வாழ்வை எதிர்கொள்வதைப் போல மரங்களற்ற நாடும் பெரும்பாலும் உதவிகளற்றதாகவே காணப்படும்"
- தியோடர் ரூஸ்வெல்ற் (அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி)

# வடக்கு விவசாய அமைச்சின் அதிக நிதி முல்லைத்தீவுக்கே

## அன்ரனி ஜெகநாதனுக்கு ஐங்கரநேசன் பதிலடி

யாழ்ப்பாணம்.நவ.2

வடக்கு மாகாண விவசாய அமைச்சுக்கென 2014 இல் ஒதுக்கப்பட்ட நிதியில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கே அதிகளவு நிதி செலவிடப்பட்டுள்ளது. மக்களின் தேவைகள் மற்றும் மாவட்டத்துக்குப் பொருத்தமான வகையில் வேலைத்திட்டங்கள் அமைச்சினால் அந்தந்தக் காலப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று வடமாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

விவ்சாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஏற்பாட்டில் வட மாகாண மரம் நடுகை மாத அங்குரார்ப்பண நிகழ்வு நாரந்தனை கணேசா வித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது.

கடந்த வட மாகாண சபை அமர்வின்போது சபையின் பிரதி அவைத் தலைவர் அன்ரனி ஜெகநாதனால் மாவட்டத்துக்கான அபிவிருத்தி நடவடிக்கைகளில் முல்லைத்தீவு மாவட்டம் புறக்கணிக்கப்படுவதாகவும், விவசாய அமைச்சினால் ஏனைய மாவட்டங்களுக்கு வழங்கும் அபிவிருத்திகள் முல்லைத்தீவு மாவட்டத்துக்கு வழங்கப்படவில்லை எனவும் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது.

இதற்குப் பதிலளிக்கும் வகையில் அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்ததாவது:-

வடக்கு மாகாணத்தில் சில மாவட்டங்களுக்கு நிதி போதியளவு ஒதுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. ஆனால் நிதி ஒதுக்கீடு மாவட்டங்களின் தேவையின் அடிப்படையில் செலவிடப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டு விவசாய அமைச்சுக்கான ஒதுக்கீட்டில் 60 மில்லியன் ரூபா நிதியில் யாழ்.மாவட்டத்துக்கு 11.48 மில்லியன் ரூபாவும், கிளிநொச்சி மாவட்டத்துக்கு 8.38 மில்லியன் ரூபாவும், மன்னார் மாவட்டத்துக்கு 10.53 மில்லியன் ரூபாவும், வவுனியா மாவட்டத்துக்கு 11.03மில்லியன் ரூபாவும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 18.81 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனைவிட நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் ஏனைய மாவட்டங்களை விட முல்லைத்தீவு மாவட்டத்துக்கு 2 ஆயிரத்து 664. 43 மில்லியன் ரூபா செலவு செய்யப்பட்டுள்ளது. நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் 62 விழுக்காடு நிதி முல்லைத்தீவு மாவட்டத்துக்குச் செலவிடப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பிரதான பயிராக நிலக்கடலை இருப்பதால் அதனை அபிவிருத்தி. செய்யும் வகையில் வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இயந்திரங்களும் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

எனவே அமைச்சினால் பிரதேச வேறுபாடு காட்டப்படவில்லை. பொருத்தமான வகையில் அந்தந்த மாவட்டங்களில் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இன்றைய மரம் நடுகையின் ஆரம்பம் பிரதேசத்துக்கு வலுச்சேர்க்கும்,வலுவூட்டும் வகையில் அமைந்துள்ளது. மரங்கள் படிப்படியாக அழிக்கப்பட்டு வந்தமையால் வெயில் காலத்தில் கடும் வறட்சியையும் மழை காலத்தில் வெள்ளப்பெருக்கையும் எதிர்கொள்கிறோம். மரங்களை மீண்டும் நடுகை செய்ய வேண்டிய நிலைக்கு வந்துள்ளோம் - என்றார். (த-14)

## மனதுக்கு இதமாக அமைந்தது மாணவர்களின் இசை வேள்வி

தென்மராட்சி, நவ.2

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் இசை ஆசிரியர்கள் மூலம் பாடசாலை மாணவர்களுக்கு இசையில் ஆர்வத்தை ஊட்டும் வகையில் மாதாந்தம் பாடசாலைகளில் இசை நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இதன் முதலாவது இசை நிகழ்வு நேற்று முன்தினம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம் பெற்றது. அசத்தலுடன் ஆரம்பமான ஏழிசை மாலை இசை நிகழ்வில் கல்லூரி இசை ஆசிரியை திருமதி மஞ்சுளா கண்ணன் முதலாவது இசை நிகழ்வை ஆரம்பித்துவைத்தார்.

ஆரம்பம் தொடக்கம் இசை ஆசிரியைகள், மாணவர்களால் நடத்தப்பட்ட ஒவ்வொரு இசை நிகழ்ச்சியும் மனதுக்கு இதமான முறையில் காணப்பட்டன.

நிகழ்வின் ஆரம்பத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணவர்களின் தேவாரமும் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மாணவர்களின் கிறிஸ்தவ கீதமும் இசை வடிவில் உருவாக்கப்பட்டு சிறப்பாக ஆரம்பித்து வைத்தனர்.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி இசை ஆசிரியை திருமதி மஞ்சுளா கண்ணனின் இசைக்கச்சேரி, மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலய மாணவன் ர.நிலக்சனின் கீர்த்தனை', கொடிகாமம் திருநாவுக்கரவு மத்திய கல்லூரி இசை ஆசிரியை திருமதி ர.கலையரசி, மந்துவில் றோ.க.த.க.பாடசாலை இசை ஆசிரியை திருமதி சி.சிவகாந்தன் ஆகியோரின் 'இருவர் பாடல்' இசை நிகழ்வு, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மாணவர்களின் பாரதியார் பாடல்கள் ஆகியன அங்கிருந்த அனைவரின் செவிகளுக்கும் விருந்தளிப்பதாக அமைந்திருந்தன.

இசையால் வசமாகா இதயமெது என்பதற்கமைய நிகழ்வில் இடம்பெற்ற ஒவ்வொரு நிகழ்வும் அங்கிருந்த அனைவரையும் மெய் மறக்க வைத்தன.

2ஆம் நிகழ்வு நவம்பர் 28 ஆம் திகதி சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-9)

## பரீட்சைகளும் கருத்தரங்குகளும்

கரணவாய், நவ. 2

வடமராட்சி கல்வி வலயத்திலிருந்து எதிர்வரும் டிசெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஜீ.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான பாடசாலை மட்டப் பரீட்சைகளும் கருத்தரங்குகளும் நாளை முதல் 25 ஆம் திகதிவரை இடம்பெறவுள்ளன.

தமிழ்-நாளையும், விஞ்ஞானம்-நாளை மறுதினமும், 5 ஆம் திகதி வர்த்தகம் மற்றும் முயற்சியாண்மை கணிதம் என்பனவும், 7 ஆம் திகதி வரலாறு, ஆங்கிலம் என்பவற்றுக்கான பரீட்சைகள் இடம்பெறவுள்ளன.

20 ஆம் திகதி தமிழ் பாடத்துக்கான கருத்தரங்கும், 21ஆம் திகதி விஞ்ஞான பாடத்துக்கான கருத்தரங்கும், 22 ஆம் திக்தி கணித பாடத்துக்கான கருத்தரங்கும், 24 ஆம் திகதி வரலாறு பாடத்துக்கான கருத்தரங்கும், 25 ஆம் திகதி ஆங்கிலப் பாடத்துக்கான கருதத்ரங்கும், 26 ஆம் திகதி வர்த்தகம், முயற்சியாண்மைக்கான கருத்தரங்கும் பாடசாலை மட்டத்தில் நடைபெறும். (த-108)



மட்டக்களப்பு, ஏறாவூர் - சவுக்கடி கடலில் கே.எல். ஜவாஹிர் என்பவரது கரை வலையில், பெரும் எண்ணிக்கையிலான கருக்குப் பாரை ரக மீன்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பிடிபட்டுள்ளன. சுமார் 15 இலட்சம் ரூபா பெறுமதியான மீன்கள் பிடிபட்டுள்ளதாகவும் ஒவ்வொரு மீனும் தலா 7 கிலோகிராம் நிறையுடையது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)

## பள்ளிவாசல் சுவர் இடிந்ததில் இளைஞன் சாவு; மூவர் காயம்

திருமலை, நவ. 2

மீலாத்விழா நிகழ்வை கொண்டாடவென்று மேடை அமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த இளைஞர்கள் குழு ஒன்று பள்ளிவாசல் சுவர் ஒன்றினை அகற்ற முற்பட்ட வேளை அச்சுவர் அவர்கள் மீது சரிந்து விழுந்து ஒருவர் உயிரிழந்ததுடன் மூவர் படுகாயங்களுடன் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருகோணமலை-கண்டி வீதியில் அமைந்துள்ள கணேஷ் லேன் என்ற பகுதியிலே மேற்படி சம்பவம் நடந்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் மீலாத் விழாவிற்கான மேடை அமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்த அப்பிரதேச இளைஞர் குழுவினர் மீலாத்விழாவினை பார்வையிட இடவசதி போதாதென்ற நிலையில் புதிய பள்ளிவாசல் அமைப்பு வேலைக்காக பழைய பள்ளிவாசலை அகற்றும் பணி ஏற்கனவே நடைபெற்றிருந்த நிலையில் அதில் ஒரு சுவர் பகுதியை அகற்றினால் பார்வையாளர்களுக்கு தாராள இடவசதி கிடைக்கும் என்ற எண்ணத்தில் குறித்த சுவர் பகுதியை அகற்ற முனைந்த வேளையிலே இந்த பரிதாபகரமான சம்பவம் நடைபெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த நவாஸ் சாகிப் (வயது-21) என்பவரே உயிரிழந்தவராவர். மற்றும் ஜே.ஆசிக் (வயது -40), எஸ்.கிசான் (வயது-14) எம். சாஜித் (வயது-19) ஆகியோரே காயமடைந்தவர்கள். இதில் எம்.சாஜித் என்பவர் அதிக காயங்களுக்குள்ளாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (த)

## நலத் திட்டங்களுக்கு விந்தன் நிதி உதவி



யாழ்ப்பாணம்.நவ.2

வடமாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தனக்கு நன்கொடையாக கிடைக்கப்பெற்ற 30 ஆயிரம் ரூபா நிதியைப் பாடசாலையின் மின் இணைப்புப் பணி மற்றும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவரின் மருத்துவச் செலவு ஆகியவற்றுக்கு நேற்று வழங்கினார்.

லண்டனில் உள்ள நண்பர் மூலம் கிடைக்கப்பெற்ற நிதியில் நெடுந்தீவு கிழக்கு சுப்பிரமணிய வித்தியாலயத்தின் மின் இணைப்புப் பணிகளுக்காக 20 ஆயிரம் ரூபாவையும், புற்றுநோயால் பாதிக்கப்பட்டவரின் மருத்துவச் செலவுக்காக 10 ஆயிரம் ரூபாவையும் வழங்கியிருந்தார்.

பயனாளிகளுக்கான நிதிகளை வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன், மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்னம் ஆகியோர் நாரந்தனை கணேசா வித்தியாலயத்தில் வைத்து வழங்கினர். (த-14)

## ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்புடன் அரசமைப்பு மாற்றத்துக்கும் முடிவு

யாழ்ப்பாணம், நவ. 2

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்புடன், இலங்கையின் அரசமைப்பை மாற்றும் அறிவிப்பையும் வெளியிடுவதற்கு அரசு முடிவெடுத்திருப்பதாகத் தெரிய வருகின்றது.


சர்ச்சைப் பொருளாகியுள்ள நிறைவேற்று அதிகார முறைமையை மாற்றியமைப்பதற்காக அரசமைப்புச் சபை ஒன்று அமைக்கப்படவுள்ள தாகவும் லங்காதீப சிங்களப் பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

1978ஆம் ஆண்டு அரசமைப்பில் மாற்றம் செய்யப்பட்டது. இவ்வாறு மாற்றம் செய்வதற்கு அரசமைப்புச் சபை ஒன்று அப்போது அமைக்கப்பட்டது. அதேபோன்று தற்போதும் அரசமைப்பபில் திருத்தம் மேற்கொள்வதற்குப் பதிலாக, மாற்றம் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் அமைச்சர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் கடந்த வார இறுதியில் கொழும்பில் இது தொடர்பில் ஆராய்ந்துள்ளனர். தற்போது எதிர்க்கட்சிகளினால் முக்கிய குற்றச்சாட்டாகச் சொல்லப்பட்டு வரும், ஜனாதிபதி முறைமை, நிறைவேற்று அதிகாரம், தேர்தல் முறைமை தொடர்பில் அர சமைப்பை மாற்றவேண்டும் என்று இதன்போது அமைச்சர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கமைவாக, ஜனாதிபதித் தேர்தலுக்கான அறிவித்தலை வெளியிடும்போது, அரசமைப்பை மாற்றுவதற்குரிய அரசமைப்புச் சபையை அமைப் பதற்கான அறிவித்தலும் வெளியிடப்படும் என்று அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

Study in Saint Lucia , North America
Your Gateway to USA, Canada, UK & Europe



Why Study in Saint Lucia?

* NO IELTS
* No Interview
* ஆங்கிலமொழி மூலம் கற்கைநெறி
* இலகுவான விசாமுறை (100% Visa Ratio)
* மிகக்குறைந்த கற்கைநெறி கட்டணம்
* குறைந்த வதிவிடச்செலவு
* 20 மணித்தியால பகுதிநேர வேலை
* Dependant can work full time
* Free Education for Kids

(பி.17419)

iCS Study Overseas
77,மணிக்கூட்டு கோபுர வீதி,
(பெருமாள்கோவில் அருகில்)
யாழ்ப்பாணம்.
021 492 6222 , 076 7013060

## 'நேயருடன்' மருத்துவ சேவை செவ்வாயன்று நாவற்குழியில்

தென்மராட்சி, நவ.2

யாழ். பிராந்திய சுகாதார திணைக்களம் மற்றும் யாழ். போதனா மருத்துவமனை ஆகியவை தென்மராட்சி கல்விவலயத்துடன்இணைந்து நடத்தும் "நேயருடன்" மருத்துவ சேவை நாளைமறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணி தொடக்கம் நாவற்குழி 300 வீட்டுத் திட்டப் பகுதியில் இடம்பெறும். நாவற்குழி 300 வீட்டுத் திட்டம், ஐயனார் கோவிலடி 5 வீட்டுத்தட்டம் ஆகிய பகுதிகளில் உள்ள விசேட தேவையுடைய மாணவர்கள் உட்பட ஏனைய மாணவர்கள் இந்த மருத்துவ பரிசோதனை முகாமில் பரிசோதிக்கப்படவுள்ளனர்.

பரிசோதனை முகாமில் மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு உத்தியோகத்தர்கள் உட்படப் பலர் கலந்து கொண்டு பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

மாணவர்களுடன் அவர்தம் பெற்றோரும் கலந்து கொள்ள அழைக்கப்பட்டுள்ளனர். மாணவர்களைப் பரிசோதனைக்கு உட்படுத்தி அவருக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் கண்டறியப்பட்டு அதனை தீர்ப்பதற்கான ஆலோசனைகளும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பரிசோதனையில் மாணவர்களின் கண், தோல், பல் ஆகியவற்றுடன் போசாக்கு குறைவு போன்றவையும் மேற்கொள்ளப்படும்.

ஒவ்வொரு பிரிவுகளின் மருத்துவ நிபுணர்களும் அவற்றுடன் தொடர்புடைய மருத்துவர்களும்பங்குபற்றவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் சமுகமளிக்குமாறு தென்மராட்சி கல்வி வலயத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சி கல்வி வலயத்தினால் ஏற்கனவே கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி ஆகியவற் றில் நேயருடன்' பரிசோதனை முகாம் நடத்தப்பட்டபோது 700 க்கு மேற்பட்ட மாணவர்களை பரிசோதனைக்கு உட்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# வீதிக் கட்டமைப்புக்கள் முறையற்ற வகையில்

## குவிந்தன முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், நவ 2


முறையற்ற வீதிக் கட்டமைப்புக்கள், போக்குவரத்து நெரிசல்கள் தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் போக்குவரத்துப் பொலிஸாருக்கும் அரசமற்றும்தனியார்திணைக்களங்களின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. குறித்த சந்திப்பில் கலந்துகொண்ட பிரதிநிதிகளால் முறையற்ற வீதிக் கட்டமைப்புக்கள், போக்குவரத்து நெரிசல்கள் தொடர்பான பல்வேறுபட்ட முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டன.

நெடுந்தீவு பாடசாலைகளுக்கு முன்பாகப் பாதசாரிகள் கடவை போடப்படவில்லை. இதனால் சிறுவர்கள் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். மேலும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக அமைக்கப்பட்டிருக்கும் பாதசாரிகள் கடவையை ஊடறுத்து வீதியின் நடுப் பகுதியில் ஓட்டோ மற்றும் மோட்டார் சைக்கிள் தரிப்பிடங்களுக்கான எல்லைக் கோடுகள் அமைக்கப்பட்டிருப்பதால்நோயாளிகள், பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர் என முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளுக்குப் பதிலளித்த வீதி அபிவிருத்தி சபையின் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.பிரதீபன், நெடுந்தீவில் துறைமுகம் ஆழமாக்கும் பணிகள் இப்போது இடம்பெறுகின்றன. முடிந்தவுடன் நெடுந்தீவுப் பாடசாலைகளுக்குப் பாதசாரிகள் கடவை அமைத்து கொடுக்கப்படும். பின்னர் வைத்தியசாலைக்கு முன்பாக இருக்கும் குறைபாடுகள் தீர்க்கப்படும் எனத் தெரிவித்தார்.

அதிக மாணவர்கள் உள்ள பாடசாலைகள் மற்றும் போக்குவரத்து நெரிசல் உள்ள பாடசாலைகளில் போக்குவரத்துப் பொலிஸார் கடமையில் இல்லை. யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக இருக்கும் திரையரங்கு ஒன்றின் விளம்பரப்பலகை மணிக்கூட்டு வீதியில் இருந்து வரும் வாகனங்களை அவதானிக்க முற்றிலும் இடையூறாக உள்ளது.

இதனால் விபத்துக்கள் மற்றும் நெரிசல்கள் அதிகமாக ஏற்படுகின்றன என முன்வைக்கப்பட்ட முறைப்பாடுகளுக்குப் பதிலளித்த பொலிஸார், இவ் விடயத்தில் தாம் கூடுதல் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தனர். (த-ரி)



மண் சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் நேரில் உதவிகளை வழங்கியது. அதன் உபதலைவர் ஆறு.திருமுருகன், உறுப்பினர் சி.தனபாலா உட்பட பலர் முகாமில் மக்களைச் சந்தித்து உதவிகளை வழங்கினர். (த)

## பன்பாய் நெய்தல் பற்றிய கருத்துரை

யாழ்ப்பாணம், நவ, 02

சமகாலக் கலை, கட்டடக் கலை மற்றும் வடிவமைப்புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தினால் ஒழுங் கமைக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித் தொடரின் கருத்துரையின் 11ஆவது நிகழ்வாக மட்டக்களப்பின் பன்பாய் நெய்தல் வடிவமைப்பு பற்றிய கருத்துரை வழங்கும் நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது.

காலை 10 மணி முதல் 12 மணிவரை இலக்கம் 199, கோவில் வீதி, நல்லூரில் அமைந்துள்ள சமகாலக் கட்டடக்கலை மற்றும் வடிவமைப் புக்கான இலங்கை ஆவணக் காப்பகத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கலை வரலாற்றுப் பட்டதாரியும் கலை பண்பாட்டு அமைச்சில் அபிவிருத்தி அலுவலராகப் பணியாற்றும் அழகையா தேவரூபன் வளவாளராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்தக் கருத்துரை பாய் பின்னலின் நுட்பம், வர்ணம் மற்றும் வடிவமைப்பு பற்றியதாகவும் சமூக அரசியல் அடையாளத்தின் மிகமுக்கிய கைவினைப் பொருளாகவும் மரபுரிமையாகவும் நோக்கப்படவுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. (த-10)

## நெல் உற்பத்தி இம்முறை நெடுந்தீவில் படு வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,நவ.2

நெடுந்தீவுப் பகுதியில் இம்முறை நெல் உற்பத்தி குறைந்த அளவிலேயே மேற்கொள்ளப்படுகின்றது. கடந்த காலங்களைவிட இது மிகவும் குறைவானது என விவசாயிகள் தெரிவித்தனர்.

கிழக்குப் பகுதியில் இரண்டு ஹெக்டேயரிலும் மத்திய பகுதியில் 3 ஹெக்டேயரிலுமே நெற்செய்கை இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, பெரும்பாலானவர்கள் வெங்காயச் செய்கையிலேயே நாட்டம் கொண்டுள்ளனர். மேற்குப் பகுதியில் காய்கறித் தோட்டங்களில் உபஉணவுப்பயிர்கள்செய்கை பண்ணப்படுவ துடன் மத்திய கிழக்குப் பகுதிகளில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு வழங்கிய விதைகள் மூலம் வீட்டுத் தோட்டச்செய்கைகளும் இடம் பெறுகின்றன. (த-7)

# கோப்பாய் நாவலர் பாடசாலை அருகே முறையற்ற வடிகால்

## பாதிப்படைவதாக மக்கள் முறைப்பாடு

யாழ்ப்பாணம் ஒக்.28

கோப்பாய் நாவலர் பாடசாலைக்கு அருகில் உள்ள வடிகால் அமைப்பா னது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முறையாகத் திட்டமிடப்பட்டுக் கட்டப்பட்டதல்ல எனவும், மழை காலங்களில் பல பாகங்களில் இருந்து வரும் கழிவு நீர் மேற்கொண்டு செல்ல முடியாமையினால் அங்கே தேங்கி நின்று நுளம்பு பெருகுவதாகவும், இதனால் அங்கிருக்கும் குடும்பங்கள் மட்டுமல்லாது அருகில் உள்ள பாடசாலை மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் அப்பகுதியில் வசிக்கும் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வடிகாலமைப்பு முறையாகத் திட்டமிடப்படாமலும், பூரணப்படுத்தப்படாமலும் உள்ளதுடன் குப்பைகளும் கால்வாய்க்குள் வீசப்பட்டுள்ளன.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் கூறுகையில்,

குறித்த பிரச்சினை தொடர்பாக நாம் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையிடம் பலமுறை முறைப்பாடுகள் செய்துள்ளோம். ஆனால் எந்தவித பயனும் இல்லை எனத் தெரிவித்தனர்.

இது தொடர்பில் கோப்பாயில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் உப அலுவலகத்தின் பொறுப்பதிகாரி கனகரத்தினத்துடன் தொடர்புகொண்டு கேட்ட போது, குப்பைகள் தொடர்பாக மக்கள் தந்த முறைப்பாடுகளுக்குத் தீர்வு உடனடியாகவே வழங்கப்படவுள்ளது. வடிகாலமைப்புக்கு எம்மோடு தொடர்பு கொண்டு எவ்வித பயனும் இல்லை வீதி அபிவிருத்தி அதிகாரசபையே இதற்குப் பொறுப்பு. ஆனால் சில மக்கள் வீட்டுக் கழிவுகளை வாய்க்காலுக்குள் எறிந்துவிட்டுச் செல்கிறார்கள். இறைச்சிக்காக வெட்டப்பட்ட கோழிகளின் கழிவுகளை வீதியில் போட்டுவிட்டுச் செல்கின்றனர். குப்பைகளைக் கொட்டவென நான்கு இடங்களை நாம் அறிவித்திருந்த போதும் தாம் விரும்பிய இடங்களில் மக்கள் குப்பைகளை வீசுகின்றனர். இருந்த போதும் வாரம் தோறும் அச்சுவேலியில் இருந்து செம் மணிவரை குப்பைகள் பூரணமாக அகற்றப்படுகின்றன. இனியும் அகற்றப்படும் என அவர் தெரிவித்தார்.

குறித்த வடிகால் அமைப்பு தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் கேட்ட பொழுது, பொதுவாக அனைத்து இடங்களிலும் இவ்வாறான பிரச்சினை இருக்கிறது. நாவலர் பாடசாலைக்கு முன்பாக இருக்கும் வடிகால் அமைப்பு மக்கள் பாவனைக்கு ஏற்ற முறையில் புனரமைக்கப்படும் எனத் தெரிவித்தனர். (த-ரி)

## பரிசளிப்பு விழா

கரணவாய், நவ 2

வல்வெட்டி விநாயகர் வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு வித்தியாலய அதிபர் வே.மகேந்திரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக க.பொன்னையாவும், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலய கணித பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் மெ.ஈஸ்வரதேவன், வடமராட்சி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி க.பஞ்சலிங்கம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-108)

## பரிசில் நாளும் நூல் வெளியீடும்

கரணவாய், நவ. 2

திக்கம் மத்திய சனசமூக நிலையத்தின் பரிசில் நாளும் நூல் வெளியீட்டு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திக்கம் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளன.

திக்கம் மத்திய சனசமூக நிலையத் தலைவர் க. சுரேஸ் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலனும், இனிய விருந்தினர்களாக நெல்லியடி மத்திய கல்லூரி அதிபர் செ.சேதுராசா, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அதிபர் தேவதயாளினி, திக்கம் சித்தி விநாயகர் வித்தியாலய அதிபர் க. ரவீந்திரன், ஓய்வுநிலை மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி. சிவராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்.

நூலின் வெளியீட்டுரையை யாழ்.கோப்பாய் ஆசிரியர் கலாசாலை பிரதி அதிபர் ச.லலீசனும் மதிப்பீட்டுரையைக் கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் அ.பௌநந்தியும் நிகழ்த்துவர். (த-108)

## சுகாதார அறிவூட்டல்

கரணவாய், நவ 2

யாழ். போதனா வைத்தியசாலை நீரிழிவு சிகிச்சைப் பிரிவினர் வடமாகாண கல்வி அமைச்சின் அனுமதியுடன் பாடசாலை ஆசிரியர்களுக்கு சுகாதார அறிவூட்டல் கருத்தரங்கொன்றை நடத்தவுள்ளனர். எதிர்வரும் 8 ஆம் திகதி மண்டபத்தில் இடம்பெறும் இக் கருத்தரங்கில் ஆரோக்கிய வாழ்வு, ஆராக்கிய உணவு முறை, ஆரோக்கியமான உடல் நிறை பேணுகை, தொற்றா நோய்களின் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு முறைகள் என்பன பற்றி விளக்கமளிக்கப்படவுள்ளன. இதில் பங்குபற்ற விரும்பும் ஆசிரியர்களின் பெயர் விவரங்களை எதிர்வரும் 4 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் நீரிழிவு சிகிச்சைப் பிரிவினர் கேட்டுள்ளனர். (108)

## தப்ரபேன் கடலுணவு (பிறைவேற்) லிமிட்டெட்

தங்களது பிரதேசத்தில் மேலும் ஒரு வேலைவாய்ப்பினை வழங்குவதையிட்டு சந்தோசமடைகின்றது.




**நிறுவனத்தினால் வழங்கப்படும் சலுகைகள்/சம்பளம்**

- பயிற்சியுடன் கூடிய அடிப்படைச் சம்பளம்
- பயிற்சி முடிவடைந்தவுடன் ரூபா 20000/= இற்கு மேல் மாதாந்தம் உழைக்கக் கூடிய வசதிகள்
- கிராமத்திலிருந்து நிறுவனத்திற்கும், நிறுவனத்தில் இருந்து கிராமத்திற்கும் போக்குவரத்து வசதிகள்.
- தேநீர் மற்றும் சிற்றுண்டி வழங்கல்.
- EPF, ETF செலுத்தப்படும்.
- முழுமையாக பெண்கள் மட்டும் வேலை செய்யும் சூழல்.
- யாழ்ப்பாணம் (பாசையூர்), கிளிநொச்சி (முழங்காவில்), மன்னார் (பேசாலை) ஆகிய கிளைகளுக்கு 45 நிமிட நேர இடைவெளியில் பெண் வேலையாள்களைப் பணிக்கு அமர்த்தக் கூடிய முன் அனுபவம் உள்ள வேலையாள் ஒப்பந்தகாரர்களும் தொடர்பு கொள்ளலாம்.
- மாற்றுவலு உள்ளவர்களிற்கு தங்கி நின்று வேலை பார்க்கக்கூடிய வசதி யாழ்ப்பாணத்தில் செய்யப்பட்டுள்ளது.

தொடர்புகளுக்கு : 021 221 9436(10am-4pm), 078 646 6890

(53716)(7.3)



உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111



Study in USA, Netherlands (Holland), France
New Zealand, Germany, Switzerland, Latvia
UK, Singapore, Malaysia, Canada

11 Years

GCE (O/L) அடிப்படைத் தகுதியுடன் Government Universities அனுமதியை பெற்றுக்கொள்ள முடியும். குறைந்த செலவில் வெளிநாட்டில் உயர்கல்வி. VISA கிடைத்த பின் Universities கட்டணம்.

10 years banded or 02 or 03 times refused / rejected

**GOVERNMENT COLLEGES/UNIVERSITIES**

**Nottingham College of London**

No: 36 1/1 Station Road, Colombo - 06,
Web: www.lifetimencl.com, www.srilanka.eie-group.com, Email: lifetime@lifetimencl.com
Colombo : 0112598059, 0773547049, Jaffna: 0777764567, 0777448623




உ

யாழ் அத்தியடி
ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்தி விநாயகர்
ஆலய பிரதம குருவாக விளங்கிய
அமரர் சிவஸ்ரீ நடராஜ ஐயர் கணேசராஜக் குருக்கள்
அவர்களின்

## ஆறாம் திங்கள் நினைவாக

தோற்றம் 11.04.1958 — மறைவு 08.06.2014

அமரர்
### சிவஸ்ரீ நடராஜ ஐயர் கணேசராஜக் குருக்கள்

அத்தியடி சிதம்பர நடராஜரவர் விநாயகர் தாள்
சற்குருவாய் நித்தியமாய்ச் சார்ந்து ஒளிர் எம் தலைவ...!
நித்தியமாய் எம்மிடையே நின்று மகிழ்ந்திரு உறவு
இத்தரையில் இனியிலதால் எது துயர் இனிக் கொடிது...?
தீராத வலிசுமந்து தீயாகச் சுட்டிட நாள்
வாடாது வாடுகின்றோம்... வந்து உமைக் கூடிடுநாள்,
தேடாப் பொழுதிலவாய் தேடி மலர் சொரிந்திறையை
மாறாத அன்புடனே மன்றாடி நிற்கின்றோம்.....

உங்கள் நினைவுகளைச் சுமந்து வாழும்...

பிள்ளையார் கோயிலடி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

அன்பு மனைவி,
மற்றும் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### சபாபதி சுந்தரமூர்த்தி

(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர், யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்)



நல்லூரைப் பிறப்பிடமாகவும், கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதி சுந்தரமூர்த்தி 31.10.2014 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி - கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வைத்திலிங்கம் திரவியம், சீவரத்தினம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்றீ நாகேந்திரம் அவர்களின் அன்புச் சகோதரனும், தயாளினி (கோப்பாய்), சாந்தினி (சுவிஸ்), கலாதர் (Coop - City இருபாலை), பிரதீபா (Software Engineer - London) ஆகியோரின் தந்தையும், சந்திரவதனன் (பிரான்ஸ்), சிவரூபன் (சுவிஸ்), தனுசியா, ஸ்ரீசிவதீபன் (Software Engineer - London) ஆகியோரின் மாமனும், குணசேகரம் (ஓய்வுபெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர்), யோகேஸ்வரி (தாதிய உத்தியோகத்தர்), காலஞ்சென்ற விக்னேஸ்வரி, இராஜ சுலோஷனா (கனடா), அனுசியா (கனடா) ஆகியோரின் மைத்துனரும், டெலக்சனா, குகதர்சனா (யா/வேம்படி ம.உ.பா), கஜனி (யா/கோப்பாய் நாவலர்), டிலக்ஷான், ஜெலக்ஷி(சுவிஸ்), நிவின்சன் ஆகியோரின் அன்புப் பாட்டனும் ஆவார். அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2014) அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் ஒருமணியளவில் தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் (கோப்பாய் இந்துமயானத்தில்) கந்தன்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கிளுவானை வீதி,
கோப்பாய் மத்தி.

தகவல்: குடும்பத்தினர்.
077 323 3630

(53571)(12.6)

## மரண அறிவித்தல்



திருமதி
### கனகம்மா சின்னத்தம்பி

ஐயனார்கோயிலடி, நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மா சின்னத்தம்பி 31.10.2014 சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் கால்ஞ்சென்ற வைரவன்-சின்னாச்சி தம்பதியரின் மகளும், முருகன்-வள்ளி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், யோகேஸ்வரி, லோகநாதன், கிருஸ்ணநாதன், பாஸ்கரன், மதினா ஆகியோரின் அன்புத் தாயாரும், இராஜேஸ்வரன், கமலா, யோகேஸ்வரி, அமுதா, ஸ்ரீபாஸ்கரன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெகதீஸ்வரன், இராஜரூபன், விஜயரூபன், இராஜேஸ்வரி, வொவிதா, அஜந்தா, அனிதா, தனுசன், மதுசன், கஜித்தனா, ஜனார்த்தன், சோபிகா, லகிதரன், கிருதரன், பகிதரன், சபேஸ்கரன், நிரோஜன் ஆகியோரின் பேர்த்தியும் ஜாக்கிலின், செமின், அஸ்வின், அபிஷேக் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2014) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக் காக பூதவுடல் நாவற்குழி தெற்கு பிணமுருங்கை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோயிலடி, நாவற்குழி.

தகவல்: பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(53710)(7.6.3)

# பதுளை இடரின் உண்மையை மறைப்பதற்குச் சிலர் முயற்சி

## மனோ கணேசன் குற்றச்சாட்டு



யாழ்ப்பாணம், நவ. 2

பதுளையில் இடம்பெற்ற மண் சரிவை இடர் சம்பவமாக மாத்திரம் காட்ட சிலர் முயல்கிறார்கள். இடரில் உயிரிழந்த, சொந்தங்களை இழந்த மக்களுக்கு அனுதாபமும், நிவாரணமும் தேவை. அது என்னிடமும் எக்கச்சக்கமாக இருக்கின்றது. ஆனால், அதை சொல்லி உண்மையைத் திரையிட்டு மறைக்க முடியாது. உண்மையை வெளியே கொண்டுவர வேண்டும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொஸ்லாந்தை, மீரியபத்த தோட்ட பிரதேசத்தில் மண்சரிவு அபாயம் இருக்கின்றதால், அங்கு வாழும் மக்களை மாற்று இடங்களுக்கு இடம்பெயரச் செய்யுங்கள் என்ற அபாய எச்சரிக்கை அறிவித்தலை தேசிய கட்டுமான ஆய்வு நிறுவனம், மூன்று வருடங்களுக்கு முன்னர் விடுத்ததாக, அந்த நேரத்தில் இடர் நிவாரண அமைச்சராக இருந்த மகிந்த சமரசிங்க இப்போது சொல்கிறார். இந்த தகவலைக் குறிப்பிட்ட தோட்ட நிர்வாகத்துக்கு அறிவித்ததாகவும் சொல்கிறார்.

மலையக மக்களின் அனைத்து வாழ்வாதார பிரச்சினைகளுக்கும் தோட்ட நிர்வாகங்கள் மாத்திரம்தான் பொறுப்பா? அபாய அறிவிப்பு வந்த போது உடனடியாக செயற்பட்டு, மாற்று குடியிருப்புகளை அமைத்து, இந்த தோட்ட மக்களை அபாயமில்லா இடங்களில் குடியேற்றும் எந்தவிதமான பொறுப்பும், ஆட்சியில் இருக்கும் அரசுக்கு கிடையாதா?

மலையக தோட்ட தொழிலாளர் இந்த நாட்டு தேசிய நீரோட்டத்தில் இல்லையா? இவர்கள் இந்த நாட்டுகுடிமக்கள் இல்லையா?

தற்போதைய இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த சமரவீர ஆச்சரியப்படத்தக்க கதை ஒன்றைச் சொல்கிறார். இந்த இடர் நிகழ்ந்தவுடன் எத்தனை பேர் காணாமல் போயுள்ளார்கள் என்பது பற்றிய புள்ளிவிபரங்கள் செய்தியாளர்களால் கேட்கப்பட்டபோது, அவை தோட்ட நிர்வாகப் பதிவு அறையிலேயே இருப்பதாகவும், அந்த அறையும் மண்ணுக்குள்ளே போய் விட்டதாகவும் கூறுகிறார். இதன் மூலம் இந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள நடைமுறையை போல், மலைநாட்டில் மலையக மக்கள் தொடர்பான புள்ளி விபரங்கள், பிரதேசத்துக்கு பொறுப்பான கிராம சேவகரிடமோ, பிரதேச செயலாளரிடமோ இல்லை என்று புலனாகின்றது.

மலையடிவாரங்களிலும், மலை உச்சிகளிலும் அமைந்துள்ள லயன் குடியிருப்புகளில் வாழும் மக்களின் பரிதாப நிலைமைகளையே இந்தச் சம்பவம் எடுத்து காட்டுகின்றது. கொஸ்லாந்தை மக்களுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த மலையக தோட்ட தொழிலாளர்களுக்கும், பாதுகாப்பான இடங்களில் காணிகள் பிரித்து வழங்கி, நவீன தனி வீடுகளை கட்டுவித்து, இந்தச் சமூகத்தின் வீட்டுரிமைப் பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டும் என்பதை இந்தச் சம்பவம் வலியுறுத்தி நிற்கின்றது.

அதுமட்டுமல்ல, திட்டமிட்ட முறையில் இந்த தோட்ட தொழிலாளர் சமூகம், இந்த நாட்டின் தேசிய நீரோட்டத்தில் இருந்து ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதையும், இந்த நாட்டின் மாவட்ட, பிரதேச செயலக நிர்வாகங்களில் இருந்து இவர்கள் தூர இருப்பதையும் இந்த சம்பவம் படம் பிடித்து காட்டுகின்றது - என்று குறிப்பிட்டுள்ளார். (த-5)

# மலையக மக்களுக்கு உதவுமாறு கோரிக்கை

## வடக்கு அரசின் நடவடிக்கைக்கு பலரும் முன்வந்து ஒத்துழைப்பு

யாழ்ப்பாணம், நவ. 2

வடக்கு மாகாண சபையினால் முன்னெடுக்கப்பட்டுள்ள நிவாரண நடவடிக்கைக்குப் பல்வேறுதரப்பினரதும் ஒத்துழைப்புக்கள் கிடைத்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெருமளவான பொருள்கள் கிடைத்துள்ளபோதும், பெரிய அளவில் உதவிகள் வழங்கப்படவேண்டியிருப்பதால் பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்களை உதவுமாறு வடக்கு மாகாண சபை கோரியுள்ளது.

பதுளையில் ஏற்பட்ட மண் சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பொருட்டு, உதவிகள் சேகரிக்கும்நடவடிக்கைவடக்குமாகாண சபையினால் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனின் நேரடி அறிவுறுத்தலில் இந்த நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

வடக்கின் ஒவ்வொரு மாவட்டங்களிலும், மாகாண அமைச்சர்கள் இந்த நடவடிக்கையை ஒழுங்குபடுத்தி மேற்கொள்கின்றனர். இதற்கு பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் எனப் பலதரப்பினரும் உதவிகளைச் செய்து வருகின்றனர். இருப்பினும் பெருமளவிலான உதவிகள் வழங்கப்பட வேண்டியிருப்பதால், மக்களிடமிருந்து வடக்கு மாகாணசபை உதவிகளை எதிர்பார்த்துள்ளது.

இதேவேளை, யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம் நேற்று விடுத்துள்ள அறிக்கையில், மண் சரிவில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, நிதி உதவிகளும் தேவைப்படுகின்றது. யாழ்.மாவட்டத்திலுள்ள அரச சார்பற்ற நிறுவனங்கள் நிதிகளைச் சேகரித்து வழங்கவுள்ளது.எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நிதி உதவிகளை வழங்க விரும்புவர்களை வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சேகரிக்கப்படும் நிதி, எதிர்வரும் 10 ஆம் திகதி பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரடியாக வழங்கப்படும் - என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-5)

# புலிகளிடம் ஒருபோதும் மண்டியிடோம்

## ஜனாதிபதி இறுமாப்பு



யாழ்ப்பாணம், நவ. 2

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், அவர்கள் முன்னிலையில் மண்டியிடப்போவதில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

'பயங்கரவாதத்துக்கு உயிரூட்டும் வகையில் ஐரோப்பாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட்டாலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர்கள் முன்னிலையில் மண்டியிடப்போவதில்லை' என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

'நமக்காக நாம்' இராணுவ வீடமைப்புத் திட்டத்தின் கீழ் புத்தளம் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட வீடுகளை இராணுவத்தினரிடம் ஒப்படைக்கும் நிகழ்வு நேற்றுப் பிற்பகல் ஆனமடுவ பகுதியில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுமார் மூன்று தசாப்தங்களாக இலங்கையில் இருந்த பயங்கரவாதம் வெற்றிகரமாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டாலும் வெளிநாடுகளில் இன்னும் அதன் நிழல் செயற்படுகின்றது. வெளிநாடுகள் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொண்டாலும் தாய்நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் உருவாக இடமளிக்கப்போவதில்லை என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வலியுறுத்தியுள்ளார். (த-5)

**கண்ணீர் அஞ்சலி**

வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலயப் பிரதமகுரு

பிரம்மஸ்ரீ சு.இராஜேஸ்வர சர்மா

அவர்களின் துணைவியார்

**திருமதி ஜெயந்தி அம்மா**

அவர்கள் 31.10.2014 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்த செய்தியைக் கேட்டு அதிர்ச்சியும் துயரும் அடைகின்றோம். அன்னார் விநாயகப் பெருமான் திருவடிகளில் அமைதியும்ஆனந்தமும் பெற வேண்டுமென்று விநாயகப் பெருமானைப் பிரார்த்தித்து எமது கண்ணீர் அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்.

(51989)(7.6.3)

வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் அடியார்கள் சார்பாக

ச.விநாயகமூர்த்தி

உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111

# இந்திய மீனவருக்குத் தூக்கு; மஹிந்தவுடன் மோடி பேச்சு



யாழ்ப்பாணம், நவ. 2

போதைப் பொருள் கடத்தல் குற்றச்சாட்டில் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் 5 பேரின் விடுதலை தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷவுடன், இந்திய பிரதமர் நரேந்திர மோடி பேச்சு நடத்தவுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 2011 ஆம் ஆண்டு இலங்கைகடற்பரப்பில்வைத்து, தமிழக மீனவர்கள் 5 பேரும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 3 பேரும் போதைப் பொருள் கடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்கள் மீதான வழக்கு இடம்பெற்று, நேற்று முன்தினம் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தமிழகம் எங்கும் போராட்டங்கள் வெடித்துள்ளன. தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்க வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். தமிழ்நாட்டிலுள்ள இலங்கைத் துணைத் தூதரகம், ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸ் விமான நிலையம் என்பனவும் தாக்குதலுக்குள்ளாகியுள்ளன. தமிழகம் முழுவதுமே பெரும் போர்க்களமாக மாறி வருகின்றது. மீனவர்கள் உடனடியாக விடுதலை செய்யப்படவேண்டும் என்று தமிழக அரசியல் கட்சிகள் யாவும் ஓரணியில் வலியுறுத்தி வருகின்றன.

இந்த நிலையில் இந்திய மத்திய அரசு தூதரக மட்டத்தில் பேச்சுக்களை நடத்தி வருவதுடன் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதி வரை நேபாள தலைநகர் காட்மண்டுவில் நடைபெற உள்ள சார்க் நாடுகளின் மாநாட்டில் பங்கேற்கும் இந்தியப் பிரதமர் மோடி, மீனவர்களின் விடுதலையை நேரடியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் வலியுறுத்துவார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

**மரண அறிவித்தல்**

**முருகையா யோகராசா**



(சிறி முருகன் காட்வெயர் உரிமையாளர் இருபாலை)

தெல்லிப்பழை கிழக்கு விலாங்கொடையைப் பிறப்பிடமாக வும், இருபாலை கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மு.யோக ராசா நேற்று (01/11/2014) சனிக்கிழமை அமரத்துவமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற முருகையா மற்றும் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், இராசமணியின் அன்புக் கணவரும், யோ.மகிந்தன் (கண்ணன் - France), யோ.ரஜிந்தன் (சூட்டி - France), அ. கஜானி (Teacher, Nelliyady Central College) ஆகியோரின் தந்தையும், அம்புஜனின் மாமனும், காலஞ்சென்றவர்களான தவராசா, வரதராசா (பொம்மை - France), ராசகுமார் (பாலன்) மற்றும் யோகராணி (France), ராணி, இந்திரகுமார், ஜெயராணி (ஜெயா - கனடா) ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02/11/2014) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் இருபாலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாடசாலை வீதி,
இருபாலை கிழக்கு, இருபாலை.

(53755)

**தகவல்: குடும்பத்தினர்**

**077 612 7161**

**மரண அறிவித்தல்**



**திருமதி அரியமணி பொன்னுத்துரை**

புத்தூர் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அரியமணி பொன்னுத்துரை நேற்று (01.11.2014) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இளையதம்பி பொன்னுத்துரையின் அன்பு மனைவியும், சரவணபவான் (மருந்தாளர் மாவட்ட வைத்தியசாலை, வல்வெட்டித்துறை), விமலானந்தன் (யாழ். பல்கலைக்கழகம், விலங்கியல்துறை), நற்குணதேவி, வையந்திமாலா சிவானந்தன் (சுவிஸ்), பவளராணி (கனடா), சரஸ்வதி (கனடா), காலஞ்சென்றவர்களான குணவதி, சச்சிதானந்தம், தவமலர் ஆகியோரின் அன்புத் தாயும், சந்தானலட்சுமி, புஸ்பவதி, தர்மலிங்கம், சிவகாந்தன், சாந்தகுமாரி (சுவிஸ்), சர்வானந்தம் (கனடா), சண்முகதாஸ் (கனடா), காலஞ்சென்ற சிவநேசன் ஆகியோரின் மாமியும், நிறோஜன், சர்மிலன், சர்மிலா, கேசபவன், தேனுகா, நிருபா, நிறோஜினி, நிந்துஜா, பனுவந்தி, சோபிதன், ரனுசியா, சாயினா, சாயிபானு, வினோதன், கஜீதா, கர்சன், விசாகன், அஸ்வின், நிலானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2014) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் அந்திரான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(53756) (10)

தகவல்:

**மகன், பிள்ளைகள்**

# விற்பனைக்கு

**மாடி வீடு விற்பனைக்குண்டு.**
வெள்ளவத்தையில் Galle Road அண்மையில் சகலவசதியுடன் மாடி வீடு உடனடி விற்பனைக்குண்டு. 6 Rooms, 5 B.R, 2 Kitchen, 2 Hall, 2 Dinig Hall, 2 Severent B.R, Car parking உண்டு. தரகர் வேண்டாம்.
தொடர்பு: 0721595935, 0728405502

**வீடு, காணி விற்பனைக்கு**
உடுவில் டச்சு வீதியில் 3½ பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு. (சி/17404) (7.6.3)
தொடர்பு : 077 624 8771

**அச்சவேலி தெற்கில் காணி விற்பனைக்கு**
அச்சுவேலி தெற்கில், ஆஸ்பத்திரிக்கு அருகில் வண்ணக்கன் கிரியும், பிரப்பந் தாழ்வும் 7 பரப்பு 4 ¼ குழி காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 491 1974 (53673) (5.6.3)

**இராச வீதியில் காணி விற்பனைக்கு உண்டு**
கோண்டாவிலில் இருந்து இருபாலைக்கு செல்லும் வழியில் இராசவீதி சந்தியில் ஐந்து பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும் தரகர் தேவை இல்லை.
தொடர்பு : 077 491 2596 (53647) (7.6.3)

**கடைக்கட்டடம் விற்பனைக்கு**
யாழ்ப்பாணம், K.K.S.வீதி, இல.187 (பழைய இல.49) கடைக் கட்டடம் விற்பனைக்குண்டு.
(53692) (5.6.3) தொடர்பு: 077 224 7865

**வீடு விற்பனைக்கு**
வளாக வீதி, திருநெல்வேலியில் ஒரு பரப்புக் காணியில் அமைந்த வீடும் கடையும் உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 855 8654 (53706) (4.6.3)

**கடைக் கட்டடம் விற்பனைக்கு**
ஆஸ்பத்திரி வீதியில், ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கம்பனிக்கு எதிரில் அமைந்துள்ள மூன்று மாடி கடைக் கட்டடம் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:
(53715) (12.3.6) 077 100 7231/077 706 4110

**ஊர்க்கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு**
சிறந்த இன கிறிராஷ் ஒரு நாள், இரண்டு கிழமை, ஒரு மாத, இரண்டு மாத ஊர்க் கோழிக்குஞ்சுகளும் கினிக் கோழிகளும் விற்பனைக்குள்ளன.
(சி/17230) (12.3.6) தொடர்பு: 077 755 6244

**ஓட்டோ விற்பனைக்கு** 21-xxxx தொடரி லக்கமுடைய பச்சை நிற ஓட்டோ உடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 739 3046 (53707) (4.6.3)

**கார் விற்பனைக்கு**
VITZ Car உடனடி விற்பனைக்கு. 2010 Model, 14 200km ஓடியது. (தரகர் தேவையில்லை)
தொடர்பு : 077 3079459 (53548) (7.6.3)

**வான் விற்பனைக்கு**
TOYOTA Dolphin Hi Roof 123 Super Long Dual A/C 2nd Owner
(53533) (12.3.6) தொடர்பு: 071 349 9602

**வான் விற்பனைக்கு**
TOYOTA CR 42
1st Owner Original Diesel
(53534) (12.3.6) தொடர்பு: 071 349 9174

**கல் விற்பனைக்கு**
யாழ்.நகரை அண்டிய பகுதியில் கண்ட கல் விற்பனைக்குண்டு.
தொடர்பு: (53708) (4.6.3)
076 624 2695/077 843 5267

**வீடு விற்பனைக்குண்டு** தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்கு அருகில் 4 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: ஸ்டீபன் ஜெயராஜ்(Attorney at Law)
077 629 3710 (சி/17417) (4.6.3)

# வேலைவாய்ப்பு

**தேவை**
குருநாகல் நகரில் அமைந்துள்ள சில்லறைக் கடைக்கு பெண் வேலையாள்கள் தேவை.
தொடர்பு: 077 886 3346
(சி/17521) (4.6.3)

**வெற்றிடம்**
FRIENDS LANKA CHILD FOUNDATION
என்ற அரச சார்பற்ற நிறுவனம் கிளிநொச்சிப் பகுதியில்
**திட்ட ஒருங்கிணைப்பாளர் (PROJECT COORDINATOR)**
பதவிக்கு (ஆண் / பெண்) தேவை.
பின்வரும் தேவைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- 25 - 40 வயதுக்கு இடைப்பட்ட வயது
- குறைந்தபட்சம் 2 வருடங்கள் சமூக மற்றும் வாழ்வாதார திட்டங்கள் கையாளும் அனுபவம். அறிக்கைகள் எழுத மற்றும் ஆவணங்களைப் பராமரிக்கும் திறன்.
- ஆங்கிலம், தமிழில் தகவல் தொடர்பு திறனும் சிங்கள அறிவு மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
- திட்டமிடும் பகுதிக்கு அண்மையில் வசிப்பவராயிருத்தல் வேண்டும்.

தயவுசெய்து உங்கள் சுயவிபரங்களடங்கிய விண்ணப்பத்தை இரு தொடர்பற்ற நபர்களின் விபரங்களுடன் விளம்பரம் செய்த 7 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும்.
FRIENDS LANKA CHILD FOUNDATION
22/2, 1/1, Perera Mawatha, Kalubowila, Dehiwala.
Email:admin@flcf.lk Web:www.flcf.lk

**Nick Advertaising International**
புதிதாக ஆரம்பித்துள்ள கிளைக்கு வேலை வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.
தகைமை O/L, A/L போதுமானதாகும்.
மேலதிக விபரங்களுக்கு:
இல.175, முதலாம் குறுக்குத்தெரு, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
077 354 8006/075 987 5612 (53505) (16.3)

**தேவை**
யாழ். புங்குடுதீவில் உள்ள பிரபல ஆலயத் திற்கு நாளாந்த கடமைகளை நிர்வகிக்கக் கூடிய முகாமையாளர் ஒருவர் தேவை. முன் அனுபவமுள்ளவர் விரும்பத்தக்கது. தங்குமிட வசதியுடன் தகுந்த சம்பளமும் வழங்கப்படும். தொடர்பு : (சி/17405) (7.6.3)
கண்ணகைபுரம், புங்குடுதீவு-10.
077 788 7830

**Reebonn Naturally Cosmetic**
எமது நிறுவனம்
Reebonn Naturally Cosmetic
(விற்பனை முகவர்கள் தேவை)
மீண்டும் உங்களுடன் இணைய வருகின்றோம்... எமது நிறுவனத் திற்கு முல்லைத்தீவு - கிளிநொச்சி, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களுக்கு விற்பனை முகவர்கள் தேவை.
தொடர்புகளுக்கு:
Reebonn Cosmetics [pvt]Ltd 077 366 7468

# மணமக்கள்

**மணமகள் தேவை**
யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1979, பூசம் 4ஆம் பாதம், கிரகபாவம் 70¼ சூரி, செவ். 7இல், தபால் ஊழியர், அரச உத்தியோகமுடைய மணமகள் தேவை.
(53618) (12.3.6) தொடர்பு: 077 655 2012

**மணமகள் தேவை**
யாழ்.இந்து கௌரவகுடும்பம், 1975, கேட்டை 2ஆம் பாதம், கிரகபாவம் 73½ செவ்வாய் 6 (குற்றமற்றது) சொந்த வியாபாரம் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.
(53619) (12.3.6) தொடர்பு: 077 458 6413

# வாடகைக்கு

**வான் வாடகைக்கு**
அரச தனியார் நிறுவனங்களுக்கு 57-3990 ஹைஏஸ் வான் (A/C) சகல வசதிகளுடன் வருடத்திற்கு வாடகைக்கு விடப்படும்.
தொடர்பு: 075 541 6905 (சி/17521) (4.6.3)

**அறைகள் வாடகைக்கு**
யாழ்.நகரப்பகுதியில் (ஸ்ரான்லி வீதி) இணைந்த குளியலறையுடன் அறைகள் வாடகைக்கு உண்டு. (பெண்களுக்கு மட்டும்)
தொடர்பு: 075 670 0680/077 754 5812 (53712) (4.6.3)

**அறைகள் நாள் வாடகைக்கு**
ஒருவருக்கு 600/=, இருவர் 1300/=, நால்வர் 2000/=
6 Hours 450/= ஒருவருக்கு
Hotel Villa City
422, Galle Road, Wellawatte
T.P: 072 255 22 22. (C/16915) (10.6.3)

**வீடு வாடகைக்கு**
கச்சேரி, நல்லூர் வீதியில் 68 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள மாடி வீடு வாடகைக்கு விடப்படும். நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 077 582 3346, 077 969 0615 (53617)(4.6.3)

**குத்தகைக்கு** ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணத்தில் வியாபார ஸ்தாபனங்கள் நெருக்கமாக உள்ள இடத்தில் நிலம் குத்தகைக்கு உண்டு. புதிய மணிக்கூட்டுக் கோபுர வீதியில் வாகனங்கள் விற்பனைக்கு உண்டு. (சி/17411) (7.6.3)
தொடர்புகளுக்கு :
ரியல் கொம் எஸ்டேட் (பிறைவேற் லிமிட்டட்)
இல. 67/4, கிரேகரி வீதி, கொழும்பு-07.
Email : realcommestate@gmail.com 072 798 1202

**வீடு வாடகைக்கு**
கண்டி வீதி, புறூடிலேனில் (A9 வீதிக்கு அருகில்) 03 அறை, ஹோல், சமையலறை ஆகிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குண்டு.
(58685) (12.3.6) தொடர்பு: 077 547 0045/071 803 4167

**வீடு வாடகைக்கு** கந்தர்மடம் சந்திக்கு அண்மையில் 55 (153) பலாலி வீதியில் வீடு வாடகைக்குண்டு. காரியாலயம், கல்வி நிலையம், களஞ்சியம் ஆகியவற்றுக்கும் உகந்தது.
தொடர்பு: 077 755 8340 (சி/17418) (4.6.3)

**வீடு வாடகைக்கு / குத்தகைக்கு**
யாழ்ப்பாணம் நல்லூரில் புதிதாக திருத்தியமைக்கப்பட்ட வீடு 7 படுக்கையறைகள் 5 குளியலறைகள் கொண்ட 4000 சதுர அடி நில அளவு கொண்டதும், முன்னும் பின்னும் இரண்டு வீதிகள் வாகன தரிப்பிடங்களுடனும் பெரிய தோட்டத்துடன் உண்டு. கம்பனிகள் NGO அல்லது அரசாங்க ஏஜென்சிகளுக்கு நீண்டகால குத்தகைக்கு. தரகர் வேண்டாம்.
தொடர்பு: 2584863, 077 301 3091

**வீடு வாடகைக்கு**
யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை 9/1, பொன்னப்பா லேனில் உள்ள வீடு வாடகைக்குண்டு.
(53598) (12.3.6) தொடர்பு: 077 751 7617

**வாடகைக்கு**
யாழ் புகையிரதம் தரித்து நிற்கும் வெள்ளவத்தை புகையிரத நிலையத்திற்கு முன்னால், இல. 8 புகையிரத வீதி, வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் மற்றும் தனி அறைகள் நாள், கிழமை, மாத வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0112 504 281, 0712 991 256

உதயன் விளம்பரத் தொடர்புக்கு–
advt@uthayan.com
0215671111

# ஏனையவை

**க.பொ.த.உயர்தர இணைந்த கணிதம், பௌதீகவியல் (ஆங்கிலம், தமிழ் மொழி மூலம்) 2015 /16 வகுப்புகள்**
பரீட்சையில் A தரச்சித்தி உத்தரவாதம். அல்லது கட்டணங்கள் திருப்பிக் கொடுக்கப்படும். (நிபந்தனைகளுக்குட்பட்டது). சிறு குழுக்கள் மட்டும். ஆங்கில வகுப்புகள் தரம் 1 - 10 வரை. கணக்கியல்தரம் 9 - 10 வரை.
(53697) (12.3.6) தொடர்பு: 077 354 4413

**சிறுநீரகம் தேவை**
சிறுநீரகம் செயலிழந்த ஆண் ஒருவருக்கு $B^+$ அல்லது $O^+$ வகையான சிறுநீரகம் அவசரமாகத் தேவைப்படுகிறது. உயிர்காக்கும் அன்புள்ளங்கள் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.
(53591) (12.3.6) தொடர்பு: 077 774 1638

**ஆதன பராமரிப்பாளர் தேவை**
60 வயதிற்கு குறைந்த நேர்மையாகவும், கடினமாகவும் வேலை செய்யக்கூடியவர் வடக்கு மாகாண நகரத்திற்கு அருகில் ஓய்வுபெற்ற ஒருவர் விரும்பத்தக்கது. (சி/17412) (7.6.3)
தொடர்புகளுக்கு :
ரியல் கொம் எஸ்டேட் (பிறைவேற் லிமிட்டட்)
இல. 67/4, கிரேகரி வீதி, கொழும்பு-07.
072 798 1202

**J.B.Construction**
கொங்கிறீட் சிலாப் வேலைகள் புதிய கட்டடங்கள் நிர்மாணித்தல், பழைய கட்டடங்கள் திருத்தியமைத்தல், நிலத்திற்கான மாபிள்கள் பதித்தல், பிளாட் ஒழுங்குகள் Water புறூப்பிங் செய்தல் அனைத்து வேலைகளும் குறுகிய நேரத்தில் செய்து தரப்படும்.
தொடர்பு: J.T.ஜோன்சன்
(53589) (12.3.6) 077 113 8615

**இடமாற்றம்**
டயானா பிளாஸ்ரிக்
108, பலாலி வீதி
(இலுப்பையடிச் சந்தி)
உடைந்த பிளாஸ்ரிக் ஒட்டுதல் பழைய பிளாஸ்ரிக் வாங்குதல்.
தொடர்பு : 077 592 5088/021 222 8680

**இலவச சேவிஸ்**
பஜாஜ் மோட்டார் சைக்கிள், ஓட்டோ, போன்றவற்றுக்கு இலவச சேவிஸ் செய்து கொடுக்கப்படும்.
இடம் : சந்நிதி முருகன் வேக்சொப் அன் சேவிஸ்
241, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8076 (சி/17616)(5.6.3)

**உங்கள் எடை குறைய**
ஐம்பதுக்கும் மேற்பட்ட இலகுவான உடற் பயிற்சிகள் (for your body hands, legs & abdomen) 15 நாள்கள் பெண்களுக்கு மாத்திரம்.
36, செட்டித்தெரு, நல்லூர். (53529) (4.6.3)
தொடர்பு: 021 222 0076/077 029 3263

**CEYLON THEATRES**
இப்பொழுது திரையில்
MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)




Platinum 10.30am, 2.30pm, 6.30pm
Silver 10.15am, 2.15pm, 6.15pm
(Hindi) with English Subtitles
(தமிழில்) Bronze 10.30am, 2.30pm, 6.30pm
விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

உதயன் விளம்பரத் தொடர்புக்கு–
advt@uthayan.com
0215671111


ஜெய் குருதேவ்
பூஜ்ய ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜியினால்
வடிவமைக்கப்பட்ட வாழும் கலைப்பயிற்சி-1

(பிரணாயாமம், யோகா, சக்தி வாய்ந்த சுதர்சனக்கிரியா) மேற்படி பயிற்சிக்கான அறிமுகஉரை நாளை (03.11.2014) திங்கள் மாலை 5.30 மணிக்கு நல்லூர் மகேஸ்வரன் மண்டபத்தில் நடைபெறும். பயிற்சி தொடர்ந்து 6 நாள்கள் காலை, மாலை வேளைகளில் நடைபெறும். (சி/17517)(4.6:3)

தொடர்பு: 077 932 2970/077 665 5408

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




எமது அலுவலகத்தில்
கடமையாற்றும்
**பரராஜசிங்கம் றமேஸ்**
அவர்கள் 2014.11.02ஆம் திகதி வவுனியாவில் நடைபெறும் வடக்கு மாகாண சபையின் 2013ஆம் ஆண்டுக்கான இலக்கிய விருது வழங்கல் விழாவில் சிறந்த சிறுவர் இலக்கியத்துக்கான விருதினைப் பெற்றுக்கொள்வதையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேன்மேலும் பல விருதுகளைப் பெற்று சிறப்படைய வாழ்த்துகின்றோம்.

**சக உத்தியோகத்தர்கள் காணி மாவட்டப் பதிவகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.**

(53536)(7.6.3)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




யா/ புனித பத்திரிசியார் கல்லூரியில் 2014 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றி 173 புள்ளிகளைப்பெற்ற பாஷையூரைச் சேர்ந்த ஜெயராஜ் கிறேஜினி தம்பதியின் செல்வப் புதல்வன் **ஜெகிசன்** அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் மேலும் கல்வியில் பல சித்திகளைப்பெற வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா,
அம்மம்மா, ஐயா, அன்ரியம்மா,
அப்பம்மா, மாமாமார், அன்ரிமார்,
அத்தைமார், பெரியம்மா, பெரியப்பா.


19/11, 2 ஆம் குறுக்குத்தெரு,
பாஷையூர். (53672) (4.6.3)

## பரிசளிப்பு விழா

நாவந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நாளைதிங்கட்கிழமை பிரதான மண்டபத்தில் காலை 9.00 மணிக்கநடைபெறும். பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் எம். சின்னத்தம்பியும், சிறப்பு விருந்தினராக நியூ லங்கா ரேடர்ஸ் முகாமைத்துவ பணிப்பாளர் லயன் டொன் ஸ்ரீபன் லியோனாட்டும் கலந்து கொள்வர். (ஒ-ரி)

## நிலப்பதிப்புக்கற்களின் சிறந்த தெரிவுகளுக்கு

**Interlock Paving Stones**




**பிரணவன் என்ரபிறைசஸ்**
635, பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம். (சங்கிலியன் சிலைக்கு முன்)
077 381 8799

## விசேட பல் வைத்திய நிபுணர்கள் வருகை



★ பல் முக சீராக்கல்
(Consultant orthodontist)
★ முக சத்திர சிகிச்சை
(Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

★ மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் சூலம்)
★ ஒழுங்கற்ற பற்களை சீராக்குதல்
★ தாடை மிதப்புகளை சீராக்குதல்
★ அண்ணப்பிளவு உதடுகளுக்கான சிகிச்சை
★ நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல்

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்ஷினி)

## பண்ணை முகாமையாளர் வெற்றிடம்

இலங்கை மெதடிஸ்த திரு அவையினால் நடத்தப்படுகின்ற நவஜீவனம் பண்ணைக்குப் பொருத்தமான முகாமையாளர் தேவைப்படுகின்றார்.

தகைமை:
விவசாயத்துறையில் தேர்ச்சி பெற்றவராகவும், மூன்று வருடங்களுக்குக் குறையாத பண்ணை முகாமைத்து வம் தெரிந்தவராகவும், இயற்கை முறை விவசாயத்தில் தேர்ச்சி உள்ளவராகவும், கணக்கியல், புத்தகப் பதிவுகள் மற்றும் அறிக்கை சமர்ப்பிக்கும் தேர்ச்சியுள்ளவராகவும், ஆங்கில அறிவு கொண்ட வராகவும் இருத்தல் வேண்டும்.

**உங்கள் விண்ணப்பங்களை**

முகாமையாளர்,
நவஜீவனம் பண்ணை,
2ஆம் கட்டை, பரந்தன்.


என்ற முகவரிக்கு நவம்பர் 17ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

நவஜீவனம் பண்ணை, 2ஆம் கட்டை, பரந்தன். (47610)(5.6.3)

## ICEMAN®

ICE MAN
**Technologies (Pvt) Ltd.,**
Unrivalled leader in complete cold chain solutions

சகல குளிர் சாதனங்களுக்குமான மொத்த தீர்வு வழங்குனர்



நமது பலம்
1. சரு இணையற்ற அனுபவம் வாய்ந்தவர்களை கொண்டது.
2. உலக தரத்திற்கான தயாரிப்புகள் - சிறந்த கூட்டுறவாளர்கள்
3. வாடிக்கையாளர்கள் வேண்டுகோளுக்கமைய அமைக்கப்பட்டது மொத்த தீர்வுக்கான உத்தரவாதம்
4. நற்தகைமையுள்ளோர், கடல் கடந்த நாடுகளில் பயிற்சியும், அனுபவமும் பெற்ற தொழில் நிபுணர்கள்
5. 24 மணித்தியாலம் / 365 நாள்கள்/ வாரந்தோறும், திருத்த வேலைகள் செய்து தரப்படும்
6. நவீன முறைப்படி அமைக்கப்பட்ட Work Shop, சகல விதமான உதிரிப்பாகங்களும் களஞ்சியப்படுத்தப்பட்டது.
7. தொடர்ச்சியான ஆராய்ச்சியும், அபிவிருத்தியும்

**Sales Inquires**
**0112239444 | 0777237546**

45, St.Theresa Mw., Rilaulla, Kandana 11320, SRI LANKA.
No.04, Krishnapillai Road, Eachchamodda, Jaffna.
Fax : 011 4830819, E-mail : suresh@icemanlk.com

www.icemanlk.com

GEA Copeland Carrier
LU-VE HEATCRAFT incold

(53539)



## இலண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலயம்



**எமது ஆலயத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.**

பணிநிலை : 1 ஆலய சிவாச்சாரியார்
Hindu Religious workers with non pastoral role

**தகைமைகள்:**
விண்ணப்பதாரி சிவாச்சாரியார் பட்டம் (குருக்கள்) பெற்றிருக்க வேண்டும்.
தமது பணிக்காலங்களில் சிவாச்சாரியாராகப் பணியாற்றியிருக்க வேண்டும்.
இறுதி 5 வருடங்கள் ஆலயக் குருக்களாகப் பணி செய்திருக்க வேண்டும்.
**கடமைகள்:** ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூசைகள் செய்தல்
**வேதனம்:**
பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது. விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகைமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன், அடியார்கள் வழங்கும் தட்சணை பங்கிடப்பட்டு வழங்கப்படும்.

**விண்ணப்ப முடிவு திகதி: 30.11.2014**

பணிநிலை : 2 நாதஸ்வர தவில் கலைஞர்கள்
Hindu Religious (Musicians) Workers

**தகைமைகள்:**
நாதஸ்வர, தவில் மேதைகளுக்கான சான்றிதழ்களைக் கொண்டிருப்பதுடன் தமது பிராய காலத்திலிருந்து இப்பணியைச் செய்து கொண்டிருப்பவராக இருக்க வேண்டும்.
**கடமைகள்:** ஆலய பூசைக்காலங்களில் மங்கல இசை இசைத்தல்
**வேதனம்:**பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது.

**விண்ணப்ப முடிவு திகதி: 30.11.2014**

ஆலய இணையத்தளத்தில் (www.ammancaling.org) பணி நிலை வேண்டுகைக்கான விண்ணப்பப்படிவம் தரவேற்றப்பட்டுள்ளது. விருப்புடையோர் அதனைப் பதிவிறக்கி பூர்த்தி செய்து ஆலய முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டுகின்றோம்.

5 Chapel Road, West Ealing, Middlesex, W 13 9 AE
Charity No-1014409
Email: info@ammanealing.org Web: www.ammancaling.org
Tel: 0044 208 8100 835 Fax: 0044 208 8400 485

(53577)(4.3.6)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## சாவு ஒருபோதும் தீர்வல்ல தூக்கை நீக்கி விடுங்கள்

ஹெரோயின் எனப்படும் போதைப் பொருளைக் கடத்தினார்கள் என்ற குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 5 பேரும் வடக்கு மீனவர்கள் 3 பேரும் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு அவர்களுக்கு உயர் நீதிமன்றத்தால் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டதைக் கண்டித்து தமிழ்நாட்டில் பெரும் களேபரங்கள் நடந்தன. பஸ்கள் எரிக்கப்பட்டன; சென்னையில் உள்ள இலங்கைத் தூதரகம் முற்றுகையிடப்பட்டது. அரசியல் கட்சிகள் அனைத்தும் போர்க் கொடி தூக்கின. இந்திய மீனவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பதே அவர்களின் வாதம். இதனை அடுத்து இந்த விடயத்தில் தலையிட்ட இந்திய அரசு, பாதிக்கப்பட்ட மீனவர்களின் மேன்முறையீடு தொடர்பில் நேரில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்துள்ளது. இதனை அடுத்து அங்கு பதற்றம் சற்றுத் தணிந்துள்ளது.

தமிழக மீனவர்களுடன் சேர்ந்து வடக்கு மீனவர்கள் மூன்று பேருக்கும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தபோதும் அது தமிழகம் அளவுக்கு இங்கு பாதிப்பை ஏற்படுத்தவில்லை. தண்டனை பெற்ற மீனவர்களின் உறவினர்கள் பலர் நேற்றுமுன்தினம் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். விதிக்கப்பட்ட தண்டனையைக் குறைக்கப் பரிந்துரை செய்யும்படி கோரும் விண்ணப்பம் ஒன்றையும் அவர்கள் யாழ். ஆயரிடம் வழங்கினர். அதைத் தவிர, வேறு சலசலப்புகள் இந்த விடயத்தில் எழவில்லை.

பொய்க் குற்றச்சாட்டுக்களின் கீழ் வழங்கப்பட்ட தீர்ப்பு என்று தமிழகத்தில் சொல்லப்படுவது உண்மையானால், வடக்கு மீனவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களும் பொய்யானவை என்றே அர்த்தப்படும். எனவே, தண்டனை பெற்ற மீனவர்களின் சார்பிலும் மேன்முறையீடு செய்வதற்கான உதவிகள் செய்யப்படுவது அவசியம்.

அதேநேரத்தில், எந்தவொரு குற்றத்திற்கும் தூக்குத் தண்டனை ஒருபோதும் தீர்வாக அமையாது என்பதே எமது உறுதியான கருத்து. சாவுகள் போரால் வந்தாலும் தூக்கால் வந்தாலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவை.

போதைப் பொருள் கடத்தல் மற்றும் விற் பனை போன்ற எதிர்கால சந்ததியைப் பாழாக்கும் குற்றங்கள் தடுக்கப்படவேண்டும் என்பதிலும் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அதி உச்சபட்ச தண்டனை மட்டும்தான் இவ்வகையான குற்றங்களைக் குறைக்கும் என்ற எண்ணம் நீண்டகாலமாக உண்டு. முன்னாள் சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்த கஜகிஸ்தான் மற்றும் அரபு நாடுகள் போன்றவற்றில் குற்றங்களுக்குக் கொடுக்கப்படும் மிகக் கடுமையான தண்டனைகள்தான் அங்கு குற்றங்கள் குறைவாக நடப்பதற்கான காரணம் என்ற வாதமும் ஏற்புடையதே. ஆனால் கடுமையான சட்டங்களால், தண்டனைகளால் மட்டுமே குற்றங்களைக் குறைத்துவிடவோ, நீக்கிவிடவோ முடியாது என்பதும் உண்மையே!

அதுபோன்றே தூக்கு போன்ற சாவுத் தண்டனைகளின் மூலமும் குற்றங்களை முற்றாக ஒழித்துவிட முடியாது என்பது நிதர்சனம். இந்த நிலையில் சாவுத் தண்டனைகள் வழங்கப்படுவதும் நிறுத்தப்பட வேண்டும். வடக்கு மற்றும் இந்திய மீனவர்களுக்கு விதிக்கப்பட்ட சாவுத் தண்டனைகள் மட்டும் அல்ல இந்த உலகத்தில் இருந்தே சாவுத் தண்டனைகள் முற்றாக ஒழிக்கப்பட வேண்டும்.

# இதுவும் முக்கிய நாள்




தட்சா. ஜோ

இன்று நவம்பர் 2 பத்திரிகையாளர்களுக்கு எதிரான தாக்குதல்கள் மற்றும் குற்றங்களுக்கு எதிரான நாள். பொதுவாகத் துறைசார்ந்தோர் மட்டுமே இதனை அறிந்திருந்தாலும் இது ஒரு முக்கிய தினம். ஊடகத்துறை சார்ந்தோர் காணாமற் போதல் உட்பட பலவகைகளில் பத்திரிகையாளர் மீதான தாக்குதல்கள் தொடர்கின்றன. ஆகவே தான் பொதுவான விழிப்பு ணர்வை ஏற்படுத்தும் நோக்குடன் ஐ.நாவினால் இந்த நாள் பிரகடனப்படுத்தப்பட் டுள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை ஊடகவியலாளர்கள் தாக்கப்படுதல் மற்றும் ஊடக நிறுவனங்கள் தாக்கப்படுதல் போன்றவை அடிக்கடி இடம் பெறும் சம்பவங்கள் என்பதுடன், ஊடகவியலாளர் கொலை என்பது 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 3 ஆம் திகதி நவரட்ணம் என்ற தமிழ் ஒளிப்படப்பிடிப்பாளர் கொலையுடன் ஆரம்பித்து அதனைத் தொடர்ந்து 1982, 1984, 1986, 1987, 1988, 1989, 1990 ஆகிய வருடங்களில் எல்லாம் ஊடகத் துறை சார்ந்த பணியாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதன் தொடர்ச்சியாக 1990 - 2000 வரையான காலத்தில் 1992 ஆம் ஆண்டு தவிர ஏனைய வருடங்களும் ஊடகத் துறை சார்ந்தோரைப் பலி எடுத்த ஆண்டுகளாகவே கொள்ளப்படுகின்றன.

இலங்கையில் பத்திரிகையாளர்கள் கொலை தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஆய்வுகளின்படி 1981 ஆம் ஆண்டுக்கும் 2009 ஆம் ஆண்டுக்கும் இடையில் 60 பேர் கொல்லப்பட்டுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. சர்வதேச ஊடகவியலாளர் அமைப்புகளின் ஆதரவுடன் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட கருத்துச் சுதந்திரம் தொடர்பான ஆய்வு அறிக்கையில் 2007 ஆம் ஆண்டு முதல் 2014ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியிலும் பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இதன் தொடர்ச்சியாகத் தெற்காசிய சுதந்திர ஊடகச் சங்கம் இந்த ஆண்டு ஜனவரி மாதம் வெளியிட்ட அறிக்கையில் இந்த எண்ணிக்கை 2013 ஆம் ஆண்டில் 80 ஆக அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உலகளாவிய ரீதியில் 1992ஆம் ஆண்டு 55 ஊடகவியலாளர்களும் தொடர்ந்து 1993இல் 72 பேரும் , 1994இல் 85 பேரும் , 1995இல் 61 பேரும், 1996இல் 34 பேரும் 1997ம் ஆண்டில் 35 பேரும், 1998இல் 37 பேரும், 1999இல் 53 பேரும், 2000ஆம் ஆண்டில் 45 பேரும் 2001இல் 54 பேரும், 2002இல் 35 பேரும், 2003இல் 53 பேரும், 2004இல் 75 பேரும், 2005இல் 59 பேரும் 2006இல் 86 பேரும் 2007இல் 92 பேரும் 2008இல் 66 பேரும் 2009இல் 97 பேரும் 2010இல் 75 பேரும், 2011இல் 81 பேரும் 2012இல் 104 பேரும் 2013இல் 96 ஊடகவியலாளர்களும் கொல்லப்பட்டுள்ளதாக சர்வதேச பத்திரிகையாளர்களை பாதுகாக்கும் அமைப்பினர் சுட்டிக்காட்டியுள்ளனர். இதேவேளை 2014ஆம் ஆண்டு இதுவரையில் 54 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

ஊடகவியலாளர்கள் தவிர்த்து ஊடகப் பணியாளர்கள் 2003 முதல் இன்று வரையான காலப்பகுதியில் 88 பேர் கொல்லப்பட்டுள்ளனர். துறைசார்ந்த ரீதியில் மொத்தமாக 1992ஆம் ஆண்முதல் இன்று வரை 1592 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இவர்களுள் 28 வீதத்தினர் ஒளிபரப்புநிருபர்கள், 18 வீதத்தினர் கமரா இயக்குநர்கள், 13 வீதத்தினர் பத்தி எழுத்தாளர்கள், 20 வீதத்தினர் ஆசிரியர்கள், 13 வீதத்தினர் ஒளிப்படவியலாளர்கள், 7 வீதத்தினர் இணையச் செய்தியாளர்கள், 31 வீதத்தினர் அச்சு ஊடக செய்தியாளர்கள், 9 வீதத்தினர் தயாரிப்பாளர்கள், 9 வீதத்தினர் வெளியீட்டாளர்கள், 6 வீதத்தினர் தொழில் நுட்பவியலாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கொல்லப்பட்டவர்களுள் 12 வீதத்தினர் இணைய ஊடகத்திலும், 53 வீதத்தினர் அச்சு ஊடகத்திலும், 23 வீதத்தினர் வானொலி ஊடகத்திலும், 33 வீதத்தினர் தொலைக்காட்சி ஊடகத்திலும் பணி புரிந்தவர்கள் என்பதுடன் இவர்களில் 93 வீதத்தினர் ஆண்களாகவும் 7 வீதத்தினர் பெண்களாகவும் உள்ளனர். கொல்லப்பட்ட 1630 பேரில் 17 வீதத்தினர் சுதந்திர ஊடகவியலாளர்களாகப் பணிபுரிந்துள்ளதுடன் இவர்களில் 20 வீதத்தினர் துப்பாக்கிச் சூடு மற்றும் சண்டைகளில் அகப்பட்டும் 13 வீதத்தினர் ஆபத்தான களப்பணிகளின் போதும் 66 வீதத்தினர் கொல்லப்பட்டும் உயிரிழந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் 22 வீதத்தினர் பணயக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டும், 38 வீதத்தினர் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டும், 12 வீதத்தினர் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டும் கொலை செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச பத்திரிகையாளர்களைப் பாதுகாக்கும் அமைப்பின் தரவுகள் தெரிவிக்கின்றன.

1992 முதல் இன்று வரையான காலப்பகுதியில் ஊடகவியலாளர்கள் உயிரிழந்த சம்பவங்களில் 89 சதவீதம் குற்றவாளிகளுக்கு எவ்வித தண்டனைகளும் வழங்கப்படவில்லை. 8 சதவீதம் ஓரளவு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 4 சதவீதம் மட்டும் முழுமையான விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன. கொல்லப்பட்ட 1592 பேரில் 166 பேர் ஈராக், 77 பேர் பிலிப்பைன்ஸ்,72 பேர் சிரியா, 60 பேர் அல்ஜீரியா, 56 பேர் பாகிஸ்தான், 56 பேர் ரஷ்யா, 53 பேர் சோமாலியா, 45 பேர் கொலம்பியா, 32 பேர் இந்தியா, 30 பேர் மெக்சிக்கோ, 29 பேர் பிரேஸில், 26 பேர் ஆப்கானிஸ்தான், 20 பேர் துருக்கி, 19 பேர் இலங்கை, 19 பேர் பொன்சியா, 17 பேர் ரஜகிஸ்தான், 17பேர் ருவாண்டா, 16 பேர் இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம், 16 பேர் சியராலியோன், 15 பேர் பங்களாதேஷைச் சேர்ந்தவர்கள்.

உயிரிழப்புத் தவிர 2013ஆம் ஆண்டுவரை 211 ஊடகத்துறை சார்ந்தவர்கள் சிறையில் வாடுவதாகத் தரவுகள் தெரிவிக்கின்றன. பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் ஊடகவியலாளர்கள் கைது செய்யப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகம் உள்ளன.

உலகளாவிய ரீதியை விடுத்து இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிவுற்றதாகக் கூறப்படும் நிலை யிலும் ஊடக சுதந்திரத்துக்கான அச்சுறுத்தல் குறைந்தபாடாக இல்லை. அது குறைவதற்காக ஊடகத்துறைக்கு எதிரான அடக்குமுறைகளைத் தடுக்க வேண்டுமானால், குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டும். ஆனால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாத நிலைதான் இலங்கையில் நிலவுகின்றது.

இதேவேளை ஊடக சுதந்திரத்தில் மாத்திரமல்லாது ஜனநாயகம் உட்பட ஏனைய உரிமைகள் தொடர்பிலும் இலங்கை, பல காலங்களுக்கு முன்னர் காணப்பட்ட சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு என்பவை அற்ற நிலையிலேயே இருப்பதாக சுதந்திர ஊடக இயக்கம் கருத்துத் தெரிவித்துள்ளது. உலகில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஊடக தரப்படுத்தலின் மூலம் இது உறுதியாகி இருப்பதாகவும் அந்த இயக்கம் கூறி யுள்ளது.


ஊடக சுதந்திரம் சகல மக்களினதும் மனித உரிமைகளுக்காக போராடும் போராட்டக் களமாகும். உலக ஊடக தினம் என்பது ஊடகவியலாளர்களுக்கும், ஜனநாயகத்தை விரும்பும் அனைவருக்கும் ஒரு முக்கிய தினமாகும்.

இலங்கையில் நீண்ட காலமாக இருந்து வந்த சுதந்திரம் மற்றும் பாதுகாப்பு என்பன காணாமல் போயுள்ள நிலையிலேயே நாம் பயணித்து கொண்டிருக்கின்றோம். உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சகல ஊடக புள்ளி விவரங்களும் இதனை உறுதிப்படுத்தியுள்ளன.

அமெரிக்காவின் நியூயோர்க் நகரைத் தளமாக கொண்ட சீ.பி.ஜே.விற்கு அமைய ஊடகவியலாளர்களுக்கு எதிராக குற்றங்கள் தொடர்பில் தண்டனை வழங்காத நாடுகளில் இலங்கை நான்காவது இடத்தில் உள்ளது. எல்லைகள் அற்ற ஊடகவியலாளர்கள் அமைப்பின் புள்ளி விவரங்களின்படி ஊடக சுதந்திரம் இல்லாத 177 நாடுகளில் இலங்கை 165 வது இடத்தில் உள்ளது.

ஊடக சுதந்திரத்தை அடக்குவதன் மூலம் இலங்கையில் ஜனநாயகமும் மக்களின் வாழ்க்கைச் சுதந்திரம் மாத்திரமல்லாது, உரிமைகள் சம்பந்தமாகவும் இலங்கை பின்தங்கியிருப்பது இதன் மூலம் வெளிப்பட்டுள்ளது.

# நித்திய சுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 191



# தூக்கம்
## ஆரோக்கியத்தின் அளவுகோல்

நித்திரைக்குச் செல்ல முன்னர் தேநீர், கோப்பி போன்றவற்றை உட்கொள்ளக்கூடாது. இவை மூளையைச் சுறுசுறுப் படைச் செய்து நித்திரையின் மையை ஏற்படுத்தி விடும்.

இன்றைய நவீன யுகத்திலே தொழில்நுட்பச் சாதன விருத்தியும், இயந்திரத்தனமான வாழ்க்கை முறையும் மனித ஆரோக்கியத்துக்குச் சவாலாக அமைந்துவிடுகின்றன. அந்த வகையிலே இன்று வேலை நேரங்கள் போக மீதி நேரங்களில் இணையம், பேஸ்புக், செல்போன் என நேரங்களைக் கழிப்பது அநேகருடைய வழக்கமாகிவிட்டது. இதனால் இரவு நேரங்களில் தூக்கத்தைத் தொலைத்துவிட்டு மூளைக்கும் ஏனைய அவயவங்களுக்கும் சற்று ஓய்வைக் கொடுக்கும் நேரத்தைக் குறைத்துக் கொள்கின்றனர்.

தூக்கமின்மை சம்பந்தமாக மனிதரிடையே காணப்படும் அலட்சியப் போக்கு ஆரோக்கியத்துக்குக் கேடாக அமைந்துவிடுகிறது. இதனை உள மருத்துவவியலாளர்களும், விஞ்ஞானிகளும் நிரூபித்துள்ளனர். மனித உடலானது மூளையின் கட்டளைகளுக்கமையச் செயற்படுகின்றது. மனித உடலினது இயற்கையான தூக்கம், விழிப்புக்கான கட்டுப்பாட்டு மையம் மூளையில் உள்ளது. இது வழக்கமாகச் செயற்படும் செயற்பாடுகளுக்கமைய ஒவ்வொருவரிடையேயும் மாறுபடலாம். இது உடலியல் கடிகாரம் எனப்படும். மூளையானது தேவையான அளவு ஓய்வைப் பெற்றதும், இசைவாக்கத்துக்கு அமைவாக நித்திரை விட்டெழுதலுக்குரிய கட்டளை பிறப்பிக்கப்படும். மனிதனுடைய அத்தியாவசிய தேவையானதும் மிக முக்கியமானதுமான ஒன்று தூக்கம் ஆகும். தூக்கம் சரியாகத் திருப்தியளிக்கப்படாவிடின் சாதாரணமான நாளாந்தச் செயற்பாடுகள் மாறுபடுவதும், உள ரீதியாக வித்தியாசமான தன்மை காணப்படுவதும் நாம் யாவரும் அறிந்த உண்மை. இந்த நிலை தொடர்ந்து செல்லுமாயின் மூளை அதற்கேற்பத் தன்னைப் பழக்கப்படுத்தி உடலியல் செயற்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தும் என ஹாவார்ட் மற்றும் சர்ரே பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆய்வின் மூலம் தெளிவு படுத்தியுள்ளனர்.

மேலும் உடலியல் கடிகாரச் செயற்பாட்டில் பங்கத்தை ஏற்படுத்துவதன் மூலம் உடல் நொதியங்கள், ஓமோன்களினது சுரப்பிலும் வித்தியாசம் ஏற்படுகின்றது. இது உடல் பருமன் அதிகரித்தல், உயர் குருதியமுக்கம், உளநோய் நிலைமைக்கு இட்டுச் செல்லலாம். எமது உடலில் இரவிலேயே கொழுப்புத் தொகுப்பு இடம்பெறுகின்றது. இதற்கு சமிபாட்டுத்தொகுதிக்கு போதுமான அளவு குருதிப் பரிமாற்றம் தேவைப்படுகிறது. உடல் அங்கங்கள் ஓய்வாக இருக்கும் போது இந்தச் செயற்பாடுகள் சிறப்பாக இடம்பெறும்.

எனவே பகல் நேரங்களில் உடலால் செய்யப்படும் செயற்பாடுகளினால் தசைநார்கள், அவயங்கள் களைப்படைந்து விடுவதால் நிறைந்த போதுமான அளவு ஓய்வை வழங்குவது அவசியம். அந்த வகையில் மாலை மற்றும் இரவு நேரங்களில் கணினி, தொடுதிரை பார்த்தல் மற்றும் கண்ணால் கூர்ந்து அதிக நேரம் பார்க்கும் செயற்பாடுகளைத் தவிர்த்தல் நல்லது. மேலும் மின்விளக்குகளில் நீல நிற வெளிச்சத்தை ஒளிர விடுதலையும் தவிர்த்தல் நல்லது. மேலும் நித்திரைக்குச் செல்ல முன்னர் தேநீர், கோப்பி போன்றவற்றை உட்கொள்ளக் கூடாது. இவை மூளையைச் சுறுசுறுப்படைச் செய்து நித்திரையின்மையை ஏற்படுத்திவிடும். மேலும் போதைப் பொருள் பாவனை, மது அருந்துதல் என்பனவும் நாளடைவில் தூக்க மின்மையை ஏற்படுத்தும்.

நல்ல சுகமான தூக்கத்தை ஏற்படுத்த எமது சூழலைச் சரியாகத் தயார்ப்படுத்த வேண்டும். நல்ல காற்றோட்டமுள்ள பாதுகாப்பான சூழலைத் தெரிவு செய்ய வேண்டும். தாக்கத்தை ஏற்படுத்தும் புறக்காரணிகளைக் குறைக்க வேண்டும். (சத்தம், வெளிச்சம்)இயலுமாயின் நித்திரைக்குச் செல்வதற்கு முன்னர் நன்றாகக் குளிப்பது உடல் நலத்துக்கும், மனச் சுகத்துக்கும் வாய்ப்பளிக்கும். மேலும் நித்திரைக்குச் செல்ல முன்னர் அதிக உணவை உட்கொள்ளல் நல்லதல்ல.

மேலும் மாலை நேரங்களில் உறவினர், நண்பர்களுடன் உறவாடி நேரத்தைச் செலவு செய்தால் மனம் சுதந்திரமடையும், இதனால் சுகமான உறக்கம் கிட்டும். இரவுக்கடமை புரிபவர்கள் தங்கள் வசதிக்கேற்ப நித்திரை நேரத்தை மாற்றியமைக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். போதுமான தூக்கத்தைப் பெற்று ஆரோக்கியமாக வாழ்வோம்.

பத்மராசா பத்மநிருபன்,
தாதிய உத்தியோகத்தர்,
(சத்திர சிகிச்சைப் பிரிவு),
யாழ். போதனா வைத்தியசாலை.

# எண்ணெய் தோய்ந்த சுன்னாகம் மண்ணை
## என்ன செய்யப் போகிறோம்?

> 1958 ஆம் ஆண்டில் இருந்தே சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தின் கழிவு எண்ணெய் அகற்றப்படும் பொறிமுறையிலே ஏதாவது பிரச்சினைகள் இருந்தனவா? அல்லது இடைக் காலங்களிலே இந்த விடயங்களில் உரிய கவனம் செலுத்தப்படவில்லையா?

சுன்னாகத்திலே பல கிணறுகளில் எண்ணெய்ப் படலங்கள் மிதப்பது தற்பொழுது ஒரு பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது. நிலத்தடி நீரில் கலந்திருக்கும் இந்த எண்ணெய்ப்படிவுகளால் பல சுகாதாரப் பிரச்சினைகள் ஏற்படும் சாத்தியக்கூறுகள் தோன்றி இருக்கின்றன. இதனால் ஏற்படக் கூடிய சுகாதாரப் பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கு பல்வேறுபட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டிய தேவை எழுந்திருக்கிறது.

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தின் சுற்றுவட்டாரப் பகுதியிலுள்ள நிலத்தடி நீருடன் கழிவு எண்ணெய் எவ்வாறு கலந்தது? 1958 ஆம் ஆண்டிலிருந்தே சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தின் கழிவு எண்ணெய் அகற்றப்படும் பொறிமுறையிலே ஏதாவது பிரச்சினைகள் இருந்தனவா? அல்லது இடைக் காலங்களிலே இந்த விடயங்களில் உரிய கவனம் செலுத்தப்படவில்லையா? அல்லது அண்மைக் காலத்து நடவடிக்கைகளில் ஏதாவது கவனக் குறைவுகள் இருந்தனவா? என்பன பற்றி எல்லாம் விவாதித்துக் கொண்டு இருப்பதிலும் பார்க்க, இந்த நிலையிலிருந்து மீட்சிபெறுவதற்கு இனி என்ன செய்யலாம் என்று சிந்திப்பது பயனுடையதாக அமையும்.

இந்தப் பிரதேசங்களில் காணப்படும் சில கிணறுகளில் எண்ணெயின் செறிவு லீற்றர் ஒன்றுக்கு 30 mg வரை காணப்படுகிறது. பல கிணறுகளில் இதன் செறிவு 3 mg தொடக்கம் 4 mg வரை வேறுபடுகிறது. இந்த எண்ணெய்ச் செறிவு உடல் நலத்துக்குப் பாதுகாப்பானது அல்ல. உலக சுகாதார நிறுவனங்கள் நீரிலே இவ்வாறான எண்ணெய்களின் செறிவு 0.2 mg இற்கு மேற்படாது இருக்க வேண்டும் என்று குறிப்பிடுகின்றன. சுன்னாகப் பிரதேசத்தை மையமாகக் கொண்ட எத்தனை கிலோ மீற்றர் சுற்றுவட்டாரப் பகுதி நிலத்தடி நீரிலே இந்த எண்ணெய் கலப்பு ஏற்பட்டிருக்கிறது. என்பது இன்னும் துல்லியமாக அறியப்படவில்லை.

இந்த நிலத்தடி நீருடன் கலந்துபோயிருக்கும் கழிவு எண்ணெயில் காணப்படும் மீனேல், பென்சீன் போன்ற அரேமற்றிக் ஐதரோகாபன்கள் உடல் நலத்துக்குத் தீங்கு விளைவிக்கக் கூடியன. இந்தக் கழிவு எண்ணெய்கள் தொடர்ச்சியாக உள்ளெடுக்கப்பட்டால் புற்றுநோய் ஏற்படும் அபாயம் அதிகமாகும் என்று நம்பப்படுகிறது. அத்துடன் இவை சில தோல் நோய்களையும் ஏற்படுத்தவல்லவை.

இந்த எண்ணெயில் கரைந்து காணப்படும் சில உலோகங்களும் நாளடைவிலே பல சுகாதாரப் பிரச்சினைகளைத் தோற்றுவிக்க வாய்ப்புண்டு. இந்த எண்ணெயிலே ஈயத்தின் செறிவு அதிகமாக இருந்தால் பல நரம்பு சம்பந்தமான நோய்களையும் குறோமியம் அதிகமாக இருந்தால் சிறுநீரகம் சம்பந்தமான நோய்களையும் ஏற்படுத்த முடியும். அத்துடன் கர்ப்பிணித் தாய்மார்களிலும் இந்த எண்ணெய் பல்வேறுபட்ட பாதிப்புகளை ஏற்படுத்த வாய்ப்புண்டு.

எனவே இந்தப் பகுதியில் வாழும் மக்கள் கிணற்று நீரைக் குடிப்பதையும் சமையலுக்குப் பாவிப்பதையும் தவிர்த்துக் கொள்வது நல்லது. கடலை நோக்கிய இயற்கையான நிலத்தடி நீரோட்டம் காரணமாக சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தின் வடக்கு நோக்கிய பகுதிகளிலே இந்த எண்ணெய் கூடுதலாகப் பரம்பலடைந்திருக்கிறது என்று நம்பப்படுகிறது. எனவே இந்தப் பகுதி மக்கள் அனைவருக்கும் மாற்றுக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப்பட வேண்டிய தேவை இருக்கிறது. இந்த முயற்சி ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் பகுதிகளிலே பெருமளவு விவசாய நிலங்கள் காணப்படுகின்றன. இந்த விவசாய விளைபொருள்களிலே இந்த எண்ணெய் ஆய்வுகள் நடத்தப்பட வேண்டிய தேவை இருக்கிறது. சில சேர்வைகளும் மூலகங்களும் மண்ணிலே குறைந்த செறிவிலே காணப்பட்டாலும் அந்த மண்ணில் வளரும் தாவரங்களிலே அவற்றின் செறிவு அதிகரிப்பதற்கான ஆபத்து நிலை இருக்கிறது. இந்தத் தொடர் செறிவாக்கல் பொறிமுறை காரணமாக இந்தப் பிரதேசங்களிலிருந்து பெறப்படும் விவசாய விளைபொருள்களிலும் பழவகைகளிலும் வேண்டப்படாத ஏதாவது சேர்வைகளின் செறிவு அதிகமாகக் காணப்படுகின்றதா? என்பது சம்பந்தமாகவும் ஆராயப்பட வேண்டி இருக்கிறது.

(இன்னும் வரும்)

*சி.சிவன்சுதன்.*
*வைத்திய நிபுணர்,*
*யாழ். போதனர் வைத்தியசாலை.*

# ஹொண்டா நிறுவனத்தின் ஸ்கூட்டர் வாகனங்கள்

மோட்டார் வாகனத்துறையில் தனக்கென ஒரு பெயரை நிலைநாட்டி தனது படைப்புக்களை உலகின் தொடுமுனை வரை பிரபல்யபடுத்திய பெருமை ஹொண்டா நிறுவனம் என்பது மறுக்க முடியாத உண்மையாகும். மாற்றங்கள் ஒன்றே மாறாது என்ற முதுமொழிக்கிணங்க தன் படைப்புக்களை ஒவ்வொருநாளும் ஏதோ ஒரு மாற்றத்துடன் உருவாக்கி கொண்டிருக்கும் நிறுவனம் ஹொண்டா மாத்திரமே. மோட்டார் வாகன துறையில் ஒரு புதிய புரட்சியை ஆரம் பித்தது என்ற பெயரை சிலநாள்களிலேயே ஹொண்டா நிரூபித்தது. தடைகளும் போராட்டங்களும் வருகின்ற பொழுதிலும் கூட ஒவ்வொரு தடைகளையும் தனக்கான அடுத்த வெற்றியின் அடித்தளமாகக் கொண்டு நவீன தொழில் நுட்பத்துடன் வாகனங்களைச் சந்தைக்கு நீங்காத சின்ன மாக ஹொண்டா வெளியிடுகின்றது.

இன்றைய காலகட்டத்தில் சந்தையில் மோட்டார் வாகனம் போன்றே ஸ்கூட்டருக்கான கேள்வியும் பாவனையும் அதிகளவில் காணப்பட்டு வருகின்றது. ஸ்கூட்டர் வாகனத்துக்கான கேள்வியை அடிப்படையாகக் கொண்டு இலங்கையின் எதிர்காலத்தில் மோட்டார் வாகனத்துறையில் ஸ்கூட்டர் வாகனம் 50% விற்பனையாக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறு இருக்க ஸ்கூட்டர் சந்தையில் 50% விற்பனை ஏற்கனவே ஹொண்டா நிறுவனதுக்கு உள்ளது என்பது குறிப் பிடத்தக்க விடயமாகும். ஸ்கூட்டர் வாகனத்தின் விற்பனை அதிகளவு இருக்கக் காரணம் இது இருபாலருக்கும் பொருந்துவதோடு குடும்பப் பெண்களின் தேவைக்கு அதிகமாக பயன்படுத்தப்படுகின்றது. ஹொண்டா நிறுவனத்தின் முதலாவது ஸ்கூட்டர் வகை Dio ஆகும். இது 2012 ஆம் ஆண்டில் ஹொண்டா நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த ஸ்கூட்டர் அறிமுகமாகி 45நாள்களில் 1000க்கு மேல் விற்பனையானது. இவ் வாகனம் 110 CC என்ஜின் கொள்ளளவுடன் சக்திமிக்க என்ஜினையும் கொண்டுள்ளதோடு ECO தொழிநுட்ப முறையில் தயாரிக்கப்பட்டுள்ளதோடு கொம்பிப்ரேக் கொண் டதும் ஆகும். அத்துடன் அடுத்த தலைமுறைக்கு ஏற்ற விதத்திலும் பொருளாதாரத்துக்கு ஏற்ற விதத்திலும் சிறந்த பாதுகாப்பு முறையிலும் அமைந்துள்ளதோடு நம்பகத்தன்மை வாய்ந்ததாயும் உள்ளது. அத்தோடு இவ் வாகனத்தை பாவிப்பதால் உடலுக்கு களைப்போ சோர்வோ ஏற்படாததோடு புதிதாக பழகுபவர்க்கும் இது இலகுவானது. மேலும் இதற்கான விசேட அம்சமாக டியுப்லஸ் டயர்கள் இருப்பதால் இடையில் காற்றிறக்கம் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அது ஒரு பெண்ணாக இருக்கும் போது அவள் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் பாதிக்கப்படுவாள் என்பதற்காக அந்த டயர் உடனே காற்றிறக்கம் ஏற்படாதவாறு அமைக்கபட்டுள்ளது. இவர்களின் மற்றொரு ஸ்கூட்டர் Activa ஆகும். இதுவும் ஹொண்டா நிறுவனத்தின் தலைசிறந்த படைப்பாகும். இந்தியாவில் ஸ்கூட்டர் வரிசையில் அதிகளவான விற்பனையைக் கொண்டது இதுவாகும். இந்த ஸ்கூட்டர் 110CC என்ஜின் கொள்ளளவைக் கொண்டதும் ஹொண்டா ECO தொழிநுட்பம் கொண்டதும் சுற்றாடலுக்கு ஏற்ற வகையிலும் அமைக்கப்பட்டது மான வாகனமாகும்.

ஹொண்டா நிறுவனத்தின் ஸ்கூட்டர் வரிசையில் பிரம்மாண்ட படைப்பாக Activa I உள்ளது என்பது விசேட அம்சமாகும். இந்த ஸ்கூட்டர் சமீபத்தில் வெளியாகியதுடன் இலங்கை யிலும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டது. இது 110CC என்ஜின் கொள்ளளவைக் கொண்டதும் ஹொண்டா ECO தொழிநுட்பம் கொண்டதுமாகும். இது கொம்பி ப்ரேக் கொண்டமைந்ததால் இலகுவாக ப்ரேக் பிடிக்கக் கூடியவாறு அமைக்கப்பட்டுள்ளது.

**Advertorial**

## மாணவர்களிடையே கைகளை கழுவும் பழக்கத்தை ஊக்குவிக்கும் டெட்டோல்



கைகளை கழுவுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலும், ஆரோக்கியமான பழக்க வழக்கங்களை ஊக்குவிக்கும் வகையிலும் சர்வதேச கைகள் கழுவும் தினம் அமைந்துள்ளது.

2014 ஆம் ஆண்டின் சர்வதேச கைகளை கழுவும் தினத்தை முன்னிட்டு, டெட்டோல் 'கைகளுக்கு உயிரூட்டுங்கள்' எனும் தலைப்பில் சர்வதேச செயற்றிட்டமொன்றை முன்னெடுத்திருந்தது.

கைகளின் சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் வகையிலும், டயரியா போன்ற தவிர்த்துக் கொள்ளக்கூடிய நோய்களிலிருந்து ஏற்படக்கூடிய மரணங்களிலிருந்து பாடசாலை சிறுவர்களை பாதுகாத்துக் கொள்ளும் வகையிலும் அமைந்திருந்தது.

சர்வதேச ரீதியில், பாடசாலை சிறுவர்கள் மத்தியில் ஏற்படக்கூடிய உயிரிழப்புகளை கட்டுப்படுத்தும் வகையில் அவர்களிடையே கைகளைக் கழுவும் பழக்கத்தை ஊக்குவித்து வருகிறது. இந்த வருடம், சவர்க்காரம் கொண்டு கைகளைக் கழுவுவது தொடர்பில் 20000 க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. வருட நிறைவினுள் மொத்தமாக 32000 பாடசாலை மாணவர்களை உள்ளடக்க டெட்டோல் திட்டமிட்டுள்ளது. பாடசாலை சிறுவர்கள் மத்தியில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது. ஏனெனில் டயரியா போன்ற நோய்கள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் இவர்கள் மத்தியில் அதிகளவில் காணப்படுகின்றது.

சுகாதார அமைச்சுடன் கைகோர்த்து டெட்டோல், அனுராதபுரத்தில் கைகளைக் கழுவும் திட்டத்தை முன்னெடுத்திருந்தது. இலங்கையின் பாடசாலை சிறுவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், அனுராதபுரத்தைச் சேர்ந்த 33 பாடசாலைகளில் கைகளைக் கழுவும் செயற்பாடுகளை டெட்டோல் முன்னெடுத்திருந்தது.

2014 ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி இந்த திட்டம் ஆரம்பமாகியிருந்தது. சவர்க்காரம் கொண்டு கைகளைக் கழுவிக் கொள்வதன் முக்கியத்துவம் தொடர்பில் பெருமளவான பாடசாலைச் சிறுவர்களுக்கு விளக்கங்கள் வழங்கப்பட்டிருந்தன. கிருமிகள் பற்றி அறிந்து கொள்வதற்கும், அவற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பிலான விளக்கங்களும் சிறுவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.

அவர்கள் மேலும் பல விளையாட்டுக்களிலும், இதர கல்விசார் விழிப்புணர்வுச் செயற்பாடுகளிலும் பங்குபற்றியிருந்ததுடன், தொற்றுக்களைத் தவிர்ப்பதற்கு சவர்க்காரம் கொண்டு கைகளைக் கழுவுவது தொடர்பிலான ஊக்குவிப்புகளும் வழங்கப்பட்டிருந்தன.

அனுராதபுரத்தின் சிரேஷ்ட பொது சுகாதார மேற்பார்வையாளர் கருத்து தெரிவிக்கையில்,

பாடசாலை சிறுவர்களுக்கு கைகளை கழுவுவதன் முக்கியத்துவம் பற்றிய விளக்கங்களை வழங்குவது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அனுராதபுரத்தில் சர்வதேச கைகளை கழுவும் தினத்தை முன்னிட்டு வெவ்வேறான ஆக்கபூர்வமாகச் செயற்றிட்டங்கள் பல முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதில் பாடல் ஒன்றும் இடம் பெற்றிருந்தமை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும் என்றார்.

ரெக்கிட் பென்கீசர் நிறுவனத்தின் வணிக பணிப்பாளர் சின்கிளெயார் குரூஸ் கருத்து தெரிவிக்கையில்,

இலங்கையர்கள் மத்தியில் பாதுகாப்பை ஏற்படுத்தும் வகையில் டெட்டோல் பல தலைமுறைகளாக தனது பங்களிப்பை வழங்கி வருகிறது. இலங்கையின் மில்லியன் கணக்கான நுகர்வோருக்கு இலகுவில் பெற்றுக் கொள்ளக்கூடிய தூய்மையான தீர்வுகளை டெட்டோல் வழங்கி வருகிறது. ஒவ்வொரு வருடமும் டெட்டோல் சர்வதேச கைகளைக் கழுவும் தினத்தை கொண்டாடுவதுடன், சிறுவர்கள் மத்தியில் கைகளைக் கழுவும் பழக்கத்தை ஊக்குவித்தும் வருகிறது என்றார். (த)



இலங்கையின் நிதி முகாமைத்துவ நிறுவனங்களில் ஒன்றான சீபேங்க் கின் வட பிராந்திய முதலாவது கிளை அண்மையில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கியின் மேற்தரக் கிளையின் முதலாம் மாடியில் இலங்கை வங்கியின் பொது முகாமையாளர் டி.எம். குணசேகரவால் திறந்து வைக்கப்பட்டது. (த-20)



இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபனத்தினால் 2013 க்கான சுப பெத்தும் திட்டத்தின் கீழ் 5 ஆம் ஆண்டு புலமைப் பரீட்சை, க.பொ.த சாதாரண, உயர்தர பரீட்சையிலும் தோற்றி மாவட்டங்கள் ரீதியில் 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் இடத்தைப் பெற்ற மாணவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு தேசிய ரீதியில் கொழும்பு பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இதனை சிறப்பிக்கும் முகமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் விருது பெற்ற மாணவர்களை இலங்கை காப்புறுதிக்கூட்டுத்தாபன முல்லைத்தீவுக் கிளையின் சார்பாகப் பாராட்டு நிகழ்வு ஒன்று நடைபெற்றது. இந்த நிகழ்வில் வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி உ. முனீஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும், அதிபர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், காப்புறுதிக்கூட்டுத்தாபன ஊழியர்கள் கலந்து சிறப்பித்தனர். (த)

# கூட்டுறவை நவீனமயப்படுத்த எதிர்காலத்தில் ஏற்ற நடவடிக்கை

## ஜனாதிபதி தெரிவித்தார்

யாழ்ப்பாணம், நவ.2

தற்போதைய வரவு - செலவுத் திட்டத்தில் கூட தனியார் துறை சம்பள உயர்வுக்கு உள்வாங் கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் கூட்டுறவை நவீன மயப்படுத்துவதற்கு அரசு ஏற்ற நடவ டிக்கையை மேற்கொள்ளும்" என்று தெரி வித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

நாட்டில் உள்ள கூட்டுறவாள்ர்கள் கடந்த திங்கட்கிழமை அலரி மாளிகையில் ஜனாதி பதியைச் சந்தித்தனர். அப்போது கூட்டுறவின் கொள்கை என்ற விளக்க நூலை ஜனாதிபதி வெளியிட்டு வைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:



கூட்டுறவாளர்கள் எனக்கு எல்லா உதவிகளை யும் செய்யுங்கள். உங்களுக்காகவே நான் இருக்கின்றேன். இந்த வரவு - செலவுத் திட்டம் மூலம் சம்பள உயர்வும் உங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவாளர்களை நான் கைவிடவில்லை. நீங்கள் எனக்கு உதவுங்கள். நான் என்றுமே உங்களுக்காக எதையும் செய்வேன்- என்றார்.

அலரி மாளிகையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நாட்டில் இருந்து எண்ணாயிரம் வரையிலான கூட்டுறவாளர்கள் கலந்து கொண் டனர்.

வட மாகாணத்தில் இருந்தும் ஐநூறுக்கும் மேற்பட்ட கூட்டுறவாளர்கள் கலந்து கொண் டனர்.

வடமாகாண கூட்டுறவு உள்ளூராட்சி அமைச் சின் செயலாளர் எஸ்.திவாகர், வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார் ஆகியோரும் நிகழ்வில் கலந்து கொண்டனர்

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வட மாகா ணத்தைச் சேர்ந்த கூட்டுறவுவாளர் ஒருவர் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில்:

"நாம் எதிர்பார்த்துச் சென்றது ஒன்று. ஆனால் நடந்ததோ வேறு . கடந்த காலப் போரால் வடக்கில் கூட்டுறவுத்துறையே பெரிதும் பாதிக்கப்பட்டது. தற்போது அனேகமான கூட்டுறவுச் சங்கங்கள் போதிய வியாபார வருமானம் இன்றி பாதிக் கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் கூட்டுறவு சங்கங்களில் சம்பள உயர்வு கொடுப்பனவுகளைக் கூட வழங்க முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது.

அனேகமான சங்கங்களில் கொடுப்பனவுகள் கிடைக்காது பணியாளர்கள் பணியை விட்டு விட்டு செல்கிறார்கள். இந்த நிலைமையில் அரசு சங்கங்களுக்கு மானியக் கொடுப்பனவுகளை வழங்கி பணியாளர்களைப் பாதுகாக்க வேண் டும். அரசால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் கூட்டுறவு பற்றி எதுவும் குறிப்பிடப்பட வில்லை. எனவே கூட்டுறவாளர் களுக்கான சம்பள உயர்வு குறித்து அரசு கூடிய நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் அந்தக் கூட்டுறவாளர் தெரிவித்தார். (வ-17)

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலை வருமானம் 250 கோடிக்கு மேல்

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பயணக் கட்டண வருவாய் இந்த ஆண்டின் முடிவில் 250 கோடி ரூபாவைத் தாண்டி விடும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

2011ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்ட இந்த நெடுஞ்சாலைத் தடத்தில் கடந்த செப்ரெம்பர் மாதம் வரையில் அனுமதிப்பத்திரங்கள் மூலமான வருவாய் 189. 44. 6650 ரூபா வாகும் என்று வீதி அபிவி ருத்தி அதிகார சபையால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தக்கால இடைவெளியில் இந்தப் பயண வழித்தடத்தில் பயணித்துள்ள ஒட்டுமொத்தமான வாகனங் களின் எண்ணிக்கை 49. 94. 876 ஆகும்.

வார நாள்களில் ஒரு நாளைய வருவாய் 50 இலட்சம் ரூபாவைத் தாண்டுவதோடு வார இறுதித் தினம் ஒன்றில் கிடைக்கும் வருவாய் 65 லட்சம் ரூபாவைத் தாண்டுவதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது. மேலும், இந்த தெற்கு அதிவேக மார்க்கம் திறந்துவிடப்பட்டு எதிர் வரும் நவம்பர் 27ஆம் திகதியன்று மூன்று ஆண்டுகள் நிறைவடைகின்றன. (வ-22)




# வாகனங்களுக்கான விலை குறிப்பிட்ட அளவு குறைந்தன

## இலங்கை மோட்டார் வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவிப்பு

கொழும்பு, நவ.2

வரவு-செலவுத் திட்டத்தில் இந்த முறை தீர்வைக் கட்டணங்கள் குறைக்கப்பட்டுள்ளதன் காரண மாக வான், கார் மற்றும் பயணிகள் பஸ்களின் விலைகள் குறிப்பிடத்தக்க மட்டங்களில் குறைந்திருப்பதாக இலங்கை மோட்டார் வாகன இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவிக் கிறது.

விசேடமாக 1000 சீ.சீ. எஞ்சின் கொள்ளவை விடக் குறைந்த மோட்டார் வாகனங்கள், அதாவது சிறியரக வான், மோட்டார் கார் மாருதி வகையைச் சேர்ந்த மோட்டார் கார், டிமோ பட்டா வான் ஆகியவற்றின் விலைகள் இந்த விதம் ஒன்றரை லட்சம் ரூபாவிலிருந்து இரண்டு லட்சம் ரூபா வரையில் குறையும் என்று - இலங்கை மோட்டார் வாகன இறக்கும தியாளர்கள் சங்கத்தின் தலைவரான மஹிந்த சரத்சந்திர தெரிவித்துள்ளார்.

'ஹைபிரைற்' வகை மோட்டார் கார் ஒன்றின் விலை சுமார் ஒரு லட்சம் ரூபா வரையிலும், 13 இற்கும் 20 இற்கும் இடைப்பட்ட ஆசனங் களைக் கொண்டுள்ள வான் ஒன்றின் விலை 7 லட்சம் முதல் 10 லட்சம் வரையிலும் குறை வடையும்.

பயணிகள் பஸ்களுக்கான தீர்வைக் கட்ட ணங்கள் குறை வதால் அந்த பஸ் ஒன்றின் விலை 4 லட்சம் முதல் 5 லட்சம் வரையில் குறையும் என்றும் அவர் தெரிவித் துள்ளார்.

இதற்கு மேலதிகமாக இறக்குமதித் தீர்வைக் கட்டணங்களை அறவிடப்படுவதில் இலகு நடைமுறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டிருப் பதால் வாகன இறக்குமதியாளர்களுக்கு நிவாரணம் கிட்டியிருப்பதாகவும் அவர் தெரி வித்துள்ளார். (வ-22)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111






# வடக்கு - தெற்கு உறவுப் பாலத்தின் எதிர்காலத்திற்காய் சம்பத் வங்கியின் மற்றுமோர் தேசிய பங்களிப்பு!

சம்பத் வங்கி பொதுநல சேவையின் நிதிப் பங்களிப்புடன் 'தெற்கின் நண்பன்' வடக்கு ரயில் பாதை புனரமைப்புப் பணிகளின் கீழ் புனரமைக்கப்பட்டுள்ள நாவற்குழி புகையிரத நிலையத்தைப் போலவே சாவகச்சேரி மற்றும் நாவற்குழி சிறுவர் புத்தகசாலைகள் மற்றும் சிறுவர் பூங்காவைத் திறந்து வைத்து இன்று போல் நாளையும் எதிர்காலத்திலும் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக தேசத்திற்கு அன்பளிப்புச் செய்கின்றோம்.

பொது மக்களின் நன்மைக்கு கரம் கொடுக்கவே நாம் ஒவ்வொரு காலடியையும் முன்னெடுத்து வைக்கின்றோம்.





புகையிரத நிலைய திறப்பு விழாவின்போது



புகையிரத நிலையத்தின் உடபுறத் தோற்றம்




A9 வீதியிலிருந்து புகையிரத நிலையத்தின் தோற்றம்




நாவற்குழி சிறுவர் பூங்காவை திறந்து வைக்கும்போது



சாவகச்சேரி மற்றும் நாவற்குழி சிறுவர் புத்தகசாலைகள் திறந்து வைக்கப்படும்போது



நாவற்குழி புகையிரத நிலைய நிர்மாணப் பணிகளின்போது



யுத்த காலத்தில் சேதமடைந்த நாவற்குழி புகையிரத நிலையம்



நாவற்குழி புகையிரத நிலைய புனரமைப்பிற்கு முன்

சம்பத் வங்கி
எதிர்காலத்தின் முன்னோடிகள்

Sampath Bank Fitch Ratings AA-(lka) 0112 30 30 50 www.sampath.lk

# எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆசிய வலயக் கண்காணிப்பாளர்கள்

எதிர்காலத்தில் நடத்தப்படவுள்ள ஜனாதிபதித் தேர்தலைக் கண்காணிப்பது தொடர்பாக இலங்கைக்கு உதவுவதற்கு ஆசிய தேர்தல் கண்காணிப்பு வலையமைப்பு இணக்கம் தெரிவித் திருப்பதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரான ரோஹண ஹெட்டியாராய்ச்சி சிங்களப் பத்திரிகையொன்றுக்குத் தெரிவித்துள்ளார். தேர்தல் கண்காணிப்புச் செயற்பாடுகள் தொடர்பாக வெளிநாட்டுத் தேர்தல் கண்காணிப் பாளர்கள் 30 பேர் கொண்ட குழுவொன்று ஜனாதிபதித் தேர்தல் பிரகடனப்படுத்தப்பட்டதன் பின்னர் இலங்கைக்கு வரத் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். மேலும் இலங்கைக்கு வரவுள்ள தேர்தல் கண் காணிப்பாளர்கள், தாய்லாந்து, பங்களாதேஷ், நேபாளம், பிலிப்பைன்ஸ், பாகிஸ்தான், தென்கொரியா மற்றும் பூட்டான் உள்ளிட்ட ஆசிய வலயத்தைச் சேர்ந்த நாடுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் ரோஹண ஹெட்டியாராய்ச்சி தெரிவித்துள்ளார். (வ-22)












கிளிநொச்சி முழங்காவிலை வசிப்பிடமாக கொண்ட கதிரவேலு பொன்னுச்சாமி தனது 80 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு முதியோர்களை கௌரவித்த நிகழ்வு அண்மையில் நடை பெற்றது.

முழுங்காவில் பொது நோக்கு மண்டபத்தில் கிராம அலுவலர் பா.நகுலேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக பூநகரி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் கலந்து கொண் டார். பூநகரி சமூகசேவை உத்தி யோகத்தர், முழுங்காவில் மகா வித்தியாலய அதிபர் ப.ஆனந்தராசா, மருத்துவர் எஸ். செல்வம் ஆகியோரும் கலந்து கொண்டு முதியோர்களுக்கு மதிப்பளித்தனர். அவர்களுக்கு ஆடைகள் வழங்கப்பட்டதுடன் இந்தக் கிராமத்தை சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட முதியோர்கள் மதிப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (வ-18)





முல்லைத்தீவு கல்வி வலயத்தில் உள்ள பாடசாலைகள் இணைந்து வலய மட்டத்தில் நடத்திய உலக ஆசிரியர் நாள் நிகழ்வுகள் கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை கேட்போர் கூடத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி உ.முனீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராசா கலந்து கொண்டு சிறப்பித்தார். சிறப்பு நிகழ்வாக போரின்போது சாவடைந்த அனைத்து ஆசிரியர்களதும் நினைவாக பிரதான மெழுகுவர்த்திச் சுடரை பிரதம விருந்தினர் ஏற்ற தங்கள் கைகளில் வைத்திருந்த மெழுகுவர்த்திகளை ஆசிரியர்கள் ஏற்றி வைத்தனர். (வ-433)







புற்றளை மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற ஆசிரியர் தின நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமராட்சிக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஐ.செல்வராசாவும் ஆசிரியர்களும் அழைத்துவரப்படுகின்றனர். பிரதம விருந்தினர் ஆசிரியர் ஒருவருக்கு நினைவுப் பரிசில் வழங்குகிறார். பிரதம விருந்தினருக்கு பெற்றோர், பழைய மாணவர்கள் சார்பாக இலங்கை வங்கி முகாமையாளர் திருமதி பிரபாகர் நினைவுப் பரிசில் வழங்குகிறார். (வ-108)





2014 ஆம் ஆண்டுக்கான புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த வவுனியா திருஞானசம்பந்தர் வித்தியாலய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு வியாழக்கிழமை வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் வித்தியாலய அதிபர் கருணாநிதி தலைமையில் நடைபெற்றது.

வித்தியாலயத்தி லிருந்து தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றிய 48 மாணவர்களில் இ.திசேர்ன் (171 புள்ளிகள்), மு.சதுஜு (164 புள்ளிகள்), ஜெ.டில்ருக்சி (158 புள்ளிகள்) ஆகிய மூன்று மாணவர்கள் சித்தியடைந் துள்ளனர்.

குறித்த மாணவர்கள் மூவரும் பதக்கங்கள், கேடயங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

புலமைப்பரிசில் பரீட் சைக்கு தோற்றிய மாணவர்களை பயிற்றுவித்த ஆசிரியர்கள் திருமதி சி.கணேசலிங்கம், திருமதி கௌ.கேதீஸ்வரன் ஆகியோரும் மாணவர்களின் பெற்றோரால் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர். (வ-402)



சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாத சிவன் ஆலயத்தில் இடம்பெற்ற கேதார கௌரி விரத பூசை நிகழ்வுகளில் பக்தர்கள் வழிபாடுகளில் கலந்து கொண்டு காப்புக் கட்டிய போது. (வ-9)



2013 ஆம் ஆண்டு இடம் பெற்ற தேசிய வாசிப்பு மாத நிகழ்வுகளில் பாடசாலைகளின் சிறந்த நூலகமாகத் தெரிவு செய்யப்பட்ட மருதனார்மடம் இராமநாதன் கல்லூரிக்கு கடந்த 29 ஆம் திகதி கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் வைத்து சான்றிதழ்களும் வெற்றிக் கேடயமும் வழங்கப்பட்டன.
கல்லூரியின் நூலகர் திருமதி மாலா உதயகுமார் மற்றும் ஆசிரியை திருமதி இராமச்சந்திரன் சான்றிதழ்களைப் பெற்றபோது... (ஒ-86)







முல்லைத்தீவு செலான் வங்கியினரின் சிறுவர் தினத்தை ஒட்டியதான சிறுவர்களுக்கான பட்டம் விடும் போட்டி முல்லைத்தீவு கடற்கரையில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது. (ஒ-433)



கோண்டாவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா கல்லூரி அதிபர் எஸ். தவகீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக புளொட் தலைவரும் வடமாகாண சபை உறுப்பினருமான த.சித்தார்த்தனும் சிறப்பு விருந்தினரான சின்மயா மிஷனின் சுவாமி பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்ய ஆச்சாரியாரும் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினர். (ஒ-86)



கைதடி நவீல்ட் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு நிகழ்வில் இலங்கைத் திருச்சபையின் கொழும்பு பேராயர் டிலோறாஜ் றஞ்சித் கனகசபை மற்றும் அவரது பாரியாரான ஹர்சினி கனகசபை ஆகியோர் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் அழைத்து வருவதைக் காணலாம். (ஒ-4)

மக்கள் நலன் பேணும் அமைப்பின் இரண்டாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு உதவி தேவைப்படும் மாணவர்களை தெரிவு செய்து உதவிப் பணம் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் 35 மாணவர்களுக்கு மாதாந்தம் 1000 ரூபா பணக் கொடுப்பனவும் 40 மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்ட நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரன் மாணவி ஒருவருக்கு உதவிக் கொடுப்பனவை வழங்குவதையும் மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம், அமைப்பின் தலைவர் ஆகியோர் உரையாற்றுவதையும் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியையும் காணலாம். (ஒ-10)









# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**நாளை**

ஐப்பசி-17 திங்கட்கிழமை 03.11.2014
திதி: ஏகாதசி மு.ப.11.24 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி மு.இ.07.46 வரை
சுபநேரம்: 12.04 - 01.34 வரை
இராகுகாலம்: 07.34-09.04 வரை

**மேடம்:** உணர்ச்சி பூர்வமாகப் பேசுவதை விட்டு அறிவுபூர்வமாகப் பேசுவீர்கள். செயற்படுவீர்கள். நீண்ட நாள்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வருவார். உத்தியோகத்தில் உங்கள் உழைப்புக்குப் பாராட்டுக் கிட்டும்.

**இடபம்:** நீண்டநாள் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் நெளிவு, சுளிவுகளைக் கற்றுக் கொள்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் ஆதாயமடைவீர்கள்.

**மிதுனம்:** தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள். சிலர் உங்களைத் தாழ்த்திப் பேசினாலும் கலங்காதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**கடகம்:** விரும்பிய பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும்.

**சிங்கம்:** பிரியமானவர்களுக்காகச் சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். உங்களால் வளர்ச்சியடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் வரும்.

**கன்னி:** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். நட்பால் ஆதாயம் உண்டு. வியாபாரத்தில் வாடிக்கையாளர்களைக் கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். உத்தியோகத்தில் சூட்சுமங்களை உணருவீர்கள்.

**துலாம்:** பால்ய நண்பர்கள் உதவுவார்கள். வெளியூர் பயணங்களால் அலைச்சல் இருந்தாலும் ஆதாயமும் உண்டு. உத்தியோகத்தில் உயரதிகாரிகள் ஆதரிப்பார்கள்.

**விருச்சிகம்:** தன்னிச்சையாகச் சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் வேலையாள்களைத் தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்குப் பல ஆலோசனைகள் தருவீர்கள்.

**தனுசு:** உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். உறவினர்கள் உங்களைப் புரிந்து கொள்வார்கள். உத்தியோகத்தில் இழந்த உரிமையைப் பெறுவீர்கள்.

**மகரம்:** புதிய முயற்சிகள் தள்ளிப் போய் முடியும். அடுத்தவர்கள் மனம் காயப்படும் படி பேசாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளிடம் அதிக உரிமை எடுத்துக் கொள்ள வேண்டாம்.

**கும்பம்:** குடும்பத்தில் விட்டுக்கொடுத்துப் போவது நல்லது. திடீர் பயணங்களால் திணறுவீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை அனுசரித்துப் போங்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும்.

**மீனம்:** தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். மற்றவர்களுக்காகச் சில செலவுகளைச் செய்து பெருமைப்படுவீர்கள். உத்தியோகத்தில் புதிய சலுகைகள் கிடைக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1 | | 8 | | 9 | 6 | | |
| | | 6 | | 1 | | 8 | | 7 |
| 8 | | | | 4 | 7 | | 5 | |
| 5 | 4 | | | | | | 6 | |
| | | | 1 | 6 | 4 | | | |
| | 7 | | | | | | 1 | 2 |
| | 3 | | 7 | 9 | | | | 1 |
| 9 | | 7 | | 5 | | 2 | | |
| | | 4 | 2 | | 3 | | 9 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 8 | 6 | 2 | 9 | 3 | 5 | 1 | 4 |
| 5 | 9 | 3 | 7 | 1 | 4 | 6 | 2 | 8 |
| 1 | 2 | 4 | 5 | 8 | 6 | 7 | 9 | 3 |
| 6 | 5 | 8 | 3 | 4 | 9 | 1 | 7 | 2 |
| 2 | 3 | 1 | 6 | 5 | 7 | 8 | 4 | 9 |
| 9 | 4 | 7 | 1 | 2 | 8 | 3 | 5 | 6 |
| 4 | 7 | 2 | 8 | 6 | 1 | 9 | 3 | 5 |
| 8 | 1 | 9 | 4 | 3 | 5 | 2 | 6 | 7 |
| 3 | 6 | 5 | 9 | 7 | 2 | 4 | 8 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# SLITA

## SRI LANKA INSTITUTE OF TEXTILE AND APPAREL

## இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகம்

### ஆடை உற்பத்தி முகாமைத்துவ சான்றிதழ்

### (Certificate in Garment Production Management)

இலங்கை புடைவை மற்றும் ஆடைகளுக்கான நிறுவகமானது புடைவை மற்றும் ஆடைத் தொழில்சார் தொழில்நுட்ப பயிற்சி நெறிகளை வழங்குவதுடன் புடைவை மற்றும் ஆடைத்தொழிற்துறையுடன் தொடர்புடைய சேவைகளான தரப்பரிசோதனை, தொழில்நுட்ப ஆலோசனை, வேலை வாய்ப்புகள் போன்ற இதர சேவைகளையும் வழங்கும் முன்னணி நிறுவகமாகும்.

இந்த நிறுவகத்தினால் அண்மையில் திறக்கப்பட்ட மன்னார் கிளையானது பாடசாலைக் கல்வியை நிறைவுசெய்து வேலைவாய்ப்புக்களை எதிர்பார்த்திருப்பவர்களும், ஆடைத்தொழிற்சாலையில் தொழில் புரிவோரும் பயனுறும் வகையில் ஆடை உற்பத்தி முகாமைத்துவ சான்றிதழ் (Certificate in Garment Production Management) பயிற்சி நெறியை ஆரம்பிக்கவுள்ளது.

**காலம்:** 11 வாரங்கள் (முழு நேரம்)

**மொழி:** தமிழ் / ஆங்கிலம்

**தகைமைகள்:** க.பொ.த சாதாரணதர பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் உட்பட 4 பாடங்களில் திறமைச்சித்திகளுடன் க.பொ.த உயர்தர பரீட்சையில் 2 சித்திகள்.

**பயனுறுவோர்:** இந்தப் பாடநெறியானது ஆடை உற்பத்தி தொடர்பான அடிப்படை அறிவைப் பெற்றுக்கொள்ள உதவுவதோடு, ஆடை உற்பத்தித் துறையில் தமது தொழில் வாய்ப்புக்களைப் பெறவும் வாய்ப்பளிக்கிறது.

**Content:**
Production Management, Work study, Sewing Practice, Quality Control, Pattern Constrution Procedure, Garment Analysis, Method Study, In - Plant Training, Production Planning, Line Balancing and Basic Textiles.

மேலதிக தகவல்களுக்கு: ஹஸ்ரின் - 071 230 6610 / hasanhasrin123@gmail.com

(C17506)(12.3.6)

தொலைபேசி: 0112632406 / 011 263 6917
மின்னஞ்சல்: train@textile-clothing.lk
இணையம்: www.textile-clothing.lk

**பணிப்பாளர் நாயகம்**
இலங்கை புடைவை மற்றும் ஆடை நிறுவகம்
இல.127/18A மன்னார்

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க பொதுமுகாமையாளர்
வே.செல்வகாந்தனின்
அன்புத் தாய்
**திருமதி சரஸ்வதி**
**வேலாயுதம்**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

பணிப்பாளர்களும், பணியாளர்களும்.
சுன்னாகம் பல.நோ.கூ. சங்கம்.
(53550) (12.3.6)

## மரண அறிவித்தல்



### திருமதி சரஸ்வதி வேலாயுதம்

ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாகவும், சூராவத்தை, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி வேலாயுதம் நேற்று (01.11.2014) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பூதப்பிள்ளை - குட்டிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வேலாயுதம் அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, அன்னம்மா மற்றும் பாக்கியம் (கனடா) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சிறிக்காந்தன் மற்றும் ஜெயகாந்தன் (இந்தியா) நசந்தினி (லண்டன்), ரவிகாந்தன் (துரை பேக்கறி உரிமையாளர்), செல்வகாந்தன் (பொதுமுகாமையாளர், ப.நோ.கூ.ச - சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயும், நாகசயந்தினி, யோகேஸ்வரி, நேசதேவா (லண்டன்), மகேஸ்வரி, தவரஞ்சினி ஆகியோரின் மாமியாரும், கேசிகா, சோபிகா, சிவடக்சன், லோஜிகா, பிரசண்ணா, மகிவன், ரிசிகேசன், மக்சிம், செபஸ்ரியான், ஸ்ரெபனி, லக்சன், சங்கீத், ரிசிகா, துஸ்யந், சரணிகா, பிரதாபன், கஜேந்திரன் ஆகியோரின் பேர்த்தியும், ஸாருகியின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2014) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சூராவத்தை,
சுன்னாகம்.
(53549) (12.3.6)

தகவல்: குடும்பத்தினர்.
077 658 0607, 075 039 6577

### மண் சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உதவி


யாழ்ப்பாணம்.நவ. 2
நல்லூர் றோட்டறக்ட் கழகமும் பத்தரமுல்ல றோட்டறக்ட் கழகமும் இணைந்து மண் சரிவால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு தேவையான உலர் உணவுப்பொருள்கள், (பிஸ்கட், பால்மா, உடனடி நூடில்ஸ், தண்ணீர் போத்தல்கள்)சுகாதாரப்பொருள்கள், துணி வகைகள் (போர்வை, தலையணை, கம்பளி, சிறுவர் பெரியவர்களுக்கான உடுபுடைவைகள்) என்பவற்றை சேகரித்து வருகின்றன.உதவ விரும்புபவர்கள் பொருள்களை இராமநாதன்வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள செவிப்புலனற்றோர் சங்கத்தில்(ராஜா கிறீம் கவுஸ் முன்ஒழுங்கை) கையளிக்குமாறு நல்லூர் றோட்டறக்ட் கழக தலைவர் ரிஷாங்கி கேட்டுக் கொண்டுள்ளார். மேலதிக தகவல்களுக்கு கஜந்தனுடன் (0778192793) தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-ரி)

### ஆதீனத்தில் பிரார்த்தனை

யாழ்ப்பாணம்.நவ. 2
மலையகத்தில் மண் சரிவால் பாதிக்கப்பட்டவர்களின் நலனுக்காகவும் இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்காகவும் நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனமும் சின்மயா மிஷனும் இணைந்து ஒழுங்கமைத்த பிரார்த்தனை நிகழ்வு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. அனைத்து இந்து அமைப்புக்களையும் பங்கு பற்றுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஒ-ரி)

## அந்தியேட்டி அழைப்பு

**அமரர் சுப்பிரமணியம் சந்திரசேகரம்**
(ஓய்வுபெற்ற தபால் அதிபர்)



பிறப்பு 19.06.1936 — இறப்பு 04.10.2014

04.10.2014 சனிக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் இறுதி நிகழ்வில் கலந்து ஆறுதல் கூறி உறுதுணைபுரிந்த உறவினர் - நண்பர்களுக்கும், துண்டுப் பிரசுரம் வெளியிட்டு அஞ்சலி செலுத்தியோருக்கும், தொலைபேசியூடாக அனுதாபம் தெரிவித்தோருக்கும் எமது நன்றிகள்.

அத்துடன் அனைவரையும் நாளை (03.11.2014) திங்கட்கிழமை காலை 7 மணிக்கு கல்லூரிவீதி, தாமரைக்குளத்தடி அந்தியேட்டி மடத்தில் நடைபெறும் கிரியைகளிலும், தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டிகரணக்கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

"உடையார் வாசா",
ஐயனார் வீதி, பருத்தித்துறை.

ச.இராஜேஸ்வரி (மனைவி),
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் கந்தையா
**இரத்தினம்**

தோற்றம் 15.05.1945 — மறைவு 02.11.2004

ஆண்டுகள் பத்து நகர்ந்து
மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர்
அன்புத் தெய்வமே!
மாண்டு விடவில்லை - நீங்கள்
எம் மனங்களில்
மறையாது என்றும்
வாழ்கின்றீர்கள்.

694, கண்டி வீதி,
அரியாலை.

குடும்பத்தினர்.

## 10ஆம் வருட நினைவலைகள்



அமரர்
**கணபதிப்பிள்ளை இரத்தினசிங்கம்**
(ஓய்வுபெற்ற கோட்டக் கல்விப்பணிப்பாளர், ஊர்காவற்றுறை)

உதயம் 10.05.1946
அஸ்தமனம் 02.11.2004

விண்ணிருந்து மலர் பொழியும்
மன்னவனே - உன்
எண்ண அலை இத்தரையில்
திண்ணமதே
வண்ணமதாய் நீ உதிர்த்த
வாசமலர் - இன்று
உன்னதமாய் சந்நிதியில்
சூடுகையில்
புண்ணியத்தால் நீ உயர்ந்தாய்

உந்தன் கண்ணியத்தை
காட்டிவிட்டாய் - இந்த
மண்ணியல்பு மாந்தருக்கே
எண்ணியதை எண்ணியதாய் - நீ
முடித்தாய்
ஏற்றம் பெற ஏற்றவழி - நீ
அமைத்தாய்
ஆற்றுகின்றோம் -
ஆசிமழை நீ பொழிவாய்

கரம்பொன் கிழக்கு.

என்றும் நினைவோடு வாழும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

### திருமதி வேதநாயகி சுந்தரலிங்கம்



யாழ்.திருநெல்வேலி கிழக்கு, செங்குந்தா வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வேதநாயகி சுந்தரலிங்கம் 28.10.2014 செவ்வாய்க் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சுந்தரலிங்கத்தின் பாசமிகு மனைவியும், யசோதா, நந்தா(நோர்வே), கவிதா(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருஷ்ணமூர்த்தி, செல்வநாதன், சாந்தகுமார் ஆகியோரின் அன்பு மாமியாரும், ரம்யா கௌசிகன்(கனடா), ஏன்ஷன், கோபீஷன், லக்ஷனா, கிறொய்ஷன், சந்தியா, ஆரபி, சகானா, ஹரீன், வஹீரா, தஹீன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், பிரஜீத்தின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (02.11.2014) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

264, செங்குந்தா வீதி,
திருநெல்வேலி கிழக்கு.
(53545) (5.6.3)

தகவல்: சுந்தரலிங்கம் (கணவர்)
0094 77 929 7360 /0094 77 404 4477

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் விளையாட்டு உத்தியோகத்தராகக் கடமைபுரிந்துவரும்
செல்வி அகல்யா இரத்தினசிங்கம்
அவர்களின் அன்புத் தந்தை
**அமரர் கிருஷ்ணபிள்ளை இரத்தினசிங்கம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு 31 ஆம் நாள் நினைவு நாளில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

பிரதேச செயலரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரி சங்கம்.
பிரதேச செயலகம், வலி. கிழக்கு, கோப்பாய்.

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## கண்ணீர் நிறைந்த ஓராண்டு நினைவஞ்சலி

அமரர் **தம்பையா கந்தையா**



ஓராண்டு சென்றதையா
எம் உறவை நீர் துறந்து
ஆண்டுகள் பல சென்றாலும்
எம் நினைவு மாறாது

கடந்த (12.11.2013) சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் தம்பையா கந்தையா (துரையப்பா) அவர்களின் ஓராண்டு நினைவு நாள் இன்று (02.11.2014) ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருப்பதனால் அந் நாளில் எமது கண்ணீர் கலந்த நினைவுகளுடன் அவரது ஆத்மா சாந்தி பெறப் பிரார்த்திக்கின்றோம்.

பத்திரகாளி கோயிலடி,
சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம்.

குடும்பத்தினர்.
(53541) (4.6.3)

## கோயில் மணி விற்பனைக்கு உண்டு



* 10 kg- 500 kg வரை வடிவமைக்கப் பட்டுள்ளன.
* சுத்தமான வெண்கலத்தினால் உருவாக்கப் பட்டுள்ளன
* தரமான ஒலிநயத்துடன் காணப்படுகின்றன.
* எங்களிடம் செப்புக்கொடித்தம்பம் உண்டு.
* செப்புக் கலசமும் உண்டு.
* திருவாசியும் உண்டு.

இந்தியாவின் மகாபலிபுரத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட கருங்கல் சிலைகள், ஐம்பொன் சிலைகள் மற்றும் கோயில் தேவைகளுக்கான அனைத்துப் பொருள்களும் எங்களிடம் கிடைக்கும்.

விநியோகம் இலவசம்.

உங்கள் தேவைகளுக்கு ஏற்ற வகையில் எங்கள் சேவைகள் இடம்பெறும்.

43/4/A, Railway Road, Batticaloa வேலாயுதர் பத்மலால் -0776 765 504 (53346)(6.6.3)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு advt@uthayan.com 0215671111

## கல்விச் சேவை

தரம் 9 தொடக்கம் க.பொ.த. சா/த வகுப்பு மாணவர்களுக்கு தேர்ச்சி பெற்ற ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து சகல பாடங்களும் கற்பிக் கப்படும்.

தனியார் கல்வி நிலையங்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: 077 216 9352 (51988)(4.6.3)

## வேலைவாய்ப்பு

பிரபல வெதுப்பகம் ஒன்றுக்கு

★ காசாளர் - பெண் (கணினி அறிவு தெரிந்திருத்தல் நன்று)

★ விற்பனையாளர்கள் : (பெண்கள் விரும்பத்தக்கது)

(யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது)

தொடர்பு:

0777 131 594 / 077 314 7580 (53638)(5.3.4)

## விசா பெற்றுக் கொள்ள இருப்பவர்களுக்கு......




German, France, Italy, Denmark, Norway, Sweden, Switzerland, Finland, Poland, Netherlands, Austria, Spain, Latvia, Belgium, Portugal, Hungary, Slovakia, Greece, Malta, Luxembourg,(Schengen Country) Korea

### Visit Visa

- எவ்வித முற்பணமும் இல்லாமல் 2,3 வாரங்களில் செல்வதற்கு உண்டான வாய்ப்பு.
- தனியாக அல்லது குடும்பத்தாரோடு செல்வதற்கு உண்டான வாய்ப்பு.
- 100% நம்பிக்கையான முறையில் செய்து கொள்ளலாம்.



**SKYWALK VISA SOLUTIONS**

No.65,1/1,Galle Road, Dehiwala. (Food City - 1st Floor)

www.skywalk-vs.com

**Hotline: 0777711905**

(நேரத்தை முன் கூட்டியே பதிவு செய்து கொண்டு வரவும்). (S.17413)

## விற்பனைக்கும் வாடகைக்கும்

சுப்பர் மார்க்கெட்டில் பாவிக்கப்பட்டதும் நல்ல நிலையில் உள்ளதுமான உபகரணங்கள், தளபாடங்கள் விற்பனைக்குள்ளன. மேலும் பலாலி வீதி, கந்தர்மடத்தில் அமைந்துள்ள கடைத் தொகுதியின் கீழ்த் தளத்தில் ஒவ்வொன்றும் 370 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட 5 கடைகள் மற்றும் முதலாம் தளத்தில் உள்ள 6000 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட பகுதியும் வாடகைக்குண்டு.

தொடர்பு: 021 222 0220/077 346 4756 (53303)(12.6)

## மாதாந்தம் 60,000/- இற்கும் மேல் சம்பாதிக்க

இதோ! உங்கள் நகரிலேயே வேலைவாய்ப்புகள்



வருகிறோம் உங்கள் நகருக்கு; கை தருகிறோம் புதியத் தொழிலுக்கு

**நாங்கள் தேடுவது நீங்களே!**

எம்மைப் பற்றி...

தேவையான தகைமைகள்

- வயதெல்லை 20 முதல் 45 வரை
- ஆண், பெண் இருபாலாரும் விண்ணபிக்கலாம்.
- விற்பனை அனுபவம் மேலதிக தகைமையாகக் கருதப்படும்.
- பாடசாலையை விட்டுவிலகிய மாணவர்களுக்கும் உகந்தது.
- தமிழ், ஆங்கிலம் பேச்சு மற்றும் எழுத்துத் திறமை. (சிங்கள மொழிப் புலமை விசேடத் திறமையாகும்)

விண்ணப்பதாரிகள் பின்வரும் பிரதேசங்களில் தேவைப்படுகிறார்கள்: (S.17413)

யாழ்ப்பாணம், திருகோணமலை, நிலாவெளி, மட்டக்களப்பு, மூதூர், வவுனியா, கிளிநொச்சி, மருதானை, பொத்துவில், தம்பிலுவில், இரத்தினபுரி, கதிர்காமம், புத்தல, அருகம்பே, திஸ்ஸமஹாராம, புத்தளம், தம்புள்ள, அநுராதபுரம், பொலன்னறுவ, மஹியங்கன, மொனராகல, அம்பாறை, கல்பிட்டிய, கம்பஹா, நீர்கொழும்பு, மாத்தறை, மாத்தளை, அம்பலாந்தோட்டை, அம்பலங்கொடை, ஹப்புத்தளை, மினுவாங்கொடை, பலாங்கொடை

விண்ணப்பதாரிகளுக்கு கவர்ச்சிகரமான சம்பளத்துடன் வேறு பல வசதிகளும் உரித்தாகும்.

Milvik உங்களது விண்ணப்பங்களை - c.rohan@milvik.se க்கு அனுப்புங்கள் அல்லது தொலைபேசியில் தொடர்பு கொள்ளுங்கள் 0765 440 770

## மீண்டும் ஓர் நற்செய்தி

நமது விடுதியிலோ அதன் கிளைகளிலோ ஆரம்ப காலத்தில் இருந்து அன்றும் இன்றும் என்றும் எவ்வித உணவும் முன்கூட்டியே தயார் செய்து பரிமாறியதும் இல்லை, பரிமாறப்போவதும் இல்லை. உங்கள் தேவைக்கேற்றபடி. வேண்டுகோலுக்கு இணங்க இறைச்சி வகைகளோ. கடலுணவோ, காய்கறியோ வாடிக்கையாளர்களின் கோரிக்கையின் கீழ் உங்களைக் காக்க வைக்காமல் உங்கள் முன்னிலையிலேயே சுத்தமாகவும் சுவையாகவும் சேவை புரியும் ஒரே ஒரு விடுதி Hotel Lux Etoiles உம் அதன் கிளைகளும் மட்டுமே என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இத்துடன் வெளியில் இருந்து கொண்டுவரும் நீங்கள் விரும்பிய உள்நாட்டு வெளிநாட்டுப் பானங்களை எங்கள் உணவுடனும் குளிர்ப்பானங்களுடனும் கலந்து அனுபவிக்கும்போது அதற்கேற்ப கட்டணமும் பரிமாறல் கட்டணமும் மட்டுமே அறவிடப்படும். வேறு எக்கட்டணமும் அறவிடப்பட மாட்டாது.




### LUX HOT & COOL BAR

Special rate reduction offers to celebrate our O3rd year anniversary. Only one hotel & its branches preparing dishes after the order placed. Since the beginning we always prepare pre orders only. Do not hurry to taste delicious food.

| | | | |
|---|---|---|---|
| # Fried Rice (chicken, beef, mixed, sea food) (One portion per one person) | Rs 280.00 | # Chicken Fry | Rs 320.00 |
| | | # Fish Fry | Rs 320.00 |
| # Fried Noodles (chicken, beef, mixed sea food) (One portion per one person) | Rs 280.00 | # Prawns Fry | Rs 320.00 |
| | | # Beef Fry | Rs 320.00 |
| # Sri Lankan Omelet | Rs 140.00 | # Sausage Fry | Rs 320.00 |
| # Chicken Omelet | Rs 200.00 | # Fish Fingers | Rs 180.00 |
| # French fries with ketchup | Rs 250.00 | # Chicken Drumstick | Rs 180.00 |
| # Chicken Devilled | Rs 320.00 | # Chicken Chinese Roll | Rs 180.00 |
| # Beef Devilled | Rs 320.00 | # Fish Chinese Roll | Rs 180.00 |
| # Sausage Devilled | Rs 320.00 | # Vegetable Chinese Roll | Rs 180.00 |
| # Prawns Devilled | Rs 320.00 | # Chicken Nuggets | Rs 180.00 |
| # Fish Devilled | Rs 320.00 | # Sea Food Soup | Rs 250.00 |
| # Cuttle Fish Devilled | Rs 320.00 | # Chicken Soup | Rs 250.00 |
| # Hot Butter Cuttle Fish | Rs 320.00 | # Mixed Vegetable Soup | Rs 250.00 |
| # Mushroom Devilled | Rs 180.00 | # Green Chilly, Onion, Capsicum Pakoda | Rs 180.00 |
| # Honey Mushroom | Rs 180.00 | # Mixed Vegetable Pakoda | Rs 200.00 |

(The above rates are subject to 10% of service charge)

Note:for the guest who will be enjoying our dishes, outside beverages acceptable Without any corkage chargers except soft drinks.

Wait a bit & enjoy a lot

this special offer valid up to 31st December 2014 only

15% discounts will be offered to the LUX a'la carte menu

**Hotel Lux Etoiles & II Lux Pizza, Francisco Varano Group**

No: 34, Chetty Street Lane, Nallur, Jaffna.

Tel: 021 222 3966, 072 222 3966 Fax: 021 222 0606

Email : reserve.luxetoiles@yahoo.com

www.luxetoiles.com (53713)(10.63)

# மரண அறிவித்தல்



## அருட்சகோதரி மேரி பிறிசில்லா போல் - தி.கு

நாரந்தனையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்.திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவரும், தேவநாயகம் போல் (தி.கு.பொதுநிலையினரின் தேசிய தலைவர்) அவர்களின் அருமைச் சகோதரியுமான அருட் சகோதரி மேரி பிறிசில்லா போல் நேற்று (01.11.2014) சனிக்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (03.11.2014) திங்கட்கிழமை யாழ்.திருக்குடும்ப மாகாண இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு, யாழ்.பேராலயத்தில் மு.ப.9.30 மணிக்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்ட பின்னர், யாழ்.புனித மரியாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

121, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(53709)
(12.3.6)

தகவல்: அருட்சகோதரி கிறிஸ்ரா மரியதாஸ், மாகாணத் தலைவி.

# மரண அறிவித்தல்கள்



## நவராஜசிங்கம் கமலானந்தன்

(ஓய்வுபெற்ற உதவி முகாமையாளர் - ஹற்றன் நஷனல் வங்கி, யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இணுவில் வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவராஜசிங்கம் கமலானந்தன் 30.10.2014 வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான நவராஜசிங்கம் - பரமேஸ்வரி தம்பதியரின் மகனும், திரு.திருமதி நவரட்ணம் தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற ஜெயஜீவி (ஆசிரியை)யின் கணவரும், காலஞ்சென்றவர்களான Dr.ஸ்ரீவல்லிபுரம், குலானந்தன் மற்றும் விமலானந்தன் (லண்டன்) ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற மகேந்திரராஜா மற்றும் திருமதி மல்லிகாதேவி ஆகியோரின் மருமகனும் நவராஜசிங்கம், ஸ்ரீ அம்பிகா, ஸ்ரீ துர்க்கா ஆகியோரின் சிறியதந்தையும், றோய்சங்கர், பானுகோபன், ஜனகன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.11.2014) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.04, 'ஈஸ்வரிவாசா',
மானிப்பாய் இணுவில் வீதி,
மானிப்பாய்.

(53526)
(12.3.6)

தகவல்: ஸ்ரீ.நவராஜசிங்கம் (பெறாமகன்)
077 867 9489



## திருமதி சவினம்மா அந்தோனிப்பிள்ளை

யாழ்.மாதகலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சவினம்மா அந்தோனிப்பிள்ளை நேற்று (01.11.2014) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், மரியதாஸ் (கிளி), றீற்றா, பொன்றோஸ், ராணி, மதுரம், சிறி, கொலின், சூரி ஆகியோரின் பாசமிகு தாயாரும், செல்வராணி, காலஞ்சென்ற யேசுரட்ணம் மற்றும் செல்வம், இராக்கினி, லோகநாதன், யொய்சி, இஸ்ரெலா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (03.11.2014) திங்கட்கிழமை மாலை புனித தோமையார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் புனித தோமையார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பழைய சந்தை வீதி,
மாதகல்.

(53705)
(12.3.6)

தகவல்: குடும்பத்தினர்.
021 221 1810

# கரையோரப் பகுதிகளில் காற்றுடன் கூடிய மழைக்கான சாத்தியம்

கொழும்பு, நவ. 2

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் இடியுடன் கூடிய அதிகளவிலான மழைக்கான காலநிலை நிலவுவதாக அறிவித்துள்ள வானிலை அவதான நிலையம் காங்கேசன்துறை, பொத்துவில் முதல் திருகோணமலை வரையான கடலோரப் பகுதிகளில் காற்றுடன் கூடிய மழை தொடரக் கூடும் எனத் தெரிவித்துள்ளது. அத்துடன் இம் மழை வீழ்ச்சியின் அளவு 75 மில்லி மீற்றரைத் தாண்டலாம் என வும் எதிர்வு கூறப்பட்டுள்ளது. மேல் தென் கிழக்கு கரையோரப்பிரதேசங்களில் அதிகளவிலான மழை காலையில் பெய்யக் கூடுமெனவும் இதன் காரணமாக பொதுமக்கள் அனைவரும் பாதுகாப்பாக இருக்கும்படி வானிலைஅவதான நிலையம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆகக்கூடியது 30பாகை செல்சியஸ் ஆகவும் ஆகக் குறைவான வெப்பநிலை 25 பாகை செல்சியஸ் ஆகவும் காணப்படும். அதே வேளை யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பிரதேசங்களில் மாலை அல்லது இரவில் இடியுடன் கூடிய மழை பெய்யலாம் எனவும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆகக்கூடுதலான வெப்பநிலை 30 பாகை செல்சியஸ் ஆகவும் ஆகக் குறைவான வெப்பநிலை 24 பாகை செல்சியஸ் ஆகவும் காணப்படும் அதேவேளை மாலை அல்லது இரவுவேளையில் இடியுடன் கூடிய மழைக்கான சாத்தியம் காணப்படும். கொழும்பு மாவட்டத்தில் ஆகக்கூடுதலான வெப்பநிலை 29 பாகை செல்சியஸ் ஆகவும் ஆகக் குறைவான வெப்பநிலை 25 பாகை செல்சியஸ் ஆகவும் காணப்படுவதோடு மழைக்கான சாத்தியம் சிறிதளவில் காணப்படும் எனவும் வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

(ஒ-10)

# கண்ணீர் அஞ்சலி



யாழ்.மாவட்ட பேக்கறி உரிமையாளர் சங்கத்தின் உடுவில் கிளை அங்கத்தவரும் எமது சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினரும் துரை பேக்கறி உரிமையாளருமாகிய வே.ரவிகாந்தன் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி சரஸ்வதி வேலாயுதம்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



யாழ்.மாவட்ட பேக்கறி உரிமையாளர் சங்கம்,
நிர்வாகத்தினர், அங்கத்தவர்கள்,
பணியாளர்கள்.

(சி/17522) (4.6.3)

559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் வீரகத்தி முருகன்

(வரணி இயற்றாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்டவர்)

உருவாய்
01 . 10 . 1936



அருவாய்
13 . 11 . 2013

(C/17409) (7.6.3)

நீங்கள் தூங்கிப் போனாலும்
உங்கள் நினைவுகள் நீங்கிப் போகாது...
ஆண்டொன்று கடந்தாலும் - எம்
ஆயுள் நெருங்கிப் போனாலும்...
அன்புள்ள காறப்பா...
உங்கள் நினைவுடன் என்றும் நாங்களப்பா...
எங்கள் நினைவில் என்றும் நீங்களப்பா...

*என்றும் நீங்கா நினைவுகளுடன்*

மக்கள், மணமக்கள், பேரப்பிள்ளைகள்,
உறவினர் மற்றும் நண்பர்கள்.

# மரண அறிவித்தல்

## திருமதி விமலாதேவி தயாநாதன்



யாழ். வட்டுக்கோட்டை, வட்டுமேற்கைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனி Stuttgart ஐ வதிவிடமாகவும் கொண்ட திருமதி விமலாதேவி தயாநாதன் 28-10-2014 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம்- வள்ளியம்மை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற வெற்றிவேலு-மெல்லியம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், தயாநாதன்(தயா- சீ நோர்) அவர்களின் அன்பு மனைவியும், லோகதாசன் (சுவிஸ்), தருசினி (மஞ்சு- சுவிஸ்), கதீஜா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கானமயில்நாதன், பகீரதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காயத்திரி, மணிவண்ணன்(B.Sc, Com Engin.), கோணேஸ்வரன் (நேசன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான கண்மணி, பராசக்தி, மற்றும் நவமணி, வைத்தியநாதன், தேம்பாமலர், சாரதாதேவி, பத்மாவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்றவர்களான அமரா, கஜீன்ந் மற்றும் லுயிசன், சஞ்யிதா, சாகரி, சாரணி, கிசாந்த், மதுரிகா, கபிசாந்த் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2014) திங்கட்கிழமை நண்பகல் 4470191 Stuttgart Friedhofstrabe Amprag7yIehdf Germany என்ற முகவரியில் நடைபெற்று, பூதவுடல் அன்றைய தினம் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :

| | |
|---|---|
| தயாநாதன்(தயா) | ஜேர்மனி |
| தொலைபேசி: | +4971194560473 |
| கோணேஸ்வரன்(நேசன்) | ஜேர்மனி |
| செல்லிடப்பேசி: | +4915228893936 |
| லோகதாசன்(சுவிஸ்) | சுவிட்சர்லாந்து |
| செல்லிடப்பேசி: | +41797437993 |
| மணிவண்ணன்(மணி) | சுவிட்சர்லாந்து |
| செல்லிடப்பேசி: | +41762900030 |
| தருசினி(மஞ்சு) | சுவிட்சர்லாந்து |
| செல்லிடப்பேசி: | +41766202020 |

(சி/17523)
(7.6.3)

தகவல்: வ.கானமயில்நாதன்
குடும்பத்தினர்
595/14, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
021 222 2213

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி மாணிக்கம் பூரணம்



தோற்றம் 27.01.1927 — மறைவு 13.11.2013

திதி: தசமி 02.11.2014

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர் பிள்ளைகளுக்கு
எல்லாம் செய்து
என்றும் இனியவளாய் வாழ்ந்து எம்மை
விட்டு- என்றும்
பிரிந்து ஆண்டு ஒன்று மறைந்தாலும்
எம் உள்ளங்களில் உங்கள் நினைவு நிலைத்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமகன்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்,
சி.செல்வராசா (மருமகன்- செல்வம்)

முதற்தெரு, கச்சாய் வீதி,
கொடிகாமம். (சி/17525) (4.6.3)

# தீராத நோயைத் தீர்க்கும் ஆதிவாசி பரம்பரை மூலிகை வைத்தியம்

தீராத நோயைத் தீர்க்கும் வைத்தியர் **குருஜீ கிருஷ்ணர் ராஜ்**

**இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ளார்**

**கடந்த 18 ஆண்டுகளாக வைத்தியம் பார்த்து வருகிறார்.**



மூலிகை சிகிச்சையில் குணமாக்கப்படும் நோய்கள்:

முடி உதிர்தல், சிக்கன் குனியாவால் காய்ச்சல், தீராத கை-கால் வலி, ஆஸ்துமா, அலர்ஜி, உடல் பருமன் அதிகரிக்க-குறைக்க, மூட்டு வலி, பயம், ஞாபக சக்தி, பெண்களுக்கான மாதவிடாய் பிரச்சினைகள், புற்றுநோய், மூளைக் காய்ச்சல், மலேரியா, தோல் வியாதி (சொரியாசிஸ்), சர்க்கரை வியாதி, சிறுநீரகக் கோளாறு, இருதயக் கோளாறு, பக்கவாதம், நரம்புத் தளர்ச்சி, தலை வலி, காய்ச்சல், சரவாங்கி, இரத்தக் கொதிப்பு, வாயுக் கோளாறு, உஷ்ணம், நரம்பு வாதம், அல்சர், வயிற்று வலி, இடுப்பு வலி, காக்கா வலிப்பு, ஆண்மை குறைவு, வெட்டைச் சூடு, ஜன சூடு, உள் மூலம்-வெளி மூலம், பகந்தரி மூலம், கை-கால் குடைச்சல், கழுத்து வலி, முகப்பரு, தேமல், வெண் குஷ்டம், டி.பி., வாதம், மஞ்சள் காமாலை, கண்-காது பிரச்சினைகள், தொண்டை நோய்கள், ஆறாத காயங்கள், மூளைக் காய்ச்சல், உட்பட 360இற்கும் மேற்பட்ட வியாதிகளுக்கு பக்க விளைவுகள் இல்லாத மூலிகைச் சிகிச்சைகளால் சிறந்த முறையில் குணமாக்கப்படுகிறது.

**இடம் : இல. 6, குறுக்குத்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.**
**நேரம் : காலை 8.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை**
**தொடர்பு : 077 547 6635** (53436) (7.6.3)

**அனைவரும் வருகை தந்து பயன் பெறுக.**

**DSI Tyres**

# சவாலான தொழில்வாய்ப்பை நோக்கி



DSI செம்சன் குழுமத்தின் ஒரு உறுப்பினரான வரையறுக்கப்பட்ட செம்சன் இறப்பர் நிறுவனம் உள்நாட்டு வெளிநாட்டு சந்தைகளுக்கான ஒரு முன்னணி டயர் மற்றும் டியூப் உற்பத்தியாளராகும். எமது உற்பத்திகள் உலகெங்கிலும் 65இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதுடன் பல்வேறு உயர் தரம்வாய்ந்த டயர் மற்றும் டியூப் உற்பத்திகளில் உள்ளூர் சந்தையில் நாம் முதலிடத்தை பிடித்துள்ளோம்.

## வியாபார அபிவிருத்தி அலுவலர்கள்

(வடக்கு/கிழக்கு மாகாணங்கள் உட்பட)

எமது இலட்சிய வளர்ச்சித்திட்டத்திற்கு உதவும் உயர் தகைமைகளைக் கொண்டவர்களை நாம் எதிர்பார்க்கின்றோம். அவர்களது முக்கிய பணி கம்பனியின் தொலைநோக்கு, பெறுமானங்கள் மற்றும் இலக்குகளுக்கு ஏற்ப பிரதேச ரீதியான விற்பனை செயற்பாடுகளை உறுதிசெய்து குறித்த பிரதேசத்திலிருந்து உச்ச இலாபத்தையும் வளர்ச்சியையும் அடைவதற்கு வழிசெய்வதாகும்.

**விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருக்கவேண்டும்**

- திட்டமிடல், எதிர்வுகூறல், வியாபார திட்டங்களை மீளாய்வுசெய்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல் உட்பட செயற்பாட்டு, மூலோபாய முன்னெடுப்புகளுக்கு உதவுவதன் மூலம் பிராந்திய விற்பனை இலக்குகளை அடைந்துகொள்வதற்கு பிரதேச முகாமையாளருக்கு உதவும் திறன்.
- பிராந்திய, பிரதேச ரீதியில் மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் விற்பனை பிரமாணம், விற்பனை வருமானம் மற்றும் வளர்ச்சி இலக்குகளையும் அடையும் திறன்.
- வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட சகல மாகாணங்களிலும் புதிய சந்தை வாய்ப்புகளைக் கண்டறிந்து சந்தை பங்கை அதிகரிப்பதற்கான இயலுமையும் ஆர்வமும்.
- தமிழ்மொழியில் பேசவும் எழுதவும் சிறந்த ஆற்றலையும் கொண்டிருக்கும் அதேவேளை ஆங்கிலம், சிங்களம் ஆகிய மொழிகளிலும் திறமை பெற்றிருத்தல்.
- க.பொ.த உயர்தரப் பரீட்சையில் வர்த்தகம் / விஞ்ஞானம் ஆகிய துறையொன்றில் மூன்று பிரதான பாடங்களில் தேர்ச்சியடைந்திருத்தல்.
- தொழிலில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

25 வயதிற்கு குறைந்த ஆண்களுக்கு மேற்படி பதவி மிகவும் பொருத்தமானது.

வெற்றிகரமான விண்ணப்பதாரிகளுக்கு விரைவான தொழில் வாழ்க்கை முன்னேற்றத்தை நோக்கி, ஒரு பரபரப்பான, வளமான மற்றும் வளர்ச்சியை நோக்கியதான நிறுவன சூழலில் வேலை செய்ய ஒரு வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். தகுதியான நபர்களுக்கு அற்புதமான ஊதிய தொகுப்பையும் விளிம்பு நலன்களையும் எதிர்பார்க்க முடியும்.

தயவுசெய்து உங்களீ சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பத்தை உறவினரல்லாத இரண்டு நடுவர்களின் பெயர்கள் தொடர்பு இலக்கங்களுடன் இவ்விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 07 நாட்களுக்குள் அனுப்பிவைக்கவும்.

சிரேஷ்ட மனிதவள முகாமையாளர்
Samson Rubber Industries (Pvt) Limited
Jinasena Mawatha, Mahara, Kadawatha.
Email : careers@dsityre.lk, Web : www.dsitire.com

A Member of DSI Samson group


## மாகாண மட்ட பரீட்சைகள்

ஜி.சீ.ஈ சாதாரண தரம் மற்றும் 9ஆம் தர மாணவர்களுக்கான மாகாண மட்டப் பரீட்சைகள் எதிர்வரும் 10ஆம் திகதி முதல் இடம்பெறவுள்ளன.

இதில் ஜீ.சி.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான மாகாண மட்ட பரீட்சை 10 ஆம் திகதி ஆரம்பமாகி 19ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. 10ஆம் திகதி தமிழ், 11ஆம் திகதி கணிதம், 12ஆம் திகதி விஞ்ஞானம், 13ஆம் திகதி வரலாறு, 14ஆம் திகதி ஆங்கிலம், 15ஆம் திகதி சமயம், 17ஆம் திகதி தொகுதி 1ற்கான பாடங்களுக்கானதும், 18ஆம் திகதி தொகுதி 2 இற்கான பாடங்க ளுக்கானதும், 19ஆம் திகதி தொகுதி 3 இற்கான பாடங்களுக்கான பரீட்சைகளும்நடைபெறும்.

எதிர்வரும் 19ஆம் திகதி ஆரம்பமாக வுள்ள தரம் 9இற்கான மாகாண மட்ட பொதுப் பரீட்சையில் 19ஆம் திகதி தமிழ் பாடமும், 20ஆம் திகதி கணித பாடமும், 21ஆம் திகதி ஆங்கில பாடமும், 22ஆம் திகதி அழகியற் பாடங்களும், 24ஆம் திகதி விஞ் ஞானப் பாடமும், 25 ஆம் திகதி வரலாற்றுப் பாடமும், 26ஆம் திகதி சமயப் பாடங்களும் நடைபெறவுள்ளன. (கு-108)


**வெளிவாரிப்பட்டப் படிப்புகளுக்கு பதிவுசெய்து கொள்வதற்கான ஓர் சந்தர்ப்பம்**

**External Degree**

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின்

**BBA, B.Com BA**

அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

*விரிவுரைகள் தமிழ் மொழி மூலம் பல்கலைக்கழக விரிவுரையாளர்களால் வாரஇறுதி தினத்தில் ஒரு நாள் மட்டும் (சனி அல்லது ஞாயிறு) நடைபெறும்.

கற்கை நெறியின் காலம் 3 வருடங்கள்

- பதிவு செய்வதற்கான தகைமை :

க.பொ.த உயர் தரத்தில் ஒரே அமர்வில் 3 பாடங்களில் சித்தி

கீழ்வரும் கற்கை நிலையங்களில் பாடநெறியைத் தொடரலாம்

KANDY | KURUNEGALA | COLOMBO
BERUWELA | THIHARIYA | AVISSAWELLA
MAWANELLA | HATTON | NUWARA ELIYA
BANDARAWELA | POLONNARUWA | PUTTALAM
BATTICALOA | KALMUNAI | VAVUNIYA
MANNAR | KILINOCHCHI | JAFFNA | TRINCO

விண்ணப்பப் படிவத்துக்கும் பதிவுகளுக்கும் தொடர்பு கொள்ளவும்
0777 71 71 29
0718 57 07 09

EXTERNAL DEGREE DIVISION

**GOLDEN COLLEGE** CITY CAMPUS

548 | PERADENIYA ROAD | KANDY | 081 2205544
14, 7th Lane, Vairavarkovil Rd, Vairabapuliyankulam
Vavuniya. Tel : 0777 222 527


# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி இரத்தினசபாபதி



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் பருத்தித்துறையை வசிப்பிடமாகவும், வளலாய், அச்சுவேலியை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி இரத்தினசபாபதி நேற்று (01.11.2014) சனிக்கிழமை இறைபதம் எய்தியுள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற இரத்தினசபாபதியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பூபாலசிங்கத்தின் அன்புச் சகோதரியும், சுதாகரன் (பிரான்ஸ்), சுரதா(பிரான்ஸ்), சுபீஸ்கரன் (ஆசிரியர், யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்), சுபாஸ்கரன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சாந்தி, சந்திரலிங்கம், கௌரி (ஆசிரியை, புனித தெரேசாள் மகளிர் கல்லூரி), துஷ்யந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், சுஜந்தா, சுஜந்தன், கரோலின், செரின், தீபிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.11.2014) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் வளலாய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'தாய் இல்லம்'
வளலாய், அச்சுவேலி. (53714)(5.8.2)

தகவல்: இ.சுபீஸ்கரன் (ஆசிரியர்)
077 417 1243

# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் நவரத்தினம்

யாழ். வளலாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் மட்டுவில் கிழக்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் நவரத்தினம் 29.10.2014 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- தங்கமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நாகலிங்கம்-மாணிக்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், மல்லிகாதேவியின் அன்புக் கணவரும், கந்தசாமி, சின்னத்தம்பி, சிவயோகவள்ளி அம்மாள் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற மாணிக்கவாசகரின் அன்பு மைத்துனரும்,சுதாகர்(ஜேர்மனி), சுதாசினி(லண்டன்), சுதாமதி(டென்மார்க்), சுதாநிதி(ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், குறிஞ்சிக் குமரன்(லண்டன்), ஜெயநாதன்(டென்மார்க்), குமரேஸ்வரன் (ஜேர்மனி), வசந்தி (பிரதேச செயலகம், வலிகாமம் கிழக்கு, கோப்பாய்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அட்சயன், ஆகீஸ், துஷாரகா, லட்சனா, வர்சிகன், அபிகாஷ், வர்ணவி ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.11.2014) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் சக்கடத்தார் வீதி, அச்சுவேலி வடக்கில் நடைபெற்று, பூதவுடல் வளலாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சக்கடத்தார் வீதி,
அச்சுவேலி வடக்கு, அச்சுவேலி. (சி/17524)(5.6)

தகவல்: குடும்பத்தினர்.
077 524 1239

# மலையக இடரில் பாதிப்புற்றோருக்கு இந்தியா 5 மில்லியன் நிவாரண உதவி

யாழ்ப்பாணம், நவ. 2

பதுளையில் மண்சரிவினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உடனடியாக 5 மில்லியன் ரூபா பெறுமதியான நிவாரண உதவிகளை இந்தியா வழங்கவுள்ளது.

இது தொடர்பில் இந்தியத் தூதரகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்திய அரசு தனது அனுதாபங்களைத் தெரிவித்திருந்தது. பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசியூடாகத் தொடர்பு கொண்டு தனது இரங்கல்களைப் பகிர்ந்திருந்தார். இதன்போது, பாதிக்கப் பட்ட மக்களுக்கு உதவத் தயார் என்றும் தெரிவித்திருந்தார்.

அதற்கமைய இலங்கை மதிப்பில் 5 மில்லியன் ரூபா பெறுமதியான நிவாரண உதவிகள் வழங்கப்படவுள்ளன. அவசர உதவியாக இது வழங்கப் படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-5)

## தொடர்ச்சிகள்

### வடமாகாண

மாதம் முழுவதும் வடக்கில் மர நடுகை மேற்கொள்ளப் படவுள்ள நிலையில் ஆரம்ப நிகழ்வாக வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் விவசாய அமைச்சர் மற்றும் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டு மரம் நடுகையை ஆரம்பித்து வைத்தனர்.

இதன்போது நாரந்தனைப் பகுதியைச் சேர்ந்த 124 பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கப் பட்டன. மா, மாதுளை, கொய்யா, தேசி ஆகிய பயன்தரு மரக்கன்றுகள் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண முதலமைச்சர் க.விக்னேஸ்வரன் உரையாற்றுகையில்,

ஏ-9 வீதியில் மரங்கள் இருந்த இடங்களில் இராணுவக் கடைகளும் இராணுவ முகாம்களும் அத்துடன் அவர்கள் கொண்டு வந்து குடியேற்றிய அந்நியர்களுமே தற்போது குடியிருக்கின்றார்கள். எனவே நாம் எமது வன மரங்களின் செறிவை உறுதிப் படுத்த வேண்டியுள்ளது. அழிக்கப்பட்ட மரங்களுக்கு ஈடாகப் புதிய மரங்களை வளர்க்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

மழைக்காலம் வந்துள்ள தால் எமக்கு மிக அத்தியாவசியமான மரங்களை நட முயற்சிகள் மேற்கொண்டுள்ளோம். கடந்த சில வருடங்களாக மழை வீழ்ச்சியில் பின்னடைவையும் சந்தித்துள்ளோம். இதற்கு முக்கிய காரணம் எம்மால் தறித்து, வெட்டி அப்புறப்படுத்தப்பட்ட பல நீண்ட கால மரங்களே. முன்னர் ஏ-9 வீதியால் நாங்கள் வரும்போது அடர்ந்த காடுகள் தெருவின் இரு பக்கமும் இருப்பதைக் காணலாம். இப்பொழுதோ நிலைமை மாறிவிட்டது. மரங்கள் பல தறித்துக்கொண்டு செல்லப்பட்டுள்ளன. போரின் உக்கிரம் சில இடங்களில் மரங்களைப் பொசுக்கப்பட்ட மரங்களாக்கி விட்டன.

எமது வரலாற்றில் இந்த மாதத்துக்குரிய பக்குவத்தை மரம் நாட்டிப் பறைசாற்றுகின்றோம். நாங்கள் மரம் நடுகையில் சில பல விடயங்களை மனதில் கொள்ள வேண்டும். எப்பேற்பட்ட மரம் ஒரு குறிப்பிட்ட நிலத்துக்கும் சூழலுக்கும் பொருத்தமாகும், எந்த மரத்தை வளர்ப்பதால் அங்கு வாழ் மக்களுக்கு அதுமிக அதிகநன்மைதரும்என்பதை முதலில் தீர்மானிக்க வேண்டும்.

மேலும் சூழல் மாசுபட்டுப் போவதைத் தடுக்கவும் மரங்கள் வேண்டியுள்ளன. மரங்களை நடுவதால் நாம் அடையும் பயன் பல இருக்கின்றன. சுற்றுச் சூழலில் உள்ள ஒலி இரைச்சலைத் தணிக்கவல்லன மரங்கள். இப்பொழுது வாகன இரைச்சல் மோசமானது. மெல்ல மெல்ல யாழ்ப்பாண நகரப் புறத்தைக் கவ்வி வருகின்றது. மரங்களைப் போதுமானதாக நட்டு வைப்பது வாகன இரைச்சல் காதைத் துளைப்பதைக் கட்டுப் படுத்தும்.

எனவே மரம் நடுகை என்பது வெறும் மரங்களை நடும் ஒரு காரியம் மட்டுமல்ல. மனிதர்களை வாழ வைக்கும் ஒரு புனிதக் கைங்கரியம். வருங் காலத்தை வள முள்ளதாக அமைக்க எடுக்கப்படும் வலுவான ஒரு நடவ டிக்கை. வரும் சமுதாயம் சுயநலமின்றிச் சுற்றுச் சூழலைச் சுத்தப்படுத்திச் சுகமான வாழ்வை சுற்றத்தாருக்கு அமைத்துக் கொடுக்க வழி வகுக்கும் ஒரு உத்தமப் பணி.

எமது வடமாகாணம் பலவித சோதனைகளையும் சோர்வுகளையும் பாதிப்புகளையும் எதிர் நோக்கியிருக்கின்றது. அவற்றை எல்லாம் போக்க வல்லது நாம் சுயநலம் களைந்து பொது நலங் கருதி வாழும் வாழ்க்கை. அவ் வாழ்க்கைக்கு உரமூட்டக் கூடியது இந்த மரம் நடுகை எனவும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து எதிர் வரும் 30 ஆம் திகதி வரை 5 மாவட்டங்களிலும் பாடசாலைகள் மற்றும் திணைக் களங்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப் பட்டு மரம் நடுகை மேற்கொள் ளப்படவுள்ளது. (த-14)

### தமிழர்

சுரேஷ் பிரேமச் சந்திரன் குறிப் பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு-செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ் வாறு தெரிவித் தார்.

முட்டாளாக்கும்
பட்ஜெட்

2015 ஆம் ஆண்டுக்கு முன் வைக்கப்பட்டுள்ள வரவு -செலவுத் திட்டம் முழுமையாக ஜனாதிபதித் தேர்தலை இலக்கு வைத்தே தயாரிக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் எல்லோரையும் முட்டாளாக்குவதற்கான வரவு-செலவுத் திட்டமே தவிர நாட்டையோ, மக்களையோ முன்னேற்றுவதற்கான வரவு-செலவுத் திட்டம் இதுவல்ல.

17 ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்பட்டுள்ளது. இதனூடாக நீதிமன்றம், பொதுச் சேவை, பொலிஸ் சேவை, இலஞ்சஒழிப்பு மனித உரிமை, தேர்தல் ஆணையாளர் என்று அனைத்துமே அரசியல் மயமாக்கப்பட்டு ஒரு குடும்பத்தைப் பாதுகாப்பதற்கும், பராமரிப்பதற்கும் என்று ஆகியுள்ளது. இதன் பின் னர் இவற்றின் நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்படும் பல ஆயிரம் மில்லியன்களால் மக்களுக்கு என்ன பிரயோசனம்.

இராணுவ ஆட்சி

பாதுகாப்புக்கு தொடர்ந்தும் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வடக்கில் 6 தமிழ் மக்களுக்கு ஒரு இராணுவம் என்று நிலை கொண்டுள்ளது. தென்பகுதியில் 666 பேருக்கு ஒரு இராணுவம் என்ற அடிப்படையில் உள்ளது. தமிழ் மக்களை இவ்வளவு மோசமான இராணுவ அடக்கு முறைக்குள் வைத்துக் கொண்டு என்ன அடிப்படையில் நீங்கள் வரவு - செலவுத் திட்டத்திற்கு ஆதரவு கேட்பீர்கள்? இல்லையேல் என்ன அடிப்படையில் ஜனாதிபதி தேர்தலுக்குத் தமிழ் மக்கள் மத்தியில் வாக்குக் கேட்பீர்கள்?

பாகிஸ்தான், பர்மா, ஈராக், லிபியா போன்ற நாடுகளைப் போன்று எமது ஜனாதிபதியும் ஓர் இராணுவ ஆட்சியை நோக்கி பயணிப்பது மிகத் தெளிவாக தெரிகின்றது. இதனால் அந்த நாடுகளில் ஜனநாயகம் எவ்வளவு தூரம் அங்கு கேலிக்குள்ளாக் கப்படுகின்றது என்பதையும் சிங்கள மக்கள் உணர வேண்டும். இன்று தமிழ் மக்களுக்கெதிராகத்தான் இந்த இராணுவம் செயற்படுவதாக பெரும்பான்மை சிங்கள மக்கள் யோசிக்கலாம். ஆனால் அது நாளை சிங்கள மக்களுக்கெதிராக வும் மாறும். வெலிவேரியாவில் தண்ணீர் கேட்ட மக்களுக்கு இலங்கை இராணுவம் கொடுத்த பரிசு என்ன என்பதைச் சற்று சிந்தித்துப் பாருங்கள்.

பொருந்தாத திட்டங்கள்

ஜனாதிபதி அம்பாந்தோட்டையை முன்னேற்றுவதற்கு பல ஆயிரம் கோடிகளைச் செலவு செய்து வருகின்றார். அம்பாந்தோட்டையைத் தலைநகரமாக அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஆனால் அம்பாந் தோட்டை துறைமுகம், விமான நிலையம் யாவுமே சீனா வின் எதிர்கால இராணுவத் தேவைக் களுக்குப் பயன் படுத்துவதற்கே என்பது பல ஆய்வாளர்களின் முடிவாக இருக்கின்றது.

இவை ஒருபுறமிருக்க யாழ். மாவட்டத்தின் வலி. வடக்குப் பகுதியில் 6 ஆயிரத்தி 300 க்கு மேற்பட்ட ஏக்கர் காணியை இராணுவம் கபளீகரம் செய்துள்ளது. இங்கு தான் பலாலி விமானநிலையம், காங்கேசன் துறை துறைமுகம் ஆகியன அமையப் பெற்றுள்ளன. பலாலி விமான நிலையம் 1970 ஆம் ஆண்டு வரையில் கட்டுநாயக்கவிற்கு அடுத்த சர்வதேச விமான நிலையமாக இருந்து வந்தது.

இங்கிருந்து தமிழ் நாட்டின் திருச்சிக்கு விமானப் போக்குவரத்து இருந்தது. இன்று புலம் பெயர்ந்திருக்கும் 10 லட்சம் பேர்களில் பெரும்பான்மையினர் வட மாகாணத்தை சேர்ந்தோர். பலாலி விமான நிலையம் ஓர் சர்வதேச விமான நிலையமாக மாற்றம் பெறுமாக இருந்தால் பெரும்பாலான புலம் பெயர் மக்களும், இந்திய மக்களும் பிரயாணம் செய்யும் விமான நிலையமாக இது மாற்றமடையும்.

இதனூடு வட மாகாணத்தின், சுற்றுலாத்துறை முன்னேறுவதுடன், பொருளாதார ரீதியாகவும் பெரும் முதலீடுகள் இடம் பெறுவதற்குமான சாத்தியப்பாடுகள் நிறையவே இருக்கின்றன. ஆனால் அவ்வாறான வாய்ப்பான, சாத்தியப்பாடான இடங்களுக்குத் தேவையான கட்டுமானங்களை அமைக்காமல் வர்த்தக ரீதியாகப் பொருத்தமற்ற இடங்களில் பல ஆயிரம் கோடிகளை தேவையற்ற விதத்தில் அரசு செலவு செய்கின்றது.

வடக்கு - கிழக்கு
தனிப் பிரதேசம்

வடக்கும் - கிழக்கும் சேர்ந்துதான் இலங்கை. இங்குள்ளோர் அனைவரும் இலங்கையர் என்ற எண்ணக்கரு இந்த அரசுக்கு இருந்திருக்குமாக இருந்தால், இவர்களுடைய திட்டமிடல்கள் வேறுவிதமாக அமைந்திருக்கும். ஆனால் வடக்கு-கிழக்கை இராணுவ ஆக்கிரமிப்புக்குள் வைத்து மக்களை மௌனிகளாக்கி, அங்குள்ள பொருளாதாரத்தைச் சீர்குலைக்க வேண்டும் என்பதில்தான் அரசு அக்கறையாக இருக்கின்றது.

அரசுக்கு ஒன்றை ஞாபகப் படுத்த விரும்புகின்றேன். சிங்கப்பூர் முன்னாள் பிரதமர் லீகுவான்யூ லொஸ் ஏஞ்சல்சைச் சேர்ந்த பேராசிரியர் ரொம் பிளேட் எழுதிய 'லீ குவான்யூ உடனான உரையாடல்கள்' என்ற நூலுக்கு இலங்கை தொடர்பான சில கருத்துக் களைக் கூறி இருந்தார்.

'சிங்களவர்கள் இலங்கையில் இருந்த காலம் முதல் தமிழர்களும் இலங்கையில் இருந்து வருகின்றனர். இருப்பினும் தமிழர்களும், சிங்களவர்களும் இணைந்து வாழ்வதற்கான சூழல் அங்கு இல்லை. இலங்கை ஒரே நாடாக இருக்கும் வரையில் மகிழ்ச்சிகரமான நாடாக இருக்க முடியாது. இலங்கையில் தமிழர்களுக்காக போராடிய விடுதலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டுள்ளனர். இதன் மூலம் இலங்கையில் இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப் பட்டுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த குறிப்பிட்டு வருகின்றார். இதனையே ஏற்கவும், நம்பவும் வேண்டுமென்றும் அவர் எதிர் பார்க்கின்றார்.

ஈழத்தமிழர் அடங்கிப்போகவும் மாட்டார்கள். மண்டியிடவும் மாட்டார்கள். தமிழீழ விடுதலைப்புலிகளை அழித்திருந்தாலும், ஈழத் தமிழர்களை இவர்களால் வென்றெடுக்க முடியாது. அதுவும் யாழ்ப்பாணத் தமிழர்களை நிச்சயம் ஒரு போதும் வெல்லவே முடியாது. அதனால் தான் தமிழர்களை எல்லா வழிகளிலும் நசுக்கி ஒடுக்க முனைகின்றார்கள். சிங்களவர்கள் முன்பும் இப்படித்தான் செய்தார்கள் இதுதான் மிகப்பெரும் ஆயுதப் போராட்டமாக வெடித்தது. இப்போதும் இதனையே செய்ய முயற்சிக்கின்றார்கள். ஆனால் ஒட்டு மொத்தமான தமிழ் இனத்தை அழிக்கும் அவர்களின் எண்ணம் ஈடேறாது'

அரசினுடைய சிந்தனையில் மாற்றம் வேண்டும். அரசு அடக்குமுறைகளை கைவிட வேண்டும். தமிழ் மக்களை கௌரவமாக நடத்தக் கூடிய விதத்தில் அரசியல் சாசனத்தில் மாற்றங்கள் வேண்டும். தமிழர்களும் இந்த நாட்டின் குடி மக்கள்.

அவர்களுக்கும் பகிரப்பட்ட அடிப் படையிலான இறையாண்மை உண்டு. அவர்களுக்கு சுய நிர்ணய உரிமையுண்டு. சிங்கள மக்களுடன் சரிசமனாக அரசியல், பொருளாதார விடயங்களை செயற்படுத்தும் உரிமை உண்டு என்ற விடயங்களை முதலில் இலங்கை அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். இல்லையேல் பிரதமர் லீகுவான்யூ சொன்னது போல் மகிழ்ச்சியான இலங்கையை பார்க்க முடியாது. எமது ஜனாதிபதி கூறுவது போன்று ஆசியாவின் அதிசயமாகவும் இதனை மாற்ற முடியாது - என்றார். (த-5)

### உண்மைகள்

கண்டெடுக்கப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை 5 எனவும் காணாமற்போனவர்களின் எண்ணிக்கை 34 என பொலிஸாரும், 100இற்கும் அதிகமானோர் காணாமற்போயுள்ளனர் என இடர் முகாமைத் துவ மத்திய நிலையமும் நேற்று முன்தினம் குறிப்பிட்டிருந்தது. ஆனால் நேற்றைய தினம் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் பொலிஸாரது எண்ணிக்கைக்கு சமனாகும் வகையில் தனது எண்ணிக்கையை குறைத்துக் கொண்டு தகவல் வெளியிட்டிருந்தது. இதன் படி பொலிஸாரது தரவுகளை அடியொற்றியதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலை யம் 4 சடலங்கள் கண்டெடுக்கப் பட்டுள்ளதாகவும், 34 பேர் காணாமற் போயுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் பணியாற்றும் சிரேஷ்ட இந்தியப் பத்திரிகையாள ரொருவரது தகவல்களின் படி ஆகக் குறைந்தது 200 பேர் வரையில் புதையு ண்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படும் நிலையில், மக்களது விவரங்களை அறிந்து கொள்வதற்காக சம்பந்தப்பட்ட தோட்ட நிர்வாகத்தினரையும், கிராம சேவையாளரையும் தொடர்பு கொண்ட போது அவர்களது கைத்தொலை பேசிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக தகவல் தெரிவிக்கப்பட்டது.

தனது பெயரை இனங்காட்டிக் கொள்ள விரும்பாத சமூக ஆர்வலரொருவர் கருத்து வெளியிடும் போது உண்மைகளை மூடிமறைப்பதற்கு யாரோ முனைவது வெள்ளிடைமலையாகும் எனத் தெரிவித்தார். பெற்றோர்களை மண்சரிவில இழந்த பாடசாலை செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கையே 75 என ஊடகங்கள் உறுதிப் படுத்தும் போது காணாமற்போனவர்களின் எண்ணிக்கை எவ்வாறு 34 ஆக இருக்க முடியும் எனவும் அவர் கேள்வி யெழுப்பினார்.

இதுதொடர்பில் கருத்துவெளியிட்ட மற்றுமொரு சமூக ஆர்வலர் மண்சரிவு இடம்பெற்ற தினத்தன்று ஆங்கிலப்பத்திரிகைக்கு தகவல் வெளியிட்டிருந்த பதுளை மாவட்ட செயலாளர் ரோஹண கீர்த்தி திஸாநாயக்க 317 பேர் அவ்விடத்தில் வாழ்ந்ததாக குறிப்பிட்டிருந்தமையைச் சுட்டிக்காட்டினார்.

காணாமற்போனோர் தொடர்பான விவரம் அரசால் இது வரையில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட வில்லை. மேலும், பூனாகலை மற்றும் கொஸ்லந்தை பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டிருப் பவர்கள் குறித்தும் இதுவரையில் முழுமை யான தகவல்கள் வெளியிடப்படவில்லை. பூனாகலை பாடசாலையில், சுமார் 136 பேரும், கொஸ்லந்தை பாடசாலையில் சுமார் 50 பேரும் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல் வெளியிட்டப்படுகிறது.

இதேவேளை, மீரியபெத்தையை அண்மித்த பகுதிகளுக்கும் மண்சரிவு அபாயம் விடுக்கப்பட்டுள்ளதால், அந்தப் பிரதேசங்களையும்சேர்ந்தவர்கள் மேற்படி இரண்டு பாடசாலைகளிலும் சுமார் ஆயிரத்திற்கும் அதிகமானோர் கடந்த மூன்று தினங்களாக தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப் படுகிறது.

### இடரில்

கொள்ளவுள்ளன.

நல்லை ஆதீனம் மற்றும் சின்மயா மிஷனின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் பிரார்த்தனை நிகழ்வு இன்று மாலை 5 மணிக்கு நல்லூர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. பிரார்த்தனையில் யாழ்.மாவட்டத்தில் உள்ள இந்துமத அமைப்புக்கள் மற்றும் பொது மக்கள் பங்கேற்கவுள்ளனர்.

(த-14)

### வாக்காளர்

வாக்காளர் பெயர் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. வாக்காளர் பெயர்ப் பட்டியல் பதிவின் சகல நடவடிக்கைகளையும், கடந்த ஒக்ரோபர் மாதத்துடன் முடிவுறுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந் தன.

இதற்கமைய ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி வாக் காளர் பெயர்ப் பட்டியல் வெளி யிடப்படும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப் பினும் வாக்காளர் பெயர்ப் பட்டியலின் இறுதிப் பட்டியல் கிராம சேவையாளர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு மீள வும் உறுதிப்படுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நடவடிக்கையின் காரணமாகவே கடந்த 31 ஆம் திகதி வாக்காளர் பெயர் பட்டியல் வெளியிடப்பட முடியாமல் போனதாகத் தெரிவிக் கப்படுகின்றது. தற்போது கிராம சேவையாளர்களிடமிருந்து திருத்தங்கள் பெறப்பட்டுள்ளதாகவும், அதற்கமைய இன்றுடன் இந்தப் பணிகள் முடிவுறுத்தப்பட்டு நாளை திங்கட்கிழமை பெயர்ப்பட்டியல் வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-5)

### கொழும்பு

கின்றது. ஆனால் நீங்கள் இந்த வரவு -செலவுத் திட்டத்தில் 2 ஆயி ரத்து 500 ரூபா கொடுக்க இருப்பதாக அறிவித்துள்ளீர்கள். அப்படி பார்க்கின்ற பொழுது வடக்கு மாகாண சபை நிர்வாகம் சற்று முன் கூட்டியே சிந்திக்கின்றது என்பதில் நாங்கள் பெருமை கொள்ளலாம்.

அதேபோன்று வடமாகாணத்தில் ஆசிரிய உதவியாளர்களுக்கு இதுவரை கிடைத்து வந்த 6 ஆயிரம் ரூபாவுக்கு மேலதிகமாக 4 ஆயிரம் ரூபா கொடுக்கப்பட்டு மாதாந்தம் 10ஆயிரம் ரூபாவைப் பெற்றுவருகின்றார்கள். ஆனால் இப்பொழுதான் நீங்கள் 3 ஆயிரத்து 500 அதிகரித்து 9 ஆயிரத்து 500 ரூபா கொடுப்பதாகப் பிரகடனப் படுத்துகின்றீர்கள்' என்று சுரேஷ் பிரேமசந்திரன் குறிப்பிட்டுள்ளார். (த-5)


### பட்ஜெட்டின்

பினும் இந்த வாக்கெடுப்பில் அரசின் பங்காளிக் கட்சியான ஹெல உறுமய பங்கெடுக்கவில்லை.

2015 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பு நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்றது. அதற்கு ஆதரவாக 157 வாக்குகளும் எதிராக 57 வாக்குகளும் கிடைத்துள்ளன.

அதன்படி இரண்டாவது வாசிப்பின் மீதான வாக்கெடுப்பு 100 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-5)


# விபுலானந்தன் கிண்ண போட்டி முடிவுகள்



யாழ்ப்பாணம் நவ. 2

யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான மின்னல் வேக கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் நேற்று சனிக்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் ஆரம்பமாகின.

சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் 10 நிமிடங்கள் கொண்ட 2 பாதி ஆட்டங்களாக இடம்பெற்றன.



சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக் கழக அணி சென்றலைட்ஸ் கோல்ட் விளையாட்டுக்கழக அணிகளுக்கு இடையிலான மோதலில் சென்ற லைட்ஸ் சொக்ஸ் 37:22 என்ற புள்ளி அடிப் படையில் வெற்றி பெற்றது.

பற்றீசியன்ஸ் அணிக்கும் சென்றலைட்ஸ் புளூஸ் அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் 34:23 என்ற புள்ளி அடிப்ப டையில் வெற்றி பெற்றது.

முல்லைத்தீவு விளையாட் டுக்கழக அணிக்கும் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழக 'பி' அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக 'பி' அணி 30:20 என்ற புள்ளி அடிப் படையில் வெற்றி பெற்றது.

(உ-23)

# சென். ஜோன்ஸ் கல்லூரியில் உதைபந்து காணிவேல்



சென். ஜோன்ஸ் கல்லூரி 7ஆவது வருடமாக நடத்தும் அமலசீலன் உதைபந்தாட்ட காணி வேல் நேற்று சனிக் கிழமை மதியம் 2 மணிக்கு கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது. கல்லூரி யின் முன்னாள் உப அதிபர் அமலசீலன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு, கல்லூரிக் கொடியை ஏற்றி வைத்து போட்டிகளை ஆரம்பித்து வைத்தார். 16 பாடசாலைகளைச் சேர்ந்த 11 வயதுக்குட்பட்ட அணிகள் பங்குபற்றின,

# முரளிக் கிண்ண இறுதிக்கு ஆனந்தா கல்லூரி நகர்வு



யாழ்ப்பாணம் நவ 2

முரளிக் கிண்ண ரி-20 கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் அரையிறுதி ஆட் டங்கள் நேற்று சனிக்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற் றன.

ஆனந்தாக் கல்லூரி அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆனந்தாக் கல்லூரி 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறை வில் 8 இலக்குகளை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்றது. சண்முகஆசான் 42 ஓட்டங்களைப் பெற்றார். சென். பீற்றர்ஸ் கல்லூரி பந்துவீச்சாளர் தனிச விரக்கோ 26 ஓட்டங்களுக்கு 2 இலக் குகளை வீழ்த்தினார். பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென். பீற்றர்ஸ் கல்லூரி அணி 17 பந்துப் பரிமாற் றங்களிலேயே சகல இலக்குகளையும் இழந்தது. 107 ஓட்டங்களை மட்டுமே அதனால் பெறமுடிந்தது. சச் சின் டல்பத்து அதிகபட்சமாக 21 ஓட்டங்களைப் பெற்றார்.

ஆனந்தாக் கல்லூரி பந்து வீச் சாளர் அஞ்சுல 15 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் கசுன் பெரேரா 23 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் வீழ்த் தினர். ஆட்ட நாயகனாக ஆனந்தா வீரன் கவிஸ் அஞ்சுல தெரிவானார்.

நேற்று மாலை சென்.பற் றிக்ஸ் கல்லூரி மைதானத் தில் இடம் பெற்ற அரை யிறுதியாட்டத்தில் றிச்மன்ட் கல்லூரி அணி வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

றிச்மன்ட் கல்லூரி அணிக் கும் பொலனறுவை இணைந்த அணிக்கும் இடையிலான 2ஆவது அரையிறுதியாட் டத்தில் முதலில் துடுப்பெடுத் தாடிய றிச்மன்ட் கல்லூரி அணியினர் 20 பந்துப்பரி மாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றனர்.

இதில் ஜிம்கான் ஆட்டம் இழக்காமல் 68 ஓட்டங் களையும், மென்டிஸ் 18 ஓட்டங்களையும், டி.சில்வா 12 ஓட்டங்களையும், லக்சன 11 ஓட்டங்களையும், தமது அணி சார்பாகப் பெற்றனர்.



பந்து வீச்சில் பொலனறுவை இணைந்த அணி சார்பில் சில்வா 4 பந்துப்பரிமாற் றங்கள் பந்து வீசி 29 ஓட்டங்களுக்கு 2 இலக் குகளையும், டயவென்ச 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 29 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

150 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பொல னறுவை இணைந்த அணி யினர் 19 பந்துப்பரிமாற் றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 76 ஓட்டங்களை மட்டும் பெற்றனர். இதில் தசநாயக்க 22 ஓட்டங்களையும், பிரி யலால் 14 ஓட்டங்களையும், டயவன்ச 10 ஓட்டங்களை யும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் றிச்மன்ட் கல்லூரி அணி சார்பில் டீ.சில்வா 4 பந்துப்பரிமாற் றங்கள் பந்து வீசி 18 ஓட் டங்களுக்கு 2 இலக்கு களையும், அசலங்க 4 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 16 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த் தினர். ஆட்ட நாயகனாக றிச்மன்ட் கல்லூரி அணி வீரன் ஜிம்கான் தெரிவா னர்.

(உ-த-23)

## மின்னல் வேக ஆட்டங்கள் இன்று

யாழ்ப்பாணம். நவ. 2

யாழ். சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் பொன் விபுலானந்தன் கிண்ண மின்னல் வேக கூடைப் பந்தாட்டத் தொடரில் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத்திடலில் இடம்பெற வுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

காலை 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக ஏ அணியை எதிர்த்து கே.கே.எஸ். விளையாட்டுக்கழக அணி மோதும்.

காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் சொக்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதும்.

காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் முல்லைத்தீவு விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக மஞ்சள் அணி மோதும்.

காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பற்றீசியன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக்கழக சிவப்பு அணி மோதும்.

காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென்றலைட்ஸ் கோல்ட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஜொலி ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதும்.

தொடரின் இறுதியாட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு மின்ஒளியில் இடம் பெறவுள்ளது. இறுதியாட்டத்திற்கு முன்னதாக சென். ஜோன்ஸ் கல்லூரி 14 வயதுப் பிரிவு அணிக்கும் யாழ். மத்திய கல்லூரி அணிக்கும் இடையில் நட்பு ரீதியிலான ஆட்டம் இடம் பெறவுள்ளது.

(உ-23)

# இறுதியாட்டங்கள் இன்று






முரளிக் கிண்ண ரி-20 கிரிக்கெட் தொடரின் இறுதியாட்டங்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

காலை 9.55 மணிக்கு ஆரம்பிக்கும் பெண்கள் இறுதியாட்டத்தில் சீனிகம மகளிர் அணியை எதிர்த்து பதுளை மகளிர் அணி மோதவுள்ளது. மதியம் 2 மணிக்கு இடம்பெறும் ஆண்கள் ஆட்டத்தில் ஆனந்தாக் கல்லூரி அணியை எதிர்த்து றிட்ச்மன் கல்லூரி அணி மோதவுள்ளது. நிகழ்வில் இலங்கை கிரிக்கெட் அணியின் சுழல் பந்து வீச்சாளர் றங்கன ஹேரத் பிரதம அதிதியாக கலந்து

# ஆஸி. அணித் தலைவரின் விசித்திரமான களவியூகம்



பாகிஸ்தானுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணித் தலைவர் மைக்கல் கிளார்க் அமைத்த களத்தடுப்பு சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளது.

பாகிஸ்தான்- ஆஸ்திரேலிய அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் போட்டி அபுதாபியில் நடந்து வருகிறது.

இதன் முதல்நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் இலக்குகளை எடுக்க முடியாமல் ஆஸ்திரேலிய பந்து வீச்சாளர்கள் திணறினர். இதனையடுத்து சில களவியூகங்களை மைக்கல் கிளார்க் அமைத்தார்.

அதாவது மிட்செல் ஜோன்சனை அழைத்து நேராக, அதாவது பந்து வீசும் பந்து வீச்சாளருக்கு நேராக நிற்க வைத்தது பலருக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. ஏனெனில், துடுப்பாட்டக்காரர்கள் பந்து வீச்சாளரின் கை நன்றாகத் தெரிவதற்காகத்தான் 'சைட் ஸ்க்ரீன்' வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலை சரியில்லை என்றால் துடுப்பாட்டக்காரர்கள் ஓடி வரும் பந்து வீச்சாளர்களைக் கூட நிறுத்துவதை நாம் பார்த்திருக்கலாம்.

நிலைமை இப்படி இருக்க துடுப்பாட்டக்காரருக்குத் தொந்தரவு செய்யும் விதமாக நடுவருக்கு நேராகப் பந்து வீச்சாளர் பந்து வீசும் திசையில் நேராக ஜோன்சனை கிளார்க் நிறுத்தியது சர்ச்சையை கிளப்பியுள்ளது.

இது குறித்து முன்னாள் ஆஸ்திரேலிய் அணித்தலைவர் ஆலன் போர்டர், 'இந்தக் களவியூகம் கிரிக்கெட் உணர்வுக்கு எதிரானது' என சாடியுள்ளார். (கு)

# 750 கோடி கேட்கிறது இந்தியா

இந்திய கிரிக்கெட் பயணத்தை பாதியிலேயே கைவிட்டதன் காரணமாக மேற்கிந்திய கிரிக்கெட் சபையிடம் ரூபா 750 கோடி இழப்பீடு கோரியுள்ளது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை.


இது குறித்து இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைச் செயலர் சஞ்சய் படேல் கூறும் போது, மேற்கிந்திய கிரிக்கெட் சபையிடம் ரூபா 750 கோடி இழப்பீடு கோரி கடிதம் அனுப்பியுள்ளோம். தொடரைக் கைவிட வேண்டாம். அவர்கள் நெருக்கடியிலிருந்து மீள நாங்கள் உதவுகிறோம் என்று பூலமுறை கேட்டுக் கொண்டும் தொடரை பாதியிலேயே கைவிட்டனர் என்றார்.

இந்த இழப்பீட்டு தொகை குறித்து மேற்கிந்திய கிரிக்கெட் சபை முடிவெடுக்க 2 வாரங்கள் கால அவகாசம் அளிக்கப்பட்டுள்ளதாகவும், முடிவெடுக்கவில்லையெனில் சட்ட ரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை எச்சரித்ததாகவும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இப்போதுள்ள கிரிக்கெட் சபைகளிலேயே நிதி நிலையில் மிகவும் மோசமாக உள்ள கிரிக்கெட் சபை மேற்கிந்திய சபை தான். இப்படியிருக்கையில் அவர்கள் எப்படி ரூபா 750 கோடி இழப்பீடு தொகை அளிக்க முடியும் என்று சஞ்சய் படேலிடம் செய்தியாளர்கள் கேட்டதற்கு, இதற்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஒன்றும் செய்ய முடியாது. எப்படியிருந்தாலும் இந்தத் தொகையை அவர்கள் கொடுத்தேயாக வேண்டும். தொடரிலிருந்து விலகிய போது எங்களிடம் அனுமதி கேட்டார்களா என்ன? என்று பதிலுரைத்தார் சஞ்சய் படேல். (கு)



# யூனுஸ்கானும் மிஸ்பாவும் அணிக்கு தேவையற்றவர்கள்



உலகக்கிண்ண போட்டியில் யூனுஸ்காலும், மிஸ்பாவும் இடம்பெறக் கூடாது என்று பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவர் யூசுப் கூறியுள்ளார்.

11ஆவது உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டி ஆஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தில் நடத்தப்படுகிறது. இந்தப் போட்டி அடுத்த ஆண்டு பெப்ரவரி 14ஆம் திகதி முதல் மார்ச் 29ஆம் திகதிவரை நடக்க இருக்கிறது. 2015 ஆம் ஆண்டுக்கான இந்த உலகக் கிண்ணப் போட்டியில் தற்போதைய பாகிஸ்தான் அணித் தலைவர் மிஸ்பா-உல்-ஹக்கும், யூனுஸ்கானும் இடம் பெறக்கூடாது என்று பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர் முகமது யூசுப் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது. 2011ஆம் ஆண்டு மொகாலியில் நடந்த உலகக் கிண்ணப் போட்டியின் அரை இறுதியில் இந்தியாவிடம் தோற்றதற்கு யூனுஸ்கான், மிஸ்பாவின் மோசமான துடுப்பாட்டம் தான் காரணம்.

அவர்களது துடுப்பாட்டம் மிகுந்த ஏமாற்றம் அளித்தது. சூழ்நிலைக்குத் தகுந்தவாறு இருவரும் விளையாடவில்லை.

இந்த இருவரும் 2015 ஆம் ஆண்டு நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டியில் இடம் பெறக்கூடாது.

இந்த இருவரையும் உலகக் கிண்ண அணியில் சேர்க்கக் கூடாது என்று தெரிவுக் குழுவிடம் பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் வலியுறுத்த வேண்டும். இளம் வீரர்களை உலகக் கிண்ண அணியில் தெரிவு செய்ய வேண்டும் எனக் கூறியுள்ளார். (கு)

# தென்னாபிரிக்கப் போட்டியில் களமிறங்கும் சச்சினின் மகன்

மும்பையை சேர்ந்த வோர்லி கிரிக்கெட் அணியில் உள்ள சச்சினின் மகன் அர்ஜுன், தென்னாபிரிக்காவில் உள்ள பள்ளி அணிகளுடனான போட்டியில் விளையாடுகிறார்.

வோர்லி கிரிக்கெட் அணி இன்று முதல் 15ஆம் திகதி வரை தென்னாபிரிக்காவில் உள்ள முன்னணி பள்ளி அணிகளுடன் விளையாடுகிறது.

இதில் வோர்லி கிரிக்கெட் அணி 45 ஓவர்கள் கொண்ட 10 ஆட்டங்களில் விளையாட திட்டமிட்டுள்ளது. இதில் 16 முதல் 18 வயது பிரிவு வோர்லி அணியின் தலைவராக இந்திய கிரிக்கெட் சகாப்தம் சச்சின் டெண்டுல்கரின் மகன் அர்ஜுன் இருக்கிறார்.

கடந்த ஆண்டு வோர்லி கிளப்பில் இடம் பிடித்து இருந்த அர்ஜுன், தென்னாபிரிக்க போட்டி தொடரில் அதிக ஓட்டங்கள் குவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (கு)



# ரெய்னாவுக்கு புதிய சிக்கல்

சூதாட்டம் பற்றி விசாரித்து வரும் நீதிபதி முத்கல், ரெய்னாவின் கடந்த காலம் குறித்து விசாரித்துள்ளதால், அவருக்குப் புதிய பிரச்சினை ஏற்பட வாய்ப்பு இருக்கிறது.

ஐ.பி.எல் சூதாட்டம் பற்றி ஒய்வு பெற்ற நீதிபதி முத்கல் நாளை அறிக்கை தாக்கல் செய்கிறார்.

கடந்த 2010 இல் ஆசியக் கிண்ணப் போட்டியில் பங்கேற்க இந்திய அணி, இலங்கை சென்றது. அப்போது தம்புள்ளவில் உள்ள ஒரு ஹோட்டலில் தங்கியிருந்தபோது, ரெய்னாவுடன் ஒரு பெண் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

இது குறித்து பத்திரிகையில் செய்தி வெளியாக, இலங்கை கிரிக்கெட் சபை, இந்திய கிரிக்கெட் சபையிடம் முறையிட்டது.

இதனை இந்திய கிரிக்கெட் சபை மறுத்தது. அந்தப் பெண் ரெய்னாவின் ஏஜென்ட் என்றும், ரெய்னாவின் உறவினர் ரித்திகா எனவும் கூறப்பட்டன. மேலும் சில வீரர்களுடன் விளம்பர ஒப்பந்தம் சம்பந்தமாக பேச வந்ததாகவும் கூறப்பட்டது.

அது மட்டுமல்லாது ரெய்னா சென்னை அணி வீரர் என்பதால், அப்போது இந்தியக் கிரிக்கெட் சபைத் தலைவராக இருந்த சீனிவாசன், இவ்விடயத்தை ஒன்றுமில்லாமல் செய்து விட்டதாகவும் செய்திகள் வெளிவந்தன.

இதனிடையே, 6ஆவது ஐ.பி.எல்., தொடர் சூதாட்டம் குறித்து உச்சநீதிமன்ற பரிந்துரையின் பேரில், விசாரித்து வரும் முத்கல் குழு இந்த இலங்கை விவகாரத்தையும் விசாரித்துள்ளது.

முத்கல் குழு விசாரணை குறித்து ரெய்னாவிடம் கேட்டபோது, 2010 சம்பவம் குறித்து பேச மறுத்துள்ளார். யாரும் தன்னிடம் விசாரிக்கவில்லை என்று கூறி நழுவியுள்ளார்.

நாளை தாக்கல் செய்யவுள்ள அறிக்கையில், இந்த விவகாரங்கள் இடம் பெறவுள்ளதால், ரெய்னாவுக்குச் சிக்கல் ஏற்படலாம். (கு)



# மண்சரிவு ஏற்பட்ட பகுதியை பார்வையிட செல்லாதீர்கள்!

## அரசு கோரிக்கை; நிதி மோசடியாளர்கள் குறித்து அவதானம் தேவை எனவும் எச்சரிக்கை

கொழும்பு, நவ. 2
மீரியபெத்த பகுதியில் மண் சரிவு அபாயம் இருப்பதால், மண்சரிவு இடம்பெற்ற பகுதியைப் பார்வையிடச் செல்வதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இந்த இடரைப் பயன்படுத்தி ஒருசில கும்பல்கள் நிதி வசூலிக்கும் மோசடிகளில்ஈடுபட்டுள்ளன. இதுகுறித்தும்மக்கள்விழிப்பாக இருக்கவேண்டும் என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் விசேட கூற்றொன்றை விடுத்து உரையாற்றுகையிலேயே அவர் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்கு உலக நாடுகளும், அரசசார்பற்ற அமைப்புகளும் முன்வந்துள்ளன. பலரும் உதவிப் பொருள் களுடன் அங்கு சென் றிருக்கின்றனர். இதற்கு நாம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். எனினும், முழுச் செலவையும் ஏற்பதற்குரிய சக்தி அரசுக்கு இருக்கின்றது.

உதவிகளை வழங்குவதற்கு முன்வருவோர் உரிய அதிகாரிகளை நாடவேண்டும். தற்போது இல்லாவிட்டாலும் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் கல்விச் செலவுக்காக புலமைப் பரிசில் தொகையை வழங்கலாம். அதேவேளை, பாதிக்கப் பட்ட இடத்தில் 320 பேரே இருந்தனர் எனக் கூறப்படுகின்றது. எனினும் பாதிக்கப்பட்டவர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள இடங்களில் ஆயிரத்து இருநூறு இற்கும் மேற்பட் டோர் இருக்கின்றனர். சிலர் நிவாரணங் களைப் பெறுவ தற் காக இவ்வாறு வந்துள்ளனர்.

பாதிக்கப் பட்ட மக்களின் போர்வையில் நிதி திரட்டும் மோசடியில் சிலர் ஈடுபட்டுள்ளனர். இதுபற்றி மக்கள் விழிப்பாக இருக்க வேண்டும்.

அப்பகுதியில் தொடர்ந்தும் மண்சரிந்து வருகின்றது. ஆகவே அப்பகுதிக்கு செல்வதை மக்கள் தவிர்த்துக் கொள்ளவேண்டும். அப்பகுதிக்குச் சென்று படம் எடுப்பதால் மீட்புப் பணிக்கும் தடை ஏற்படுகின்றது. இருப்பினும் மக்கள் பிரதிநிதிகளும் ஊடகவியலாளர்களும் அங்கு செல்லலாம் - என்றார்.

(கு-சி)


**பிரத்தியேக வகுப்புகள்**

வீட்டிற்கு வந்து Spoken English மற்றும் Basic Computer வகுப்புகள் எடுக்கப்படும். (ஆசிரியரால் கணினி எடுத்துவரப்படும்)
தொடர்பு: 072 186 7203

**அமெரிக்க அதிஸ்ட விசா- V2 Travels**

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?
நாளையுடன் (03-11-2014) பதிவுகள் நிறைவடைகின்றன
0771516537 0773867257 0776699892 0776697960

**தேவை**

பிரபல தொண்டு நிறுவனம் ஒன்று யாழ்ப்பாண நகரத்தில் முன்பள்ளிச் சிறுவர்களுக்கான பாடசாலை தொடங்குவதற்குப் பொருத்தமான வீடு ஒன்றைப் பெறவேண்டியுள்ளது. வசதிகளோடு கூடிய வீடொன்றை வாடகைக்குத் தர விரும்புவோர் தொடர்புகொள்ளவும். (சி.17279) (45.6.3)
தொடர்பு: 077 482 2198, 077 521 2608

**திருப்பதி பாலாஜி தரிசனம்**

உங்களுடன் நாமும் இணைவோம்
Lkr 2200/=
இந்தியாவுக்கு
சென்னை 23100/= மதுரை 17700/= திருச்சி 22100/= மும்பாய் 17700/=
NATION POPULAR TRAVELS & TOURS
Colombo 0114378117 0773083820 | Jaffna 0214920920 | Vavuniya 0244930830

**விற்பனைக்கு**

45நாள் நிரம்பிய நல்ல இன அல்சேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு.
(53616) (12.3.6) தொடர்பு: S.உதயன், 077 703 0587

**மணமகள் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1980 ஆம் ஆண்டு திருவாதிரை 3ஆம் பாதம் செவ்வாய் குற்றமற்ற (கிரகபாவம் 34) 6அடி உயரமுடைய யாழ்ப்பாணத்தில் நிரந்தர அரசாங்க தொழில் புரியும் பட்டதாரி மணமகனுக்கு, அழகான மணமகள் தேவை.
T.P : 078 914 7660
Jaffna2011@hotmail.co.uk

**வீடு வாடகைக்குத் தேவை**

கச்சேரி, அரியாலை, கொழும்புத்துறை பகுதியில் வீடு தேவை..
தொடர்பு: 077 367 9407 (58515) (4.6.3)

**Software / Website**

யாழ். மண்ணில் அனுபவமிக்கதோர் சேவை
உங்கள் வர்த்தக நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கான Software / Website இனை உங்கள் விருப்பத்திற்கும் தேவைக்கும் ஏற்ற வகையில் வடிவமைத்து வழங்குகின்றோம்.
கடந்த இரு வருடங்களில் அரச அலுவலகங்கள், பொது நிறுவனங்கள், அரச/தனியார் கல்லூரிகள், வழிபாட்டுத்தலங்கள் மற்றும் வணிக நிறுவனங்களை வெற்றிகரமாக கணனிமயப்படுத்தியுள்ளோம்.
AgoySoft Training Programme
Web Designing மற்றும் Web Development ஆகிய துறைகளில் தொழில் வாய்ப்பை விரும்புவோருக்கான பயிற்சி வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
Hotline : 77 430 8010 www.agoysoft.com/portfolio
AgoySoft (Pvt) Ltd.
011 328 8569 / 021 205 2393

**அனைவருக்கும் நவீன சகாப்தத்தின் நுழைவாயில்**

நவீன தொழில்நுட்பமும் கணினிப் பயன்பாடும் பற்றிய ஒரு நாள் இலவசக் கருத்தரங்கு
09.11.2014 ஞாயிறு 9.00 - 2.30
BCAS யாழ் வளாகத்தில் (16,பருத்தித்துறை வீதி.)

தலைப்புகள்
- புதிய தொழில்நுட்பங்களுக்கோர் அறிமுகம் Introduction to emerging technologies
- நவீன தொடர்பாடலின் பரிணாமவளர்ச்சி Evolution of communication
- கைப்பேசிப் பயன்பாடும் பாதுகாப்பும் Mobile application and security
- நவீன வாழ்வில் கணினியின் பங்கு The role of computer in modern life
- கணினி அமைப்பும் பிரயோகமும் Computer assembling & application
- சமூகவலைத் தளங்கள் பற்றிய விழிப்புணர்வு Awareness of social networks
- இணையம் மூலம் படங்களைப் பகிர்தல் Online photo & video sharing
- இணையம் வழி பொருள்கள் வாங்கல் Online shopping
- இணையத்தின் ஊடாகப் பணக்கொடுப்பனவும் பாதுகாப்பும் Online payments & security gateways
- தகவல் தொழில்நுட்பத்தைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துதல் How we have to use Technology with security

திரு.கி.யாதவராஜன் B.Sc. (Computer Eng.)
திரு.ச.திஷோபன் B.Sc. (Computer Eng.)
திரு.க.கேசிகன் B.Sc. (Computer Eng.)
திரு.பா.சபேஷன் B.Sc. (ICT)
திரு.க.உதயகுமார் B.E (Electronic & Communication Eng.)

ஆகியோரடங்கிய எமது விரிவுரையாளர் குழாத்தின் வழிகாட்டலில் விரிவுரைகளும் விளக்கங்களும் எமது தகவல் தொழிநுட்ப மாணவர்களால் (HND) வழங்கப்படும்.

அறிவுத்தேடல்/ஆர்வம் உள்ள எவரும் கலந்து பயன்பெறலாம்
மட்டுப்படுத்தப்பட்ட இருக்கைகளே உண்டு
நவம்பர் 4ஆம் திகதிக்கு முன் பதிவு செய்யவும்.
மேலதிக விபரங்களுக்கு நேரில் அல்லது 0777102131
அன்புடன் அழைக்கும்,
BCAS CAMPUS யாழ் வளாகம்.

குறுகிய நேரத்திலும் குறைந்த செலவிலும் நிர்மாண வேலைகளை செய்து கொள்ள...

**Smart Kings (Pvt) Ltd.**
ஸ்மார்ட் கிங்ஸ் (பிறைவேற்) லிமிட்



கட்டடங்கள் கட்டுவதற்கு அத்திபாரம் தோண்டுதல், காணி துப்புரவாக்குதல், கட்டடம் உடைத்தல், கிணறு, மலசல குழி, குளங்கள் தோண்டுதல், அண்டக் கிறவுண்ட் பிறேக்கர் மூலமாகவும் அனைத்து விதமான வேலைகளும் செய்து கொடுக்கப்படும். மணல், கல், ABC கிறவல் மணல் என்பனவும் வழங்கப்படும். JCB, Excavator, Roller, Wacker, Hilti, Concrete Mixer என்பனவும் மணித்தியால அடிப்படையிலும் வாடகைக்கு கொடுக்கப்படும்.
Hotline - 077 375 4040
Head Office: 684A, Colombo Road, Kurana/Negombo
148, Station Road, Jaffna. (Railway Station இற்கு முன்பாக)
Tel : 021 730 6099 Fax : 021 454 6699
Email : kuhan79@live.com

சிவமயம்
கோபுர தரிசனம் கோடி புண்ணியம்
**தென்னிந்திய தெய்வ தரிசனம்**
(கோயில்கள் சுற்றுலாத் தலங்கள் உள்ளடக்கம்)



தரிசனம் : 15 நாள்கள் — புறப்படும் திகதி : 14.12.2014

ஐம்பூதஸ்தலங்கள், ஆறுபடைவீடு, நவக்கிரக கோயில்கள், சிதம்பரம், சீர்காழி, மதுரை மீனாட்சி, உச்சிப்பிள்ளையார், ஸ்ரீரங்கம்,திருப்பதி, 22 புனித கிணறுகளில் நீராடல், சென்னை சீரடிபாபா, உட்பட 40 இற்கும் மேற்பட்ட கோயில்களையும், அண்ணா, எம்.ஜீ.ஆர். நினைவு சதுக்கங்கள், மெரினா கடற்கரை மற்றும் சுற்றுலாத் தலங்களையும் இந்தப் பயணத்தின் போது பார்வையிடலாம்.

உள்ளடக்கப்பட்டவைகள் :
இரு வழி விமானக்கட்டணம் (Return Air Ticket all taxes), உயர்தரத்திலான மூன்று நேர சைவ உணவு, காலை, மாலை தேநீர் மற்றும் குளிர்பானங்கள், சுத்தமான குடிதண்ணீர் (Minaral water), குளியலறை இணைந்த தங்குமிட வசதி, (Attached Bathroom with hot water) முழு சுற்றுலாவுக்கும் குளிரூட்டப்பட்ட சொகுசு பேருந்து, திருப்பதியில் VIP வரிசையில் சென்று சுவாமி தரிசனம் செய்ய ஏற்பாடு செய்து தரப்படும், இருவழி விமான நிலையத்துக்கான கட்டணம் (Airport transport up & down).
சென்னையில் பொருள்கள் கொள்வனவு செய்ய ஒரு நாள் ஒதுக்கப்படும்.
ik tourism T.P:077 1010 104
கருணாகரப்பிள்ளையார் கோயில் வீதி, (இளந்தாரி கோயிலடி)இணுவில் கிழக்கு, இணுவில்.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.11.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.